மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபது

# உதயன்


Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (28.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:032

# இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற மத்திய அரசு தாமதித்து வருகிறது!



## வேகம் போதாதென்று கருணாநிதி கவலை

சென்னை, டிசெம்பர் 28

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் தாமதம் காட்டி வருகின்றது. வேகமாக முடிவெடுக்க வேண்டிய மிக அவசரமான விடயத்தில் உரிய வேளையில் நடவடிக்கை எடுக்காமல் இருப் பது கவலைக்குரியது. நாம் படுகின்ற வேதனையை துடைக்கும் அளவுக்கு பிரதமர் தமது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு கவலை தெரிவித்து மத்திய அரசுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழக முதல்வர் மு.கருணாநிதி.

நேற்று இங்கு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்குழுக் கூட்டத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் கருணாநிதி மேலும் தெரிவித்ததாவது:

மிக முக்கியமாக இன்றைக்கு நாம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை, இலங்கையிலேயே செத்துக் கொண்டிருக்கின்ற தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய பிரச்சினை. அவர்கள் பாதிக்கப்பட்ட

(20 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் ஷெல் வீச்சு; ஒரு பெண் பலி! மற்றவர் கால்களை இழந்தார்!!

வவுனியா, டிசெ.28

இரணைமடு மற்றும் இயக்கச்சி பகுதிகளில் படையினர் நடத்திய எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் இளம் பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் பத்து பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டம் இயக்கச்சிப் பகுதியில் நேற்று நண்பகலில் ஓலை வெட்டச் சென்ற மக்கள் மீது படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந் துள்ளனர்.

கொல்லப்பட்டவர் தவமலர் (வயது24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அஜந்தா (வயது18) மற்றும் பொன்னம்பலம் (வயது42) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். காயமடைந்தவர் களில் அஜந்தா இரண்டு கால்களையும் இழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம், இரணைமடு மக்கள் குடியிருப்புகளை இலக்குவைத்து விமானப் படையினர் நடத்திய தாக்குதல் களில் எட்டு, பொதுமக்கள் காயமடைந்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை தற்காத்துக் கொள்வதற்காக நாம் வீராவேசத்துடன் தொடர்ந்து போராடுகிறோம்

### அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



தமிழ்நாடு, டிசெ.28

கிளிநொச்சியைப் பிடிக்க சிங்களப் படையினர் விடாப்பிடியாக முயற்சிகளை மேற்கொள்கின்றனர். கிளிநொச்சியை தற்காத்தே ஆக வேண்டும் என்று புலிகள் இயக்கம் வீராவேசமாகப் போராடுகின்றது. இதனால் கிளிநொச்சி நகரமே போர்க்களமாக காட்சியளிக்கின்றது. -

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடே சன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'குமுதம்' வார இதழுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே நடேசன் இப்படித் தெரிவித் துள்ளார்

நடேசன் தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கே: கிளிநொச்சி நகரத்தை நான்கு முனைகளில் இருந்தும் தாக்கும் இராணுவத்தின் முன்னனேற்றம் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டதாக செய்திகள் வருகின்றன தற்போது அங்கு நிலைவரம் எவ்வாறு உள்ளது?

ப: கிளிநொச்சியைப் பிடித்தே தீருவதென்று சிங்களப் படைத்தலைமை விடாப்பிடியாக முயற்சிகளை மேற்கொள்கிறது. கிளிநொச்சியைத் தற்காத்தே ஆக வேண்டும் என்று புலிகள் இயக்கம் வீராவேசமாக போராடுகின்றனர். இதனால் கிளிநொச்சி நகரமே போர்க்களமாக காட்சி தருகிறது. ஒரு முனையில் தாக்குவதால் பயனில்லை; பல முனைகளில் களங்களைத் திறந்து ஒரே சமயத்தில் தாக்குவதன் மூலம் நகரைப்பிடிக்கலாம் என சிங்களப்படைகள் கருதியிருந்தன. சிங்களப்படையின் இந்த வியூகத்தையும் புலி வீரர்களும் வீராங்கனைகளும் இப்போது முறியடித்துவிட்டனர்.

பெருந்தொகை சிங்களப்படைகள் கொல்லப்பட்டதால் சிங்கள அரசும் அதிர்ந்து போயுள்ளது. ஆனால் அது தனது

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் 5 தடவைகள் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சிறுவர்கள் காயமுற்றனர்

வவுனியா, டிசெ.28

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் , மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப் படையினர் நேற்று ஐந்து தடவைகள் நடத்திய தாக்குதலில் 2 சிறுவர்கள் உட்பட மூவர் காயமடைந்தனர். வீடுகள் பலவும் சேதம் அடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று நண்பகல் 12 மணியளவிலும் பி.ப. ஒருமணியளவிலும் பின்னர் மூன்று தடவையுமாக சிறிலங்காவான்படையின் கிபிர் மற்றும் மிக்-27 ரக விமானங்கள் ஐந்து தடவைகள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத் தாக்குதலில் ஒன்பதாம் வட்டாரத்தைச் சேர்ந்த சத்தியசீலன் சத்தியராஜ (வயது-17), சு.விதுசாயினி (வயது-10) மற்றும் செல்வராஜா செல்வரஞ்சன் (வயது-04) ஆகியோர் காயமடைந்துள்ள னர்.

சிறிலங்காப் படையினரின் நேற்றைய தாக்குதலினால் புதுக்குடியிருப்பு வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது. மேலும், முல்லைத்தீவு நகர் மீதும் அதனை அண்டிய கிராமமான சிலாவத்தை மீதும் சிறிலங்காப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடத்தப்பட்ட இத்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கூடும் புதுக்குடியிருப்பில் விமானத்தாக்குதலாம்

கொழும்பு, டிசெ.28

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் இரகசிய கூட்டங்களை நடத்தும் இடத்தை இலக்கு வைத்து, புதுக்குடியிருப்புக்கு தென்கிழக்கே ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை ஜெற் விமானங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் அடிக்கடிநடமாடும் பகுதிகளில் நேற்றுக் காலை 8.45 மணிக்கு தாக்குதல் நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் ஜனக நாணயக்கார கூறினார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீரூற்று, சிலாவத்தைப் பகுதிகளும் தம்வசம் என்கின்றனர் படையினர்

கிளிநொச்சி, டிசெ.28

முல்லைத்தீவு நகரை அண்டிய தண்ணீரூற்று, சிலாவத்தை ஆகிய இடங்களை இராணுவத்தினர் கைப்பற்றி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

கிளிநொச்சி நகரை நோக்கிய இராணுவத்தின் நகர்விலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

இதேவேளை-

முல்லைத்தீவு நகருக்கு தென்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மோதல் காரணமாக சிலாவத்தை, மாஞ்சோலை ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி விட்டதாக சுயேச்சையான தகவல்கள் தெரிவித்தன.

(அ-02)

## தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச அரசுகள் அங்கீகரிக்கக் கோரி தமிழகத்தில் தீர்மானம்

### விடுதலைச் சிறுத்தைகளின் மாநாட்டில்

சென்னை, டிசெ.28

தமிழீழ தேசிய இனத்தின் இறையாண்மையை தமிழர்கள் மீண்டும் பெறுவதற்கு, தமிழீழ மக்களுக்கு அதன் வழி நிலையான உறுதியான அமைதி வாழ்வு கிடைக்க இந்திய அரசும், உலக நாடுகளின் அரசுகளும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் விடுதலைச்சிறுத்தைகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகளின் எழுச்சிப்பாசறை தொடக்க

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாவகச்சேரி சுகாதாரப் பிரிவின் எயிட்ஸ் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.28

சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவினர் நடத்திய சுகாதார விழிப்புணர்வு வினா விடைப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குபற்றியோரில் சரியான விடைகள் 212 பேர் எழுதியமையால் குலுக்கல் மூலம் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சுகாதார வைத்திய அதிகாரி ம.பரமேஸ்வரன் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் தி.கிளின்டஸ் மற்றும் பொது மக்கள் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிர்ஷ்டசாலிகள் தெரிவு இடம்பெற்றது. விவரம் வருமாறு:-

திருமதி உ.சகிலறோகினி- சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம், இ.பிரிந்தன் - சரசாலை தெற்கு, த.பீதாம்பரம் - சரசாலை பொது நூலகம்.

ஆறுதல் பரிசுகள்

சின்னத்தம்பி சாந்தினி - மீசாலை கிழக்கு, ரி.பிரபாகரன் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சுப்பிரமணியம் சுவேனியா- மீசாலை ஸ்ரீ கணேசா வித்தி., சின்னத்தம்பி சாந்தினி - கச்சாய் அ.த.க. பாடசாலை, காரளசிங்கம் நிசாந்தினி - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கதிரேசு பாஸ்கரன் - சாவகச்சேரி பிரதேச சபை, த.தவணிரஜன் - மிருசுவில் படித்த மகளிர் குடி யேற்றத் திட்டம், ரி.சுப்பிரமணியம் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, மாதுரு பாகன் சரோஜாதேவி - வீடமைப்புத் திட்டம் நாவற்குழி, சோமசுந்தரம் பாலகிருஷ்ணன்- சாவகச்சேரி பிரதேச சபை.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர் வரும் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்படுமென தெரிவிக்கப் பட்டது. (202-207)

## நல்லூர் வடக்கில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.28

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் 'மக்களை நோக்கிய தொடர் நிகழ்வு' என்னும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நல்லூர் வடக்கு, கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆயுள்வேத வைத்திய நிபுணர்களின் நீரிழிவு, இரத்த அழுத்தம் சம்பந்தமான பரிசோதனைகளும் ஆலோசனைகளும் மற்றும் ஏனைய மருத்துவ சேவைகளும் கட்டட விண்ணப்பம் தொடர்பான விடயங்கள், ஆதனவரி விடயமும், பெயர் மாற்றமும் இப்பகுதி அபிவிருத்தி பற்றிய ஆய்வு போன்ற பல சேவைகள் வழங்கப்படவுள்ளன. (அ-02-204)

# பெண்ணின் மரணத்தில் சந்தேகம் சடலத்தைப் புதைக்க உத்தரவு

கெருடாவில், டிசெ.28

அதிக இரத்தப் போக்கால் மரணமான பெண் ஒருவரின் சடலத்தை எரிக்காமல் புதைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

அப் பெண்ணின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்தே இந்த உத்தரவை யிட்டுள்ளார்.

பத்தனை, அல்வாயைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மனோரஞ்சித ஈஸ்வரி கடந்த 20 ஆம் திகதி அதிக இரத்தப் போக்கால் மரணமானதாகக் கூறப்பட்டது.

இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பிரேத பரிசோதனையின் பின் மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார். இதையடுத்தே மேற்படி சடலத்தை புதைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இம் மரணம் குறித்து மேலதிக விசாரணை மேற்கொள்ளுமாறும் நெல்லியடிப் பொலிசாருக்கு நீதிபதி பணித்துள்ளார். (202-253)

## தனித்து வாழ்ந்த வயோதிபர் வீட்டினுள் சடலமாக மீட்பு

கெருடாவில்,டிசெ.28

தனித்து வாழ்ந்து வந்த வயோதிபர் ஒருவர் பூட்டிய வீட்டிற்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவிண்டில், கரணவாயைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு (வயது-81)என்னும் வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 20 ஆம் திகதி இரவு அவர் வீட்டைப் பூட்டிவிட்டு உறங்கியுள்ளார். மறுநாள் இவர் வெளியில் வரவில்லை. வீட்டுக் கதவும் திறக்கப்படவில்லை எனக் கண்ட அயலவர்கள் கரணவாய் வடக்கு கிராம அலுவலருக்கு இது குறித்து அறிவித்தனர்.

கிராம அலுவலர் கந்தசாமி, பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிபதி திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் ஆகியோர் குறித்த வயோதிபரின் வீட்டுக்குச் சென்று கதவை உடைத்தனர்.உள்ளே இறந்து கிடந்த வயோதிபரின் சடலம் மீட்கப்பட்டது.

மாவட்ட வைத்திய அதிகாரி சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்ததின் பின்னர் அதனை உறவினரிடம் ஒப்படைக் குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (202-253)

## வடமராட்சியில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.28

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள ஜே.சி மெடிக்கல் கிளினிக்கில் நடைபெறவுள்ளது.

சகல விதமான வைத்திய சேவைகளும் மருத்துவ முகாமில் இடம்பெறும் என்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


**பாடசாலைகளுக்கான வான் சேவை**

யாழ்.நகரப் பகுதிப் பாடசாலைகளுக்கான போக்குவரத்து வான் சேவை நாச்சிமார் கோவிலடியிலிருந்து (05.01.2009) ஆரம்பமாகின்றது. ஆகவே அதனை அண்டிய 3 கிலோமீற்றர் சுற்றாடலிலுள்ள மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும். வே.சிவகுமார்,

இல.219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(81257) T.P:- 0777 061497, 0779622406





## மரண அறிவித்தல்

### கந்தையா பாலசுப்பிரமணியம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது பண்டாரவளையில் வசித்தவருமாகிய கந்தையா பாலசுப்பிரமணியம் நேற்று (27.12.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் நந்தகுமாரின் (லண்டன்) பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பண்டாரவளையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்:
சகோதரர்கள்.


**வீடு, வளவு, தோட்டக் காணி விற்பனைக்கு**

சிறுப்பிட்டி தெற்கில் தம்பு சேனாதிராயருக்குச் சொந்தமான நல்ல சூழலில் அமைந்த நன்நீர்க் கிணற்று வசதியுடனான வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணியும், சாளம்பையடி என்னும் 7 1/2 பரப்பு தோட்டக்காணியும் (கிணற்றுப் பங்குடன்), காளையன் புலம் என்னும் 28 1/4 பரப்பு தனிக்கிணற்றுடன் கூடிய காணியும் உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு:- த.நந்தகுமாரன் (ஆசிரியர்)
முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்.
T.P:- 060 221 4931

**விற்பனைக்கு**

கல்வி நிலையத்துக்குகந்த தளபாடங்களும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு.
61, மணல்தறை லேன்,
(81259) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

PIRIMA சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
BAHIRA புறோயிலர் குஞ்சுகள் 29.12.2008 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ★ ராஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ கோல்டன் பாம்- பருத்தித்துறை.
- ★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம்.
- ★ P. ரவி-சாவகச்சேரி.
- ★ சிற்றிபாம் றேடர்ஸ்- கல்வியங்காடு.
- ★ திருமகள்-சிவலிங்கப்புளியடி.

**எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்**

முன்பள்ளிக்கான புதிய மாணவர்கள் 29.12.2008 திங்கட்கிழமை முற்பகல்10 மணி முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை முன்பள்ளி ஆசிரியர் குழாத்துடன் 29.12.2008 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்
EVER SHINE KIDS WORLD
123, BROWN ROAD,
(81258) JAFFNA.


## மரண அறிவித்தல்

### நாராயணபிள்ளை ரதிகலா



உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை - சொர்ணகாந்திமலர் தம்பதியரின் பாசமிகு புதல்வியான ரதிகலா 25.12.2008 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சொர்ணகலா (ஆசிரியை, தொண்டைமானாறு வீ.ம.வி), ரவீந்திரன் (சுவிஸ்), சசிகலா, நதிகலா (கனடா) ஆகியோரின் சகோதரியும் சுபாஸ்கரன் (அரைக்கும் ஆலை), உத்தரகுமார் (கனடா), சிவரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ரம்யா, மாதங்கி, அம்ஷிகா, லதுர்சிகன் ஆகியோரின் சிறிய தாயும் வசந், கேசானி ஆகியோரின் அத்தையும் நேசம்மாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(28.12.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுப்பிட்டி வடக்கு,
கம்பர்மலை.
தொ.பே: 021 226 4538

தகவல்: தந்தை-
வ.நாராயணபிள்ளை
(குட்டி - முன்னாள் சாரதி, இ.போ.ச, பருத்தித்துறை சாலை )


கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
You are Safer with the Leader

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி தந்த கண்ணீரும் காயங்களும் ஆறாத வடுக்களாய் இன்னமும் தொடர்கின்றன

தென்னாசிய நாடுகளின் கரையோரங்களில் மனிதப் பேரவலத்தை உண்டு பண்ணிய 'சுனாமி' அனர்த்தம் நிகழ்ந்து (26.12.2004) நான்காண்டுகள் உருண்டோடி விட்டன. இந்நிலையில் சுனாமியின் அதிக தாக்கத்திற்குள்ளான யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் உள்ள தும்பளை கிழக்கு மக்களின் மன ஆதங்கங்களை 'உதயன்' இங்கு வெளிப்படுத்துகிறான்.

## "சில தொண்டு நிறுவனங்கள் சுனாமித் திட்டத்தில் ஏனோ தானோ என்று செயற்படுகின்றன"

சுனாமி வந்து நான்கு வருடங்கள் கடந்து விட்டன. தும்பளை கிழக்குப் பகுதி கடலை அண்மித்த பிர தேசமாக இருந்ததால், சுனாமியின் தாக்கம் இங்கு அதிக மாகவே இருந்தது. எமது உறவினர்களும், நண்பர்களும், கண்ணுக்கு முன்னாலேயே கடலலையால் காவு கொள் ளப்பட்ட சோகத்தை நாங்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் இத்தனை உயிர்களை சுனாமியால் நாங் கள் இழந்தபோதும், சில நன்மைகளும் கிடைக்கவே செய் துள்ளன.


தெய்வேந்திரம் மதிவாணன்
தலைவர், கடற்றொழிலாளர் சங்கம், தும்பளை கிழக்கு

சுனாமி வருவதற்கு முன்னர் தும்பளை கிழக்குப் பகு தியில் விரல் விட்டு எண்ணக் கூடியளவுக்கே -ஓரிரண்டு- கல்வீடுகள் இருந்தன. அனேகமானோர் மண்வீடுகளில்தான் வசித்து வந்தனர். எம் முடைய தொழிலுக்கும், இந்தப் பகுதி யில் உள்ள 'சுவாத்தியத்துக்கும்' மண் வீடுகள் வசதியானவைதான். எனினும் சுனாமி, கடும் மழை போன்றவற்றுக்கு முன்னால் இவ்வா றான மண்வீடுகள் தாக்குப் பிடிக்கக் கூடி யவை அல்ல.

அத்தோடு போர்ச்சூழல் ஏற்பட்ட பிறகு கடற்றொழிலாளர்களின் வருமானம் வெகு வாகக் குறைந்துவிட்டது. இதனாலும் பலர் கல்வீடுகளைக் கட்டவில்லை. முன்னரெல்லாம் கடற் பகுதிகளில் அடிக்கடி சண்டை நடக்கும். அப்போதும் பாதிக்கப்படுவது நாங்கள் தான். கட லில் சண்டை நடக்கும் போதெல்லாம் நாங்கள் வீடுகளை விட்டு ஓட வேண் டியிருந்தது. மண்வீடென்றால் கவலைப்படாமல் ஓடலாம்.

இந்நிலையில் சுனாமி அலைகளால் எங்கள் கிராமம் முற்றாக விழுங்கப்பட்ட பின்னர் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் சிதைந்துபோன எமதுபகுதியைப் புனரமைக்க முன் வந் தன. ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு வகைகளில் தத்தமது செயற்பாட்டு நோக் கிற்கு அமைய உதவிகளை வழங்கின. நீர்வசதி, மின்சார வசதி, கற்றல் உபகரணங்கள், சுயதொழில் உபகரணங்கள் என்பன போன்ற உதவிகளை வழங்கிய நிறுவனங்கள் பாதிக் கப்பட்ட அனைவருக்கும் கல்வீடுகளை அமைத்துத் தரவும் முற்பட்டன.

அந்த நிறுவனங்களின் பெருமுயற்சியால் எமது கிராமத்தில் இப்போது மண்வீடுகள் இல்லாமற்போய், கல்வீடுகளால் எமது கிராமம் மெருகு பெற்று நிற்கின்றது. கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம், சேவாலங்கா நிறுவனம் போன்றவை தமது பங்களிப்பினை உரியகா லத்தில் நிறைவேற்றியுள்ளன. எனினும் இன்னொரு தொண்டு நிறுவனத்தால் கையேற் கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் இதுவரை முழுமை பெறவில்லை.

ஆரம்பத்தில் முழுமுனைப்புடன் அந்த நிறுவனத்தினர் செயற்பட்டாலும், காலப் போக்கில் வீடுகளை அமைப்பதில் அவர்கள் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக் கின் றனர். இதே போல இரண்டரை லட்சம் ரூபா வீட்டுத்திட்டமும் பூர்த்தியாகவில்லை. இத னால் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிலகுடும்பங்கள் அனர்த்தம் நிகழ்ந்து நான்கு வரு டங் கள் உருண்டோடிய நிலையில் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களிலேயே தமது வாழ்க் கையைக் கழிக்க வேண்டியுள்ளது.

இதைவிட சுனாமி வேலைத்திட்டங்களில் ஒன்றாக எமது பகுதி மக்களின் சில தேவை களை இலகுபடுத்துவதற்காக தும்பளை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்திற்கென ஒரு மோட்டார் சைக்கிளும், கணனித் தொகுதி ஒன்றும் வேறொரு நிறுவனத்தால் அன் பளிப்பு செய்யப்பட்டிருந்தன. எனினும் மோட்டார் சைக்கிளின் பதிவை எமது சங்கத்தின் பெயரில் மாற்றித்தருமாறு கோரி மோட்டார் சைக்கிளையும், கணனியையும் அந்த நிறு வனத்தினரிடம் மீளக்கையளித்தோம். அவ்வாறு கொடுத்து இருவருடங்களுக்கும் மேலாகி விட்டது. ஆனால் இதுவரை மோட்டார் சைக்கிளின் பதிவு மாற்றப்பட்டு எம்மிடம் ஒப்ப டைக்கப்படவில்லை. அது தொடர்பான விவரங்களைக்கூட அந்த நிறுவனம் எமக்குத் தெரிவிக்கவில்லை. எமக்கென வழங்கப்பட்ட பொருள்களை ஒரு தொண்டு நிறுவனம் இத்தனை நாள்களாக மீளத்தராமல் இழுத்தடிப்பது ஏன் என்று எங்களுக்குப் புரிய வில்லை. இது தொடர்பாக ஊடகங்களில்கூட எமது வேதனையை வெளிப்படுத்தி இருந் தோம். அதற்கும் பயனில்லை.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்ததைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. எனினும் காலக்கிரமத்தில் சுனாமி நிவாரணம் 'சமுர்த்தி நிவாரணமாக' மாற்றப்பட்டு விட்டது. இதனால் எமக்கு வழங்கப்படும் நிவார ணத்தின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டது. இப்போது கிழமையில் 3 அல்லது 4 நாள்கள்தான் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றோம். இந்நிலையில் இந்த சமுர்த்தி நிவாரணம் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. எனவே எங்களுக்கு முழுமையாகத் தொழில் செய்ய அனுமதி பெற்றுத்தாருங்கள், அல்லது எமக்குரிய நிவார ணத்தையாவது உரிய அளவில் பெற்றுத்தாருங்கள் என சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டி நிற்கின்றோம்.

## "சுயநினைவு இல்லாமல் 'கோமா' நிலையில் 3 மாதங்கள் இருந்தேன்"


நாகலிங்கம் சயந்தினி,
தும்பளை கிழக்கு.

அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. வீட்டிலை என் னைத்தவிர வேறை ஒருத்தரும் இல்லை. அப்பா வேலைக்குப்போட்டார். அம்மாவும், என்ர சகோதரர் களும் கிறிஸ்மஸுக்காக கிளிநொச்சியில இருக்கின்ற சொந்தக்காரர் வீட்டுக்குப் போட்டினம். நான் சட்டி- பானை கழுவிக் கொண்டிருந்தன்.

திடீரெண்டு ஏதோ பெரிய இரைச்சலொண்டு கேட்டுது. கடற்கரைப்பக்கமாக 'செயின்புளொக்' போகுதெண்டு நினைச்சிட்டு, நான் என்ரவேலை யிலே கண்ணாயிருந்தன். அப்ப ஒரு அண்ணா அதால ஓடிவந்து 'கடல் பெருக்கெடுத்து வருகுது. ஓடு!' எண்டு சொல்லிப்போட்டு ஓடினார். எனக்கு அதைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது. 'கடல் எங்கையாவது பெருக்கெடுக்குமோ?' எண்டு நினைச்சுக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால், என்னை மூடுற மாதிரி கடல் தண்ணி வந்து கொண்டிருந்தது. எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேலை. நான் அப்பப்பா வையும் கூட்டிக்கொண்டு, கடலுக்குப் பயந்து ஓடிக் கொண்டிருக்கிற சனத்தோட சேர்ந்து மந்திகை ஆஸ்பத்திரியிலபோய் நிண்டன். வேலைக்குப்போன அப்பாவுக்கு என்ன நடந்ததோ? எண்டு ஒரே நெஞ்சிடியாக் கிடந்தது.


அப்ப சுனாமியால செத்த ஆக்களை ஒரு 'டிரக்டரில' ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திச்சினம். எனக்கு ஒரே அந்தரமாய் போட்டுது. எட்டிப் பாத்தன். செத்த ஆக்களுக்குள்ள எங்கட மாமா, அத்தை, மச்சாள் எண்டு எங்கட சொந்தக்காரர் ஏழுபேர்! ஏழுபேரும் ஒரே குடும்பம்! அதில யிருந்து என்னவெண்டே தெரியாமல் நெடுக எனக்குச் சுனாமி பற்றியும் எங்கட மாமா, அத்தை பற்றியும் ஒரே யோசினை! அப்பிடி யோசிக்க, யோசிக்க ஏதோ வருத்தம் எனக்கு வந்திட்டுது. சாப்பிட முடியேலை. கை காலெல்லாம் சூம்பிப் போச்சுது. கிட்டத்தட்ட ஒரு நடைப்பிணம் மாதிரி ஆகிட்டன். வீட்டுக்காரர் அழுது குளறிக்கொண்டு என்னை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில சேர்த்தினம். அங்க நான் சுயநினைவு இல்லாமல் 'கோமா' நிலையில 3 மாதங்கள் இருந்தன். நான் தப்ப மாட்டன் எண்டு டொக்டர்மாரும் சொல்லிப்போட்டினம். வீட்டுக்காரர் செத்தவீடு செய்யாத குறை யாய் ஒரே அழுகை. என்னைக் காப்பாத்த லட்சக்கணக்கில செலவழிச்சினம். பிறகு எப்பிடியோ மெல்ல மெல்ல நான் சுகமாயிட்டன். நான் தப்பினது கடவுளின்ர செயலெண்டுதான் ஊரில இருக்கிறவையும், என்ர அம்மா, அப்பாவும் சொல்லுகினம். இப்ப நான் பழையமாதிரி வந்திட்டன். மற்ற எல்லாரையும் மாதிரி செயற்படமுடியுது. சுனாமி நினைவாக பாட்டுக்கூட பாடப்போறன். எண்டாலும் சுனாமியை நினைக்க இப்பவும் ஒரு அந்தரம் இருக்கத்தான் செய்யுது.

## "தொண்டு நிறுவனங்களை நம்பி கையிலிருந்த காசையும் தொலைச்சுப்போட்டம்"


தேவராசா மகாராணி,
தும்பளை கிழக்கு.

எங்கட வீடு கடற்கரைக்கு வலு கிட்டவா இருக்கு. அதால சுனாமி அடிச்சு எங்கட வீடு தூள் தூளாப் போட்டுது. பிறகு ஒரு தொண்டு நிறு வனத்தின்ர உதவியால வீடுகட்டத் தொடங்கினம். மேல் மட்டம் மட் டும் கல்லு வைச்சாச்சு. அப்பதான் திரும்பவும் சண்டை தொடங்கிச் சுது. அதுக்குப்பிறகு திடீரெண்டு ஒருநாள் எங்கட வீட்டை மூடி 'பண்ட்' (மண்ணாலான பாதுகாப்பு அணை) போட்டிட்டாங்கள். பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடுமெண்டு சொல்லுவினம். அதேமாதிரி எங் களுக்கு இப்பிடியொரு நிலை. முகா மிலையும் எவ்வளவு காலம் அகதியாய் இருக்கி றது!

பிறகு அந்த நிறுவனக்காரர், வேறையொரு காணி புதிசா வாங்கி, அதில முதல் கட் டின அளவு வீட்டை எங்கட காசில கட்டிக் காட்டினால் பிறகு மிச்சத்துக்கு தாங் கள் காசு தாற மெண்டு சொல் லிச்சினம். அதை நம்பி இப்ப புதி சாக் காணி வாங்கி முதல் கட்டின அள வுக்கு எங்கட காசைப் போட்டு திரும்பவும் வீட்டைக் கட்டிப் போட்டம். ஆனா இப்ப அந்த நிறுவனக்காரர் இதை முடிச்சுத் தாற மாதிரி இல்லை. இவ் வளவு நாளும் எங்க ளுக்கு உதவி செய்ய வந்த நிறு வனம் எண்டு ஒண்டும் சொல் லாமல் இருந்தம். ஆனா எவ் வளவு காலத்துக்குத்தான் பொறுமையா இருக்கிறது? அதுதான் இப்ப சொல்றம். வீடு கட்டி முடியுமட்டும் கொட்டில்ல தான் இருக்க வேணும் என்ர மகனுக்கும் இதே நிலைதான். அவனும் இப்பிடித் தொண்டு நிறுவனக்காரரை நம்பி,கையில இருந்த கசையும் துலைச்சுப்போட்டு நிக்கிறான். ஏன் எங்களுக்கு மட்டும் இப்பிடியொரு நிலை?


கட்டி முடிக்கப்படாமல் உள்ள வீடுகளில் ஒன்று.

## "நான்கு வருடங்கள் கழிந்தும் விமோசனம் அற்றவர்களாக வாழ்ந்து வருகிறோம்"

நாங்கள் நான்குபேர் கொண்ட குடும்பம். என்னுடைய கணவர் கடற் றொழிலுக்கும், மேசன் வேலைக்கும் மாறி, மாறிச் செல்வார். நாம் சுனாமி யால் பாதிக்கப்பட்டபோது, எங்களுக்கு வீடுகட்டித்தர தொண்டு நிறு வன மொன்று முன்வந்தது. அவர்கள் வீடுகட்டுவதற்குத் தேவையான செலவினைப் பட்டியலிட்டு, அதன்படி கட்டம், கட்டமாக பணக்கொடுப் பினைச் செய்தார்கள்.

அதன்படி எங்களுடைய வீட்டுவேலை 2005 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றம், விலைவாசி உயர்வு, கட்டடப்பொருள்களுக்கான தட்டுப்பாடு என் பன காரணமாக ஆரம்பத்தில் அவர்கள் செய்தபட்டியலை விட வும் வீடு கட்டுவதற்கு அதிகளவு பணம் தேவைப்படுகின்றது; உதாரணமாக 2005 ஆம் ஆண்டு 600 ரூபாவுக்கு சிமெந்தினைப் பெற முடிந்தது. எனவே வீட்டுக்கான செலவு மதிப்பீட்டின்படி இன்றுவரையும் 600 ரூபா வீதமே சிமெந்துக்குமென வழங்கப் படுகின்றது. ஆனால் இன்று 1200 ரூபாவுக்குக்கூட சிமெந்தி னைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதேபோலவே கம்பி, கல், ஓடு, என்பனவெல்லாம் முன்னரைக்காட்டி லும் பலமடங்கு அதிகரித்த விலையிலேயே கிடைக்கின்றன. இத னால் மேல தி கமாக எங்க ளு டை ய பணத்தையே செலவிட வேண் டியுள்ளது. எங்களு டைய வீடுதானே எங்கள் பணத்தைச் செலவிட்டாவது வீட் டைக் கட்டி முடிக்கலாமென்றாலும் கட்ட டப் பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவ தால் அதுவும் சாத்தியமில்லை. அத்தோடு எமக்குரிய மிகு திப்பணத்தைத் தருவதிலும் குறித்த நிறுவனம் ஏனோ, தானோ வென்ற ரீதியிலேயே நடந்து கொள்கின்றது. அண்மையில் 'நிஷா' என்ற புயலும், மழையும் எங்களை இன் னும் வதைத்து விட்டன. எங்க ளுடைய வீடு கட்டி முடிக்கப்படாமல் இருப்பதால்- சற்றுப்பதிவான-தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீட்டிலேயே தங்கி இருக்கின்றோம். ஆனால் அந்த வீட் டுக்கு கடும் மழையைச் சமாளிக் கும்திறன் இல்லாததால், உள்ளே வெள் ளம் புகுந்துவிட்டது. இதனால் மழை ஓய்ந்து, வெள்ளம் வடியும் வரை எங்களது உறவினர் வீட்டிலேயே தஞ்சமடைந்து இருந்தோம். உயரமான அத்திவாரத்தோடு அமைக்கப்பட்டுவரும் எங்களது புதிய வீட்டின் கட்டட வேலைகள் பூர்த்தியாகி இருந்தால் இவ்வளவு மழைக்கு நாங்கள் கஷ்டப் பட்டிருக்கத் தேவையில்லை. சுனாமி வந்து நான்கு வருடங்கள் கழிந்தும் விமோசனம் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகிறோம்.


திருமதி. ஜெயக்குமார் மித்ரா
தும்பளை கிழக்கு

சந்திப்பும் படங்களும்: ஒளண்யன், சுந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு' என்னும் தொனிப்பொருளில் நேற்று ஆரம்பமான தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சியிலும் மற்றும் களியாட்ட விழாவிலும் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த படம் காண்பிக்கும் கருவி, நீரியல் உயர்த்தி, கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் இயந்திர மனிதன், கண்காட்சியில் பார்வையாளரைக் கவர்ந்த பறவைகள் என்பவற்றை முதல் நான்கு படங்களில் காணலாம்.

நேற்று நடைபெற்ற கலைநிகழ்வு ஒன்றினை ஐந்தாவது படத்திலும் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# கண்காட்சியும் களியாட்ட விழாவும் யாழ்.நகரில் நேற்று ஆரம்பமாகின

யாழ்ப்பாணம்,டிசெ.28

'யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு' என்ற தொனிப்பொருளுடனான தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சியும் களியாட்ட விழாவும் நேற்று யாழ்.நகரில் ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பமான இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை வரை நடைபெறும்.

யாழ்.மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சிகள் ஆரம்பமாகின.

கல்வி மற்றும் தொழில்சார் கண்காட்சிகளை நேற்றுக் காலைமுதல் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிட்டனர்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலைமுதல் 'வடக்கின் தாரகை' பாடகர் தெரிவுப் போட்டி ஆரம்பமாகி நடை பெற்றது. இளைஞர், யுவதிகள் இதில் கலந்துகொண்டனர். அத்துடன் இன்னிசை நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

தொழில்சார் கண்காட்சியில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பல்வேறு வர்த்தக நிறுவனங்களின் காட்சியறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. 'மொபிற்ரெல்' நிறுவனம் கைத்தொலைபேசிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது.

யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, சமாதான செயலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டு, யாழ்., கொழும்பு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணையுடன் இக் கண்காட்சி நடைபெறுகின்றது.

இதனையொட்டி போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை - இக் கண்காட்சியையொட்டி நேற்று யாழ். நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.(50-111)

# CIMA தொழிற்பாடுகள் வழமை போல்

CIMA இலங்கைப்பிரிவு, தனது சகல தொழிற்பாடுகளும் வழமைபோல் தொடரும் என அறிவித்துள்ளது. ஆயினும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களை அடக்கிய இலங்கைப்பகுத்தல் ஆலோசனைச் சபை (DIVISIONAL COUNCIL) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

CIMA பிரதம நிறைவேற்று அதிகாரி சார்லஸ் ரில்லி கூறுகையில், தொழிற்பாடுகள் வழமைபோல் தொடருமெனவும், இலங்கையிலுள்ள அங்கத்தவர்களும் மாணவர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் சேவைகளிலும் உதவிகளிலும் எவ்வித தாக்கங்களும் ஏற்படாதெனவும் கூறியுள்ளார்.

தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய இயக்குநரான பிரெட்லி எமர்சன் கூறுகையில், 'மாணவர்களும் அங்கத்தவர்களும் வழமைபோல் தங்களுடைய தேவைகளை எமது நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும், எமது நிறுவனத்தின் மூலம் மாணவர்கள் CBA பரீட்சைகளுக்குரிய வசதிகளையும், நூலக வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்' என்றும் தெரிவித்தார்.

இலங்கை பகுத்தல் ஆலோசனைச் சபை நிறுத்தப்பட்டதையிட்டு CIMA தலைவர் கிளைன் போல் கூறுகையில், CIMA யின் இலங்கைப் பிரிவிற்கான பொறுப்பு எப்பொழுதும் போன்று திடமாக உள்ளது. லண்டன் CIMA வைச் சேர்ந்த கௌரவ உத்தியோகத்தர்கள், நிறுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் இலங்கைக் கிளை சம்பந்தமான அறிவுரைகளை வழங்குவதுடன் மேலும் இலங்கையைச் சேர்ந்த மூன்று அங்கத் தவர்களுடன் ஓர் ஆலோசனைச் சபையை அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.(50)


## ரைப்பிங் தெரிந்தவர்கள் உடன் தேவை

தமிழ் ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர்கள் 29.12.2008 திங்கட்கிழமை முதல் 31.12.2008 புதன்கிழமை வரை (9.00 மணி -4.00 மணி) நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**திறமைக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

T.P : 021 222 8929
060 221 8435

ANDRA DIGITAL IMAGE
68.உப்புமடம் சந்தி K.K.S வீதி, கோண்டாவில்.

ANDRA DIGITAL PRINTERS
356A. கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனைக்கு அண்மையில்)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு செல்வரத்தினம் (இரத்தினம்)



*( இளைப்பாறிய ஊழியர், C.T.B.)*

புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்வரத்தினம் நேற்று (27.12.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினரூபன் (ஜேர்மனி), முருகானந்தன் (றங்கன் - வவுனியா), மனோகரன், ஜங்கரன், பாஸ்கரன், பாரதி (வவுனியா), சுதானந்தன் (வவுனியா), ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமார் (வவுனியா), றஞ்சினி (ஜேர்மனி), அஞ்சலா (வவுனியா), பவானி, லலிதா, ஞானேஸ்வரி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் கிருஸ்ணபிள்ளை, நாகம்மா, நாகராசா (கனடா), சரஸ்வதி, பாக்கியம், பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், கந்தவேள், தேவராசா ஆகியோரின் சகோதரரும் ராகுலன், ரஜீபன், ராகவி (ஜேர்மனி), சோபிகன், சுலக்ஷன், திபேரா, வினோஜா (வவுனியா), மயூரிகா, திபானி, நிரூபன், விதுஷா, வினுயன், பானுஜன், டிசாந்தன், கௌசி, தர்சிகா, டினோஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(81265)

*புளியங்கூடல் வடக்கு,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்: மக்கள், மருமக்கள்,
செ.மனோகரன், செ.பாஸ்கரன் (மகன்மார்).

## வைத்திலிங்கம் விசுவநாதன் (பொன்னுத்துரை)

கீரிமலை, கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது வரணியில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் விசுவநாதன் நேற்று (27.12.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தையா, காசிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னம்பலத்தின் (கொடிகாமம் மகா வித்தியாலயம்) அன்புத் தந்தையும் கமலேஸ்வரியின் அன்பு மாமனும் பிரசாந், கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பைக் குறிச்சி கிழக்கு,*
*வரணி.*

தகவல்:
வி.பொன்னம்பலம்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலித் தடை மூலம்

## புதுடில்லிக்கு 'செக்-மேட்'?


- வி.சிவராம் -

"வன்னியில் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இருக்கும் மக்களை, அரச கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குச் செல்ல உடனடியாக அனுமதிக்க வேண்டும். இல்லையென்றால், மீண்டும் புலிகள் இயக்கம் மீது தடையை அரசு விதிக்கவேண்டி வரும்."

- இப்படி எச்சரிக்கை விடுத்திருக் கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதுவும் அவ்வாறு மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிப்பதற்கு குறுகியகால அவகாசமும் அவர் வழங்கியிருக்கிறார்.

அதாவது பத்துநாள்களுக்கும் குறைவான அவகாசம் வழங்கப்பட்டிருக் கின்றது.

மேற்படி எச்சரிக்கையை கடந்த 22ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி வெளிப்படுத்தினார்.


மன்மோகன்சிங்

2009 ஆம் ஆண்டு பிறப்பதற்கு முன்னர் - அடுத்த ப நாள்களுக்குள் - மூன்று நாள்களுகளுக்குள் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேற புலிகள் அனுமதிக்காவிட்டால் அவர்களது இயக்கத்துக்கு எதிராக இலங்கை அரசின் தடை பாயும் என்பதே ஜனாதிபதியின் கடுந்தொனி எச்சரிக்கையாகும்.

குறுகியகால அவகாசத்துடனான நிபந்தனையை விதித்து அதற்குள் அதை நிறைவு செய்யாவிட்டால் தடைவரும் என்று எச்சரிப்பதன் மூலம் ஒருகல்லில் இரு மாங்காய்களை அடிக்க முயல்கிறார் அவர்.

அதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அறிவிப்பை விடுப்பதன் பின்னணியில் பெரும் இராஜதந்திர சாணக்கியமே பொதிந்திருப்பதாகக் கொழும்பில் விடயமறிந்த வட் டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

அரசுக்கும் புலிகளுக்கும் இடை யிலான யுத்தநிறுத்தம் 2008 ஜனவரி யுடன் உத்தியோகபூர்வமாக முறிவ டைந்து விட்டது. அது முதல் முழு அளவிலான யுத்தம் வெடித்து கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இருதரப்பிலும் பேரிழப்புகள் தொடர்கின்றன.

தென்னிலங்கையில் புலிகளுக்கு எதிரான கடும் சட்ட நடவடிக்கைகளும் நீடிக்கின்றன. புலிகளுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் முழு அளவில் பாய்கின்றது. தயவு, தாட்சண்யமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பொறுத்துக்கொள்ளல் என்ற பேச்சுக்கு கிஞ்சித்தும் இடம் இல்லாமல் புலிகளுக்கு எதிராக முழுச்சட்டங்களுமே முழு அளவில் பிரயோகிக்கப்படுகின்றன.

இந்தப் பின்புலத்தில், புலிகளுக்கு எதிரான அரசின் தடை இனிமேல் புதிதாக வந்து புலிகளுக்கு புதிதாக ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு ஏதுமே இல்லை என்பது வெளிப்படையானது.

வேண்டுமானால் புலிகளின் இலக்கை - இலட்சியக் கோரிக்கையை - ஆதரித்துத் தென்னிலங்கையில் செயற்படும் ஊடகங்கள், ஊடகவிய லாளர்கள், ஆதரவாளர்கள் போன்றோருக்கு எதிராக இத்தகைய தடையின் மூலமாக மேலும் கெடுபிடிகளை இறுக்க முடியும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே புலிகள் சார்புப் பிரசாரங்களை முற்றாக முடக்க முடியும். அதைத் தவிர உத்தேசத் தடையால் புலிகளுக்குப் பெரிய பாதிப்பு எதையும் உருப்படியாகச் செய்யமுடியாது என்பது வெள்ளிடைமலை.

அப்படியானால் - உத்தேச தடை புலிகளுக்குப் பெரும் பாதிப்பைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்றால் - அந்தத் தடையைப் பூதாகார விடயம் போலக் காட்டி, அதை மிரட்டலாக வைத்து, காய்நகர்த்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயன்றமை ஏன் என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

உண்மையில், 'தடைவிதிப்போம்' என்ற எச்சரிக்கையைக் காட்டி புலிகளை மடக்கமுடியாது என்பதும் -

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிர தேசத்தில் உள்ள மக்களை அரசின் பிடிக்குள் வர அனுமதிக்க மாட்டார்கள் என்பதும் -

அதுவும் புலிகளைப் பொறுத்தவரை, செல்லாக்காசுக்குக் கூட பெறுமதியில்லாதது என்று தாம் கருதும் தடை விவகாரத்தை கருத்தில்கொண்டு தமது பிரதேச மக்களை வெளியேற அனுமதிக்க மாட்டார்கள் என்பது கூட ஜனாதிபதிக்கு நன்கு தெரியும்; புரியும்.

அப்படியானால் இப்படித் தடை பற்றிய எச்சரிக்கை ஒன்றை திடீரென ஜனாதிபதி அறிவிப்பதன் காரணம் என்ன? அதற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் மர்மங்கள் எவை? - என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

நாம் முன்னர் குறிப்பிட்டமை போல ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் எத்தனம்தான் அது.

அதுவும் கொழும்பில் எறியும் ஒரு கல் மூலம் இந்தியாவில் - ஒன்று தமிழகத் திலும் மற்றது புதுடில்லியிலுமாக - இரண்டு கனிகளை வீழ்த்துவது ஜனாதிபதியின் ஒரே முயற்சியாகும்.

"வன்னிப் பெருநிலப்பரப்பு மீது இலங்கை அரசு தொடுத்திருக்கும் யுத்தத்தினால் ஈழத்தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு - உயிர், உடைமை நாசங்கள் - நேருகின்றன. ஆகையால், யுத்தத்தை உடனடியாக நிறுத்துங்கள்." - என்று கோரி தமிழகம் கிளர்ந்தெழுந்து கொதித்துப்போய் நிற்கிறது.

அதைச் சமாளிப்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதல்நோக்கம்.

'போரில் பாதிக்கப்படக்கூடிய வன்னி மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அழைத்துவர என்னால் இயன்றவை எல்லாவற்றையும் செய்தேன். ஆனால், புலிகள்தான் அந்த மக்களை வெளியேற அனுமதிக்காமல், அங்கேயே முடக்கி, அவர்களுக்கு பேராபத்தை ஏற்படுத்துகின்றார்கள். நான் தடைவிதிப்பேன் என்று எச்சரித்தும் கூட மசியாமல் அவர்கள் மக்களைத் தடுத்து வைத்து, போரில் மக்கள் சிக்கக்கூடிய போராபத்தை ஏற்படுத்துகின்றார்கள். எனவே, மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என்றால் அதற்கு நானோ அல்லது இலங்கை அரசோ அல்லது இலங்கையின் படையினரோ காரணமல்லர். புலிகளே அதற்குப் பொறுப்பு." - என்ற சாரப்பட தமிழக மக்களுக்கு விளக்கமளித்து பொறுப்பை புலிகள் மீது சுமத்துவது அவரது முதலாவது இலக்காகும்.

அடுத்த விடயம்தான் முக்கியமான தாகும்.

யுத்தத்தை உடன்நிறுத்தி, அமைதித் தீர்வுக்கான முயற்சிகளை ஆரம்பிக்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும்படி தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றுசேர்ந்து இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்தியிருக்கின்றன. தனது வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு நேரில் அனுப்பி இந்தச் செய்தியைத் தாம் இலங்கை அரசுத் தலைமைக்குத் தெரியப்படுத்துவார் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழகத்தின் முதல்வர் கருணாநிதி உள்ளிட்ட தலைவர்களிடம் நேரில் வாக்குறுதி அளித்து சுமார் ஒருமாத காலமாகி விட்டது. ஆனால், பிரணாப்பின் உத்தேச கொழும்பு விஜயம் இன்னும் கைகூடிவரவே இல்லை.

பிரணாப் முகர்ஜியை கொழும்பில் வரவேற்பதற்கு சாதகமான சமிக்ஞை - விருப்புடன் கூடிய அழைப்பு - இன்னும் கொழும்பிலிருந்து புதுடில்லிக்குக் கிட்டாமையே இந்த விஜயம் சாத்தியமாகாமல் தள்ளிப் போவதற்குக் காரணம் என்பதும் அரசல் புரசல் செய்தியாக வெளிவந்த விடயமே.


பிரணாப் முகர்ஜி

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வந்து யுத்தத்தை நிறுத்துமாறு கோரினாலும் அதை நிறுத்தும் மனநிலையில் கொழும்பு இல்லை. யுத்தவெறித் தீவிரத்தில் துடித்துக்கொண்டிருக்கும் மஹிந்த அரசு இன்றைய நிலையில் எக்காரணம் கொண்டும் யுத்தத்தை நிறுத்த மசியவே மாட்டாது என்பதும் உறுதியாகக் கூறக்கூடிய விடயமே.

பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வந்து யுத்தத்தை நிறுத்துமாறு கோருவதையும், அக்கோரிக்கையைத் தான் வெளிப்படையாகவே நிராகரிப்பதால் எழக்கூடிய முறுகல் நிலையையும் அடியோடு விரும்பாத கொழும்பு அரசுத்தலைமை, யுத்தத்தை நிறுத்துமாறு புதுடில்லி கோரமுடியாத வகையில் காய்நகர்த் தல்களைச் செய்ய எத்தனிக்கின்றது.

அதன் ஒரு கட்டமே தடை விதிப் புப் பற்றிய எச்சரிக்கை அறிவிப்பாகும்.

புலிகள் நிறைவேற்றமுடியாத ஒரு நிபந்தனையை - புலிகளின் கட்டுப்


மஹிந்தராஜபக்ஷ

பாட்டுப் பிரதேசத்தில் இருக்கும் மக்களை அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுமதிக்கவேண்டும் என்ற பெரும் நிபந்தனையை - குறுகியகால அவகாசத்துடன் - பத்துநாள் காலவரைய றையோடு - ஜனாதிபதி அறிவித் ததன் சூட்சுமம் இதுதான்.


கருணாநிதி

அடுத்த சில தினங்களில் புத்தாண்டு பிறந்ததும் புலித்தடை அறிவிப்பு ஆர வாரமாக வெளிவரும்.

இந்தியாவும் ஏற்கனவே புலிகள் இயக்கம் மீது தடைவிதித்துள்ளது. இதன் காரணமாக அந்த அமைப்புடன் எந்தத் தொடர்பாடலையுமே அது உத்தியோகபூர்வமாக வைக்க மறுத்து- விலகித் தள்ளி நிற்கின்றது.

அந்நிலையில் - புலிகள் மீது இலங்கை அரசும் தடைவிதித்து விட்டால் - தடை செய்யப்பட்ட அந்த அமைப் புடன் போர் நிறுத்தம் மேற்கொண்டு, சமரசம் செய்து, சமாதானமாகப் போகும் படி இலங்கையை எந்த முகத்துடன் இந்தியா வற்புறுத்த முடியும்?

இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வரமுன்னர், புலிகள் இயக்கம் மீது தடைவிதித்து - புலிகளைத் 'தீண்டத்தகாதவர்கள்' மாதிரியான நிலைக்குத் தள்ளிவிடுவதன் மூலம் - புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்யுங்கள் என்ற கோரிக்கையை முன்வைக்கமுடியாத நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்துவதே ஜனாதிபதி மஹிந்தவின் இரண்டாவது நோக்கமாகும்.

இந்திய இராஜதந்திரத் தரப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவுப் போக்குடைய சிலர் கொடுத்த இரகசிய யோசனையின் அடிப்படை யிலேயே இந்தத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்தர் முன்னெடுக்கின்றார் என்றும் ஒரு தகவல் கசிந்துள்ளது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்து மாறு வற்புறுத்தும்படி தமிழகம் விடுக் கும் அழுத்தத்துக்கு இசைவதா, இல்லையா என்று இப்போது தடுமாறிக் கொண்டிருக்கும் புதுடில்லிக்கு, புலிகளுக்கு எதிரான தனது தடைஉத்தரவு 'செக்-மேட்' நகர்வாக அமையும் எனக் கொழும்பு கருதுகின்றது.

அது சரிவருமா என்பதை அடுத்து வரும் வாரங்களில் நாம் உறுதி செய்து கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை உருக்காயுதங்களைக் கொண்டு வெல்வதை விட சமாதான வார்த்தைகளால் தீர்ப்பதே அதீத மேன்மையானது

**இயேசுக் கிறீஸ்துவின் பிறப்பு விழாவுக்கும் புதுவருடப் பிறப்புக்கும் இடைப்பட்ட பண்டிகைக் காலத்தையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இன்றைய உலகை நோக்கினால், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி; அதிநவீன மின்னியல் உபகரணங்கள்; அதிவேகத் தகவற் பரிமாற்றங்கள்; தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் புரட்சி; செயற்கைக் கோள்கள்; கடன் அட்டைக் கொள்வனவு (கிறடிற் காட்); இவைகள் யாவுமே அதன் நவநாகரீக முன்னேற்றத்தைப் பறைசாற்றுகின்றன. ஆனால் கணினி வைரஸ், கடன் அட்டை மோசடிகள், ஆவணக் களவுகள், உரையாடல் ஒட்டுக்கேட்டல் போன்றன அவற்றின் வினைத்திறனுக்கு எல்லை வகுத்து விட்டுள்ளன. மறுபுறத்திலோ விலைவாசி உயர்வுகள்; இயற்கையின் அழிவுகள்; யுத்த அகோரங்கள்; பயங்கரவாத தாக்குதல்கள்; மனித உரிமை மீறல்கள்; புற்று நோய், டெங்கு, எயிட்ஸ் போன்ற கொடிய வியாதிகள். இவைகள் யாவுமே மனித நாகரீகத்தை எள்ளிநகையாடும் சவால்களாய் திகழ்கின்றன. இவைகளை எல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்தால் மனிதன் சமாதானத்தை அதிகமதிகமாய் இழந்துவருவதையே அவதானிக்கலாம்.

இலங்கையிலும் அதிகரித்துவரும் இயற்கை அழிவுகளால் நிலை குலைந்து சமாதானத்தை இழந்து நிர்க்கதியானவர்கள் ஒருபுறமென்றால் அவர்களைவிடப் பன்மடங்கானவர்கள் யுத்தம், பயங்கரவாதம், கொலைவெறி, காட்டுமிராண்டித்தனம் போன்ற அழிவுகளால் - அதாவது மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகளால் - இன்று நிர்க்கதியாகியுள்ளனர். அவ்வப்போது சமாதான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதும் சமாதான நம்பிக்கை பூக்கமுன்பே, அவை கருகித் தாறுமாறாகி சிதைந்து போவதும் இன்று அதிகமதிகமாய் அரங்கேறி வரும் அரசியல் நாடகங்களாகிவிட்டுள்ளன. விலைவாசி உயர்வுகளுக்கும் வியாதிகளுக்கும் இலங்கையும் விதிவிலக்கல்ல. இலங்கையிலும் தான் மக்கள் இன்று சமாதானத்துக்காக ஏங்குகின்றனர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் என்ன நத்தார் வேண்டிக்கிடக்கிறது எனச் சிலர் சலித்துக் கொள்வர்; இன்னும் சிலரோ கிஞ்சித்தும் கவலைப்படாமல் ஒருவித அசமந்த மனப்பான்மையுடன் தாமுண்டு தமது நத்தார் கொண்டாட்டமும் உண்டு என்றவாறாக, வாழையடி வாழையாக, நத்தாரைக் கொண்டாடுவர்; வர்த்தகத் துறையினருக்கோ நத்தார் வருவாய் ஈட்டும் காலம். அவர்கள் நத்தாரை இயலமான வரை வர்த்தகப்படுத்தி ஆதாயம் தேட நாடுவர். இப்படியாக மனித அவலங்கள் ஒருபுறமும் மனித மேன்மைகள் மறுபுறமுமாகக் கிடக்க, நத்தார் இவைகளுக்கு சமபந்தமற்ற ஒரு கொண்டாட்டமா?

***நத்தார் சமாதானம்***

கிறிஸ்மஸ் என்பது உண்மையிலேயே ஒரு 'நத்தால்' கொண்டாட்டம் (அதன் மருவல்தான் நத்தார்). இற்றைக்கு ஐநூறு ஆண்டுகளுக்குமுன் இலங்கைக்குள் பிரவேசித்த போத்துக்கீசரும் அடுத்து வந்த ஒல்லாந்தரும், லத்தீன் மொழியிலே பிறப்பைக் குறிக்கும் சொல்லாகிய ''நத்தாலிஸ்'' (Natalis) என்பதில் உள்ள நத்தால் என்னும் சொல்லை இங்கே அறிமுகப்படுத்தினர். ஆரம்பத்திலே ''நத்தால் நல்வாழ்த்துக்கள்'' என்று வாழ்த்திய எம்மக்கள், காலப்போக்கில் அதை ''நத்தார் வாழ்த்துக்கள்'' என்றும் புதுவருடத்தையும் இணைத்து நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் என்றும் ஆக்கி விட்டனர். ஆங்கிலேய ஆட்சியின்போதுதான் கிறிஸ்மஸ் எனும் சொல் பரவலாக்கப்பட்டது. ஆயினும் அதைத் தமிழ்மக்கள் உள்வாங்கவில்லை. இன்றும் கூட நத்தார் என்பதே தமிழர்கள் மத்தியிலேயே புழக்கத்தில் உள்ளது. கிறிஸ்மஸ் என்பது வர்த்தகப்படுத்தப்பட்ட சொல்லாகப் பயன்படுத்தப்படும் இந்நாட்களில், நத்தார் என்பதே அதன் மெய்யான செய்தியைப் பறைசாற்றி நிற்கும் சொல்லாகத் திகழ்கிறது எனலாம்.

கிறிஸ்மஸ் ஒரு நத்தார்; ஒரு பிறப்பின் செய்தி; அது மக்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவந்த ஒரு பிறப்பின் செய்தி. முதலாவது நத்தார் கீதம் இசைத்த தேவதூதர்கள் அதையே செய்தியாக அறிவித்தனர். ''உன்னதத்திலே தேவனுக்கு மகிமை பூமியிலே சமாதானம் மனுஷர்மேல் பிரியம்,'' அல்லது திருத்திய மொழிபெயர்ப்பு கூறுவதைப்போல ''உன்னத்திலே இறைவனுக்கு மகிமை... பூமியிலே அவர் தயவு காட்டுகின்ற மனிதருக்குச் சமாதானம்'' (லூக்கா 2:14). அவரது பிறப்பினால் மனிதருக்கு சமாதானம்! இது எத்தகைய சமாதானம்? யாருக்குச் சமாதானம்?

***இதயத்திலே சமாதானம்***

இது உள்ளான சமாதானம். இறைவன் இதயத்தை அமைதிப்படுத்தித் தரும் சமாதானம். இது புறச் சூழ்நிலைகளால் அவைகளிலே சார்ந்ததோ அல்ல. இந்த சமாதானத்தையே இறைமகன் இங்கே எமக்காய் விட்டுவிட்டுச் சென்றார். ''சமாதானத்தை உங்களோடு விட்டுவிட்டுப்போகிறேன்; என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுப்பதுபோல அதை நான் உங்களுக்குக் கொடுக்கவில்லை. உங்கள் இருதயங்களைக் கலங்க விடவேண்டாம். நீங்கள் பயப்படவும் வேண்டாம்'' (யோவான் 14:27) எனத் தனது சிலுவைமரணத்துக்கு முந்தைய நாள் இரவில் இயேசு தமது சீடருக்கு மொழிந்தார். கோரச்சிலுவை மரணமும் கொல்கொதா மலைவரை சித்திரவதைகளும் தனிமையும் அவர்முன்பாக எதிர்கொண்டிருக்கையிலேயே நமது ஆண்டவராகிய இயேசு ''என் சமாதானம்'' என்றார். அந்த அளவுக்கு அவருக்குள் அச்சமாதானம் குடிகொண்டிருந்தது. இது ஆன்மீகச் சமாதானம். அவர் விட்டுச் சென்ற இச்சமாதானத்தை இறைமக்கள் எல்லோருமே பெற்றடையலாம்.

இச்சமாதானம் எமது முயற்சிகளாலோ, எமது கீர்த்திகளாலோ கிடைப்பதல்ல. மாறாக, அதைத் தருகிற இறைமகனிலே அன்பும் விசுவாசமும் கொள்வதாலேயே கிடைக்கிறது. அவருக்காகவே நாம் படைக்கப்பட்டோம். அவருக்கென நாம் ஒப்புரவாகுவதையும் அவர் தயவைப் பெறுவதையும் இச்சமாதானம் உள்ளடக்கியது. "கர்த்தாவே எம்மை உமக்கெனப் படைத்தீர். எமது இதயம் உம்மிலே அமைதி கொள்ளும் வரைக்கும் அதற்குச் சமாதானமே கிடையாது" என்று புனித அகஸ்தீன் அனுபவபூர்வமாகத் தெரிவித்தார். பவுல் அடிகளாரும் தான் பெற்றடைந்த சமாதான அனுபவத்தை, ''...நம்முடைய கர்த்தர் இயேசு கிறிஸ்து மூலமாய் இறைவனுடன் சமாதானம் உள்ளவர்களாய் இருக்கிறோம். அவர் மூலமாகவே நாம் இப்பொழுது இந்தக் கிருபை நிலைக்குள் விசுவாசத்தினால் சென்றிருக்கிறோம்..'' என்றார் (ரோமர் 5:2,3).

இதயத்திலே சமாதானம் இறைமகனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சமாதானம். இதுவே மெய்யான களிப்புக்கான ஊற்று. இதனை எவராவது எச்சூழ்நிலையாவது குலைத்திட இயலாது. ''சமாதானத்தைப்பற்றிய சுவிசேஷம்'' (ரோமர் 10:15) இதுவே இதயத்திலே சமாதானம் அற்றவர்களால் இகத்திலே சமாதானத்தைக் கொண்டுவர இயலாது. அவர்களது சமாதான முயற்சிகள் யாவுமே சமாதானத்தைக் குலைத்துப்போடும். எண்ணற்ற சரித்திரசான்றுகளும் சமகால நிலைமைகளும் இதற்குச் சான்றுகளாகும்.

***சமூகத்திலே உருவாக்கும் சமாதானம்***

சமூகத்திலே சமாதானத்துக்கான அடிப்படை, மானிட மாண்பாகும். "மானிட மாண்பை மதி அல்லது அழிவே கதி" என்ற கோஷத்தை நாம் கேட்டிருக்கலாம். மானிட மாண்பு இன்று கரைந்து போய்விட்டது. சமூக அந்தஸ்து, கல்வி, செல்வம், தோற்றம், வீரியம், செல்வாக்கு, உறுப்பமைப்பு போன்றவைகளால் இன்று மானிட மாண்பு நிர்ணயிக்கப்படுகிறது. அவைகளில் சிறந்தவர்களை உயர்வாகவும் அவைகளில் குறைந்தவர்களையோ இழக்காரமாகவும் மதிப்பிடுவதுண்டு. இலகுவிலே ஊறுபடத்தக்கவர்களான பாமரர்கள், வறியவர்கள், இடம்பெயர்ந்தோர், எல்லைக்கிராமத்தோர், விதவைகள், அநாதைகள், அங்கவீனர்கள் போன்றவர்களை மானிட மாண்பு அற்றவர்களாகக் கருதுவதுண்டு. மேலும், மக்களை வெறும் வாக்குகளாகக் கருதும் அரசியல்களாலும், இனத்துவேஷ வேள்விகளாலும், உரங்கொண்டுவரும் ஆயுதபலங்களாலும், பண்பைப் பரிகசிக்கும் பாலினச் சீர்கேடுகளாலும், பாலின ஒடுக்குமுறைகளாலும் இன்று மானிடப் மாண்பு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. இனத்துவ மதத்துவ தீவிரப்போக்குகளும் வன்முறைகளும் இதனை மேலும் விகாரப்படுத்தி வருகின்றன.

மானிட மாண்பு அவர்கள் மானிடர் என்பதால் கிடைப்பது. இன்னும் குறிப்பாகக் கூறுவதானால், மானிடர் இறைவனின் சாயலிலே படைக்கப்பட்டவர்கள் என்பதாலேயே மானிட மாண்பு உண்டு. மிருகங்களுக்கு மானிட மாண்பு கிடையாது. ஆனால்,

**சகோ.செ.கு.சேவியர்**

இன்று எளிதில் ஊறுபடும் மக்கள் கூட்டத்தினர் மிருகத்திலும் கேவலமாக மாண்பிழக்கப்பட்டுள்ளனர். சமூகம் என்பது மானிடர்களால் ஆனது. சமூகத்திலே சமாதானம் என்பது மானிட மாண்பை உன்னதமாகக் கொண்டாலே கிட்டும். மானிட மாண்பை மதிப்பதே சமூகசேவைக்கு அத்திபாரம். மானிட மாண்பை மதியாதது சேவையல்ல, அது பிச்சையிடுதலே. மானிட மாண்பை உள்ளபடி கணிக்கும் மனப்பான்மையானது இருதயத்திலே சமாதானம் கொண்டவர்களுக்கே இருக்கும். மானிட மாண்பை மறுபடியும் சீரமைக்கும் பணியே சமூகசமாதானத்துக்கு இட்டுச்செல்லும். உண்ணும் உணவைப் பொறுத்து மானிட மாண்பைத் தீர்மானித்து வந்த அன்றைய ஆன்மீகத்துவத்துக்குப் போதனையாக பவுல் அடிகளார், ''...சமாதானத்துக்கு அடுத்தவைகளையும் அந்நியோன்ய பக்தி விருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்'' எனக்கூறி, ''போஜனத்தின் நிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே..'' என்று எச்சரித்து, மெய்யான மானிட மாண்பை நிலைநிறுத்தினார்.

மானிட மாண்பானது அவர்களது இனத்தாலோ, மதத்தாலோ, உண்ணும் உணவாலோ அவர்தம் அந்தஸ்தினாலோ இன்ன பிறவற்றினாலோ வரையறுக்கப்படுவதில்லை. வேதியனாகட்டும் அல்லது வேடனாகட்[illegible] அரண்மனை[illegible]ட்டும் அல்லது சகதிவாழ் குடி[illegible]ட்டும், அரசனாகட்டும் ஆண்டியாகட்டும், எல்லோருக்குமே ஒரேவித மானிட மாண்பு உண்டு. அவரவர்களை உள்ளபடியாகவே புரிந்துகொள்வதும், அவரவரின் தனித்துவங்களை அங்கீகரிப்பதுமே, அதாவது அவர்களின் மானிட மாண்பை மீள நிலைப்படுத்துவதே, சமூக சமாதானத்துக்கான அடிப்படை. இவ்வகையிலே இது உருவாக்கப்படும் சமாதானமாகும். நாற்றமெடுக்கும் மாட்டுத்தொழுவத்திலே வைக்கோல் போரின் மீது கந்தைத் துணிகளால் சுற்றிக் கிடத்தும் ஏழ்மையிலே இயேசு பிறந்ததும், தெய்வீக நத்தார் கீதத்தை தேவதூதர்கள் மந்தை மேய்ப்பவர்களுக்கே இசைத்து, நத்தார் செய்தியைத் தெரிவிக்கும் [illegible]களை ஆக்கியதும் மானிட மாண்பை மீளச்சீரமைக்கும் முயற்சிகளே. நத்தார் தரும் சமாதானச் செய்தியின் சமூகப் பரிமாணம் இதுவே. அன்பின் சேவை என வர்ணிக்கப்படும் ''சேவை கொள்ளவல்ல, சேவை செய்யவே வந்தேன்'' (மத்.20:28) எனக்கூறி தன் செயல்களால் அதை நிரூபித்துக் காட்டிய இயேசுவின் சேவை இதனையே வலியுறுத்துவதாய் உள்ளது.

***தேசத்துக்குச் சமாதானம்***

சமூக சமாதானமானது எப்படியாக மானிட மாண்பின் மீள்சீரமைப்போ, அதுபோலவே தேச சமாதானம் நேர்மையினதும் வாய்மையினதும் மீள்சீரமைப்பாகும். ''சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவான் 8:32). நேர்மையும் வாய்மையும் தேசத்தின் சட்டத்தால் ஊட்டப்படுவதில்லை. சட்டம் வெறுமனே அவற்றை வழிப்படுத்தும் வரம்பு மாத்திரமே. நேர்மையும் வாய்மையும் செயற்பாடுகளில் வெளிப்பட்டாலும்கூட, அவை வெறும் வெளிச் செயற்பாடல்ல. அவை உள்ளான மனக்கருத்துக்கள். நேர்மையற்ற கோஷங்களாலும் வாய்மையற்ற அறிக்கைகளாலும் எடுபட்டுப்போகும் மானிடர், தேசத்தின் சமாதான சீர்குலைவுக்குத் தூபமிடுபவர்கள். மெய்யான நேர்மையையும் வாய்மையையும் தமது உள்ளத்துள் தமது மனக்கருத்தாகக் கொண்டவர்களே தேசத்துக்கான சமாதான வழிகளிலே நாடுவார்கள்.

இயேசுவின் காலத்திலே யூதர்கள் கிரேக்க/ ரோமர்களைப் பற்றியும் கிரேக்க/ ரோமர்கள் யூதர்களைப் பற்றியும் நேர்மையற்ற கோஷங்களையும் வாய்மையற்ற அறிக்கைகளையும் பரப்பிவந்தனர். உதாரணமாக வரி செலுத்தக்கூடாது என யூதர் ஜெபாலயங்களில் கற்பித்துவந்தனர். இந்நிலையில் இயேசு ''அவனவனுக்கு உரியதை அவனவனுக்குக் கொடுங்கள்'' எனக் கருத்துப்பட உபதேசித்து (மாற்கு 12:14-17), அதைச் செய்தும் காட்டி (மத்.17:25-27)அவ்வித போதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

## மானிட மாண்பின் கருத்திழந்த காலமாகிவிட்டது இப்போது

***சபையின் அழைப்பும் பொறுப்பும்***

சூழ்நிலை ஏதுக்களால் மனம் சோர்ந்துபோகாமல் அவரது தயவினாலே நாம் பெற்றடையும் எமது உள்ளான இதயத்து சமாதானமாகிய அவரது ஈவைப் பெற்று, அச்சமாதானம் இடம்பெறுவதை நாம் இந்த நத்தார் பண்டிகையிலே நாடுவோமாக. நுகர்வினால் இதயத்தைத் தினவூட்ட நாடும் உலகப் போக்கையிட்டு எச்சரிக்கை கொள்வோமாக. மானிட மாண்பை மீள் சீரமைக்கும் இறைபணியிலே நாமும் முழுமூச்சுடன் ஈடுபட்டு இறைவன் நம்மை அழைத்த பணிக்கேற்றதாக எமது பாங்கினை ஆற்றுவோமாக. குறிப்பாக எளிதில் ஊறுபடத்தக்க மக்கள் கூட்டத்தினரின் மானிட மாண்பை மீளசீரமைக்கும்படி அவர்களுடன் எமது ஆசீர்வாதங்களையும் பகிர்ந்து கொள்வோ மாக. அவரவரின் இனரீதியான சமாதான கோஷங்களாலும் அறிக்கைகளாலும் எடுபட்டுப் போய் விடாமல், மெய்யான சமாதானத்தை வாஞ்சிக்கும் மனதை நாம் விருத்திசெய்து கொள்வோமாக.''யுத்தத்தை உருக்காயு தங்களைக் கையாளும் மனிதர்களைக் கொண்டு வெல்வதைவிட வார்த்தை களால் சங்கரிப்பதே அதீத மேன்மை. சமாதானத்தை சமாதான வழிமுறைகளிலே அடைவதே மெய்யான மேன்மை'' எனும் புனித அகஸ்தீனுடைய வார்த்தைகளும் ''ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்... நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையி னாலே வெல்லு'' (ரோமர் 12:17-21) எனும் புனித பவுல் அடிகளாரின் வார்த்தைகளும் எமக்குள் மெய்யான நேர்மையையும் வாய்மையையும் குறித்த மனக்கருத்தை உருவாக்கட்டும். மெய்யான சமாதானத் துக்கேற்ற நேர்மையையும் வாய்மையை யும் எமக்குள் அரியணையேற்றுவோமாக.

★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதி - "வாழ்ந்த" - வரதர்

## அவரது வாழ்க்கையின் இலக்கு இலக்கியம்

### முதறிஞர் வரதரின் இரண்டாவது நினைவுதினம் இன்றாகும்



**1924.07.01 ஆம்** திகதி பொன்னாலை தியாகர் சண்முகம்-சண்முகம் சின்னத் தங்கம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்து [illegible] தி.ச.வரதராசன் என்ற எழுத்தாளர் வரதர் அவர்களுக்கு நவீன தமிழ் இலக்கிய வரலாற்றிலே சிறப்பான ஓர் இடம் உண்டு. சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், வசன கவிதையாளர், பத்திரிகை ஆசிரியர், நூல் வெளியீட்டாளர் ஆகிய பன்முகச் செயற்பாட்டாளராகவும், இவை அனைத்திற்கும் ஆதாரமான- அடிநாதமான இலக்கிய ஆர்வம், மனிதநேயம், புதுமை வேட்கை, முதலியவற்றின் இருப்பிடமாகவும் திகழ்ந்தவர் அவர்.

தனது கதைகள் அச்சிலே வரவேண்டும், வாசகர்கள் அவற்றை மெச்சிப் புகழவேண்டும் என்ற இளம் பருவத்துக்குரிய இயல்பான ஆசையுடன் எழுதத் தொடங்கிய வரதர், ஆண்டுகள் கழிய, அனுபவம் முதிர, தனக்கென உறுதியான நோக்கையும் போக்கையும் வரித்துக் கொண்டார்.

"கவிதையோ, கதையோ, கட்டுரையோ, நாவலோ, நாடகமோ, உருவத்தில் எப்படி இருந்த போதிலும், இலக்கியமென்று ஒன்றைச் சொல்வதற்கு இரண்டு தகுதிகள் இருக்கவேண்டும். முதலாவது அதில் ஓர் இலக்கு இருக்கவேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ, புறத்தையோ உயர்த்துவதாக அமையவேண்டும். மற்றையது அதைச் சொல்லும்விதம், நடை, கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சுவையும் நேர்த்தியும் இருக்கவேண்டும்" என நேர்காணல் ஒன்றில் வரதர் கூறியது குறிக்கத்தக்கது.

அச்சில் வெளியாகவேண்டும், இளம் உள்ளங்களைக் கவரவேண்டும் என்ற ஆசையின் உந்துதலால் எழுதப்பட்ட கதைகளாக, விபசாரி தவிர்ந்த இவருடைய ஏனைய "ஈழகேசரி"க் கதைகளைக் குறிப்பிடலாம். ஒழுக்கம் தவறிய இளம் பெண்ணொருத்திக்கு வாழ்வளிக்க முன்வரும் இளைஞன் ஒருவனே கதையைச் சொல்வதைப் போல் "விபசாரி" கதையை உருவாக்கியுள்ளார் வரதர். செங்கை ஆழியான் தொகுத்த "ஈழகேசரிச் சிறுகதைகள்" தொகுப்பில் இக்கதைதான் இடம் பெற்றுள்ளது. பலராலும் விதந்துரைக்கப்படும் "கற்பு" கதையும் "விபசாரி"யும் வரதரின் சமூகப் பொறுப்புணர்ச்சியையும் புரட்சிகரமான சிந்தனையையும் காட்டுகின்றன.

அவருடைய பிற்காலச் சிறுகதைகள், குறிப்பாகச் சுதந்திரன், ஆனந்தன், தினகரன், கலைச் செல்வி, மத்தியதீபம், புதினம், மல்லிகை ஆகிய இதழ்களில் வெளியான சிறுகதைகள் எல்லாமே அவருடைய இலக்கியக் கோட்பாட்டை நன்கு பிரதிபலிப்பனவாக அமைந் துள்ளன.

பாடப் புத்தகங்கள் தவிர்ந்த வேறு எந்த ஒரு தமிழ் நூலையும் அச்சில் வெளிக்கொணர்வது கடினமாக இருந்த ஒரு காலத்தில், பதினைந்து வயதுப் பள்ளி மாணவனாக வரதர் இருந்தவேளையில், அவர் எழுதி அச்சில் வெளியிட்ட நூல் "நாவலர் கோன்". பத்து ஆண்டுகளின் பின்னர், அந்த நூலிலே சில திருத்தங்களைச் செய்து, "நாவலர்" என்று பெயரிட்டு வெளி[illegible]ார். பல ஆண்டுகளின் பின்னர், நாவலர் சபையினர், மிகப்பெரிய அளவிலே நாவலர் விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தபோது, நாவலர் பற்றிய நூலொன்றை எழுதும்படி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். வரதர் எழுதிய "நாவலர்" என்ற நூலையே மீண்டும் வெளியிடலாம் எனப் பண்டிதமணி அவர்கள் சொன்னதிலிருந்து அந்த நூலின் சிறப்பையும் தரத்தையும் நாம் ஊகிக்கலாம். பண்டிதமணி அவர்களின் ஆலோசனைப்படி, யாழ்.அரச அதிபர் ம.ஸ்ரீகாந்தா, வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ச.அம்பிகைபாகன் ஆகியோர் வரதரைச் சந்தித்தார்கள். மூன்றாவது முறையாக அந்த நூலைத் திருத்தி-திருப்பி எழுதி வரதர் வெளியிட்டார். பள்ளி மாணவனாக இருந்து "வரதர்" எழுதிய ஒரு நூல் "வளர்ந்த" வரலாறு இது!

காலத்துக்குக் காலம் பல்வேறு சஞ்சிகைகளை வெளியிட்ட பெருமைக்குரியவர் வரதர். கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவையே இலக்கியங்கள்; வசன நடையில் வெளிவந்த சிறுகதைகள், நாவல்கள் எல்லாம் வெறும் பொழுது போக்குச் சரக்குகள் என்று கற்றறிந்தோர் மத்தியில் நிலவிய கருத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் வரதர் வெளியிட்ட முதலாவது சஞ்சிகை "மறுமலர்ச்சி" அவருடைய முயற்சியால் உருவான "தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்-குறிப்பாக க.கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், ச.பஞ்சாட்சரசர்மா, க.இ.சரவணமுத்து [சாரதா] ஆகியோர் "மறுமலர்ச்சி"யின் பிறப்பிலும் வளர்ப்பிலும் வளர்ச்சியிலும்" வரதருக்குப் பெரிதும் உதவினர். தென்னிந்தியாவிலிருந்து வெளியாகி, நவீன தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்த "மணிக்கொடி" யுடன் ஒப்பிட்டுப் பேசப்படும் சஞ்சிகையாக மிளிர்ந்தது "மறுமலர்ச்சி". எனினும் மூன்று ஆண்டுகளுக்கு [25இதழ்கள்] மேல் "மறுமலர்ச்சி" வெளிவரவில்லை.

"மறுமலர்ச்சி"க்குப் பின்னர், ஒழுங்கற்ற கால இடைவெளிகளில் "ஆனந்தன்", "தேன்மொழி" "வெள்ளி", "புதினம்", "அறிவுக்களஞ்சியம்" ஆகிய சஞ்சிகைகளை அவர் வெளியிட்டார். "தேன்மொழி"- கவிதைக்கென்றே வெளிவந்த சஞ்சிகை. மஹாகவி து.உருத்திரமூர்த்தி "தேன்மொழி" வெளியீட்டில் வரதருக்குப் பக்கபலமாக இருந்தார். தமிழ்வாணனின் "கல்கண்டு" இதழைப் போன்று ஒரு சஞ்சிகையை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடவேண்டும் என்ற விருப்பினால் வரதர் வெளியிட்ட மாத இதழ் "வெள்ளி", அரசியல், இலக்கியம், சினிமா, அறிவியல், நகைச்சுவை போன்றவற்றிற்காக அவர் வெளியிட்ட வார இதழ் "புதினம்". பாட நூல்களுக்கு அப்பால் மாணவர்களின் பல்வேறு தேடல்களுக்கு உதவும் வகையில் வெளிவந்தது "அறிவுக்களஞ்சியம்". மாதந்தோறும் 3000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் மத்தியில் நல்ல செல்வாக்கைப் பெற்றிருந்த இந்தச் சஞ்சிகைக்கு யாழ்ப்பாணத்தின் "மகா இடப்பெயர்வு" முற்றுப்புள்ளி இட்டது. இந்நாட்டின் தமிழ் சஞ்சிகைகளின் வரலாற்றிலே சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு, ஒவ்வொன்றுக்குமுரிய தனித்தன்மையை வரதர் பேணினார் என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நீண்டகால இடைவெளியின் பின்னர், சிற்பி, செங்கை ஆழியான் ஆகியோரை உதவி ஆசிரியர்களாக்கி "மறுமலர்ச்சி"யை மீண்டும் வெளியிட்டார் வரதர். எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள் போன்றோர் பலரின் பாராட்டுக்கு "மறுமலர்ச்சி"யின் மறுபிறப்பு இலக்கான போதிலும் இரண்டு இதழ்களுக்குமேல் அவரால் அதை வெளியிட முடியவில்லை. அவர்களுக்குத் தானாகப் பணம் கொடுத்து நூலாசிரியர்களிடம் பணம் வாங்காமல் இலங்கை எழுத்தாளர்கள் பலரின் நூல்களை வெளியிட்[illegible] வரதர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பொன்முத்துக்குமாரன், மஹாகவி, சொக்கன், செங்கை ஆழியான், கலாநிதி கைலாசபதி, முருகையன், சாந்தன், நாவற்குழியூர் நடராசன், சோமகாந்தன், அநு.வை. நாகராஜன் போன்றவர்களின் சிறந்த நூல்களை அவர் வெளியிட்டுதவினார்.

நாவலுக்குரி[illegible]மான கட்டுக்கோப்புடன் அவர் எழுதிய சிறந்த நாவல் "காவோலையில் ஈரம்" அவருடைய சிறுகதைகளில் அடிக்கடி வரும் "மூர்த்தி மாஸ்டரை"க் கதாநாயக[illegible] கொண்டு அவர் எழுதிய புதுமையான ந[illegible] அது. அந்த நாவல் நூலுருப் பெற[illegible] அதன் பல்வேறு சிறப்புக்களுக்காக[illegible] வரவேற்பையும் பாராட்டையும் அது பெற்றிருக்கும் என்பது நிச்சயம்.

இந்தியாவிலிருந்து வெளியான "சூறாவளி", "கலாமோகினி" போன்ற சிற்றிலக்கிய ஏடுகளில் ந.பிச்சமூர்த்தியும் வேறு சிலரும் எழுதிய வசன கவிதைகளை வாசித்து இரசித்து, அவற்றைப்போல ஈழத்தில் வசனகவிதை எழுதிய முன்னோடி வரதர். அவர் எழுதி, 1943ஆம் ஆண்டில் "ஈழகேசரி"யில் வெளியான "ஓர் இரவிலே" என்பதே ஈழத்தில் வெளிவந்த முதலாவது வசனகவிதை- புதுக் கவிதை. மகா இடப்பெயர்வின்பின் வரதர் எழுதி "வீரகேசரி" யில் வெளிவந்து, பின்னர் நூருலுப்பெற்ற "யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" வசனகவிதை என்ற வகையிலும், இடப்பெயர்வு சம்பந்தமான இலக்கியத்தரமான ஆவணம் என்ற வகையிலும் குறிப்பிடக்கூடிய ஒன்[illegible]

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் பெற[illegible]

**சிற்பி**

மிகவுயர்ந்த விருதாகிய "சாகித்ய ரத்ன" விருது 2002ஆம் ஆண்டிலே இவருக்குக் கிடைத்தது.

"நல்ல கருத்துக்களை உணர்ந்து உள்வாங்கி நாங்கள் எழுதுகின்றோம். ஊருக்காக மட்டும் எழுதுவதால் பயனில்லை. அந்த நல்ல கருத்துக்களை நாங்களும் எங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும்" என "ஞானம்" பேட்டியிற் சொன்னார் வரதர்.

அவருடைய பணிகளையும் கருத்துக்களையும் நோக்கும்போது, "அவருடைய வாழ்க்கையின் இலக்கு, இலக்கியம்; அந்த இலக்கியத்தின் இலக்கு, வாழ்க்கை - நல்வாழ்க்கை" என்று சொல்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது. ★

# குடாநாட்டில் நில அதிர்வு ஏற்பட்டிருப்பது சாத்தியமே

## விஞ்ஞானபூர்வ நிகழ்வுகள் ஆதாரம்

'உதயன் 30.11.2008 இதழின் முன்பக்கத்தில் நில அதிர்வு, சுனாமித்தாக்கம் எதுவுமே குடாநாட்டில் நிகழ்ந்ததாகப் பதிவில்லை; என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதில் பின்வரும் செய்திகளும் வெளியிடப்பட்டிருந்தன. நேற்று அதிகாலை 2.15 மணியளவில் யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இலேசான நில அதிர்வொன்று உணரப்பட்டதாகப் பரவிய வதந்தியை அடுத்து குடாநாட்டு மக்கள் பதற்றம் அடைந்தனர்; "பலர் அச்சத்துடன் அந்தவேளையிலும் தமது வீடுகளை விட்டு வெளியேறி வெளி கொண்ட இடங்களுக்குச் சென்றனர். இதேபோன்று மீண்டும் அன்று மாலை 5.30 மணியளவிலும் மக்கள் மத்தியில் நில அதிர்ச்சி குறித்த அச்சமும் பதற்றமும் நிலவின.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் இவைகளைப் பற்றித் தேவையான அக்கறை எடுக்காவிட்டாலும் யாழ்ப்பாணத்தில் நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதென்பது பின்வரும் காரணங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**தாழமுக்கம்**

யாழ்ப்பாணத்தில் வளிமண்டல அமுக்கம் 25.11.2008 காலை 8.30 மணிக்கு 1012 மிலிபார் (mb) ஆகவும், பகல் 11.30 மணிக்கு 1009 மிலி பாராகவும் பிற்பகல் 2.30 மணிக்கு 1006 மிலி பாராகவும் மாலை 5.30 மணிக்கு 1500 மிலி பாராகவும்நிலவியது. வளிமண்டல அமுக்கம் 1013 மிலிபாராக இருந்தால் அது தாழமுக்கம் எனப்படும். எனவே 25.11.2008 இல் யாழ்ப்பாணத்தில் தாழமுக்கம் ஏற்பட்டது.

**சூறாவளி**

அன்று காற்றின் சராசரி வேகம் மணித்தியாலத்திற்கு 30 கிலோமீற்றராகப் பதியப்பட்டது. காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 62 கிலோமீற்றருக்கும் 117 கிலோமீற்றருக்கும் இடையில் இருந்தால் அது சூறாவளி என்று அழைக்கப்படும். எனவே 25.11.2008 அன்று யாழ்ப்பாணத்தில் சூறாவளி வீசியது.

25.11.2008இல் காற்றுவீசும் திசைகள் அடிக்கடி மாறியபடி இருந்தன. காலை 8.30 மணிக்கு வடக்கு நோக்கியும், முற்பகல் 11.30 மணிக்கு மேற்கு நோக்கியும் பிற்பகல் 2.30 மணிக்கு வடக்கு நோக்கியும், மாலை 5.30 மணிக்கு வடமேற்கு நோக்கியும் காற்று வீசியதினால் சமநிலை சீரழிந்தது.

வளிமண்டல அமுக்கம் குறைவாக இருந்ததினால் நீராவி அதிகமுடைய கடும் மழை முகில்கள் தோன்றின. 24.11.2008இல் 197.5 மி.மீற்றர் மழையும் 25.11. 2008 இல் 389.8 மி.மீற்றர் மழையும் பொழிந்தது.

இந்த இயற்கைச் சூழ்நிலையால் பூநகரிக் குடாக்கடலின் மேலே பூநகரிக் கடற் கரையிலிருந்து 8 மைல் மேற்காகவும் கௌதாரி முனைக் குத்துத் தெற்கேயுள்ள கடற்கரையிலிருந்து 5 மைல் தெற்காகவும் உள்ள (9°.30''N; 80°.06''E) பகுதியில் நிஷா புயல் ஆரம்பமாகி, 26.11.2008 இல் வடக்காக நகர்ந்து காலை 8.30 மணிக்கு 1006 mb ஆகவும், முற்பகல் 11.30 மணிக்கு 1006 mb ஆகவும், பிற்பகல் 2.30 மணிக்கு 1003 mb ஆகவும் தாழமுக்கத்தை ஏற்படுத்தியது. நிஷா புயலின் ஆரம்ப இடம் படத்தில் குறிக்கப்பட்டுள்ளது.



யாழ்.குடாநாட்டின் நில அமைப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நில மட்டத்திலிருந்து சராசரி 700 அடி ஆழத்திற்கு மயோசீன் காலச் சுண்ணக்கற்கள் காணப்படுகின்றன. அதற்குக் கீழ்த்தான் கருங்கற் பாறையுள்ளது.

25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து இறந்த கடல்வாழ் உயிரினங்களின் எச்சங்கள் காலப்போக்கில் இறுகித்தான் இச் சுண்ணப் பாறைகள் உருவாகின. அதனால்தான் இப் பாறைகளை உடைக்[illegible] வாழ்ந்த தாவரங்களின் [illegible], சங்குகள், சிப்பிகள், ஊரிகள் முதலியன காணப்படுகின்றன. இலேசான எச்சங்கள் உள்ள இடங்கள் காலஞ் செல்லச் செல்ல தண்ணீரால் அரிக்கப்பட்டு இடைவெளிகளாகவும் நிலத்தடி ஆறுகளாகவும் உருவாகின. நிலாவரைக் கிணறும், இடிகுண்டும், நிலாவரையிலிருந்து ஊறணி ஊடாகக் கடலில் கலக்கும் நிலத்தடி ஊற்றும் சில உதாரணங்களாக உள்ளன.

பல்வேறு மட்டங்களிலும், சூழ்நிலைகளிலும் காலங்களிலும் இச்சுண்ணப் பாறைகள் உருவாகியதினால் காலப்போக்கில் இவைகளில் வெடிப்புகள் தோன்றின. அவை தகடுகளாக உள்ளன.

**நிலத்தின் பொறியியல் இயல்புகள்**

நிலமட்டம் கடல் மட்டத்திலிருந்து (க.ம) சராசரி 7.5 அடி உயரமாக இருக்கும் நிலத்தில் மண்படையின் அடிமட்டம் க.மட்டத்துக்குக் கீழே சராசரி 4 அடி (-4.0 அடி க.ம)க்குள்ளும், மண்ணுடன் சேர்ந்துள்ள மக்கி, குறுங்கற்கள், சுண்ணக்கற்கள் முதலியன அம்மட்டத்திலிருந்து சராசரி - 24.0 அடிக்குள்ளும், கடின சுண்ணப்பாறைகள் அதிலிருந்து சராசரி -34.0 அடி (க.ம)க்குள்ளும் அதனடியிலிருந்து சராசரி-700.6 அடி வரைக்கும் மிகக் கடின சுண்ணப் பறைகளும் அமைந்துள்ளன.

இச்சுண்ணப் பாறைகளுக்கு மேல் கட்டப்படும் அமைப்புக்களின் பாரம் ஒரு சதுர அடிக்கு 1.5 தொன்னுக்கு மேலிருந்தால் தாங்கும் பாறை உடைந்துவிடும்.

சுண்ணக் கற்களின் கரையாத எச்சம் 1.42 - 2.36 சத வீதமும், சுண்ணம் 51.88- 54.00 சத வீதமும், மக்னீசியா 0.72-1.43 சதவீதமும் வேதியச் சேர்வாக உள்ளன. கற்களில் காணப்படும் நுண்ணிய துவாரங்கள் 10 சதவீதமாகவும், நீர் ஊடுருவும் தன்மை 30 சதவீதமாகவும் உள்ளன.

[illegible] பெரும் [illegible] ஏற்பட்ட தாக்கம்

23.11.2008க்கு முன் பெய்த மாரி மழையினால் நிலம் பூரண ஈரலிப்புடன் காணப்பட்டது. 24.11.2008இல் 7.8 அங்குல மழை பெய்ததைத் தொடர்ந்து 25.11.2008இல் 15.6 அங்குல மழை பெய்து கொட்டியது. [illegible] 25.11.2008இன் கடைசியில் 23.4 அங்[illegible]நீர் நிலத்தில் உயர்ந்து நின்றது. ஆனால் குடாநாட்டின நிலம் சரிவாகக் காணப்படுகின்றது. உதாரணமான 36.2 அடி உயரமான அம்பனையில் தொடங்கும் வழுக்கையாறு 8.0 மைல் தூரம் பாய்ந்து 2.5 அடி உயரமான அராலி அணைக்கட்டால் கடலுக்குள் பாய்கின்றது. எனவே நிலத்தின் சராசரிச் சாய்வு 8 மைல் நீளத்திற்கு 33.5 அடி அதாவது ஒரு மைல் நீளத்துக்கு 4.0 அடி இறக்கம் குடாநாட்டு நிலத்தில் காணப்படுகின்றது.

**குடாநாட்டில் 5.0 அடி உயரத்திற்கு வெள்ளம் நின்றது**

ஒரு மைல் நீளமான நிலத்தை உதாரணமாக எடுத்தால் அதன் நீள முடிவில் 4.0 அடி பள்ளம் காணப்பட்டு 4.0 அடி உயரத்திற்கு வெள்ளம் நிற்கும். ஒருநாளைக்கு ஒரு அடி மழை பெய்தால் பள்ளத்தில் 4.0 அடி வெள்ளம் நிற்கும். எனவே 24.11.2008ஆம் மற்றும் 25.11.2008ஆம் திகதிகளில் மொத்தமாக 2.0 அடி மழை பெய்ததினால் முடிவில் 8.0 அடி உயரத்திற்கு வெள்ளம் நிற்கக்கூடிய வாய்ப்பு உண்டு. பல்வேறு வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டாலும் சராசரி உயரமாக 5.0 அடி உயரத்திற்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்படுகின்றது.

**சுண்ணப்பாறையில் ஏற்பட்ட கடும்பாரம்**



ஒரு கன அடி நீரின் நிறை 62.5 இறாத்தலாதலால் ஒரு சதுர அடி நிலத்தில் 5.0 அடி உயரத்துக்கு நின்ற வெள்ளத்தின் பாரம் 312.5 இறாத்தலாகும். எங்காவது ஒரு சதுர மைல் நிலத் தில் நின்ற வெள்ளத்தின் மொத்தப் பாரம் 3876840 தொன். ஆனால் சுண்ணப்பாறையின் அமைப்பிற்கேற்றவாறு அடியில் ஏற்படும் தாக்கம் மாறுபடும். நகரைச் சுற்றிச் சுண்ணப் பாறைகள் அகழப் படுதல், நகரில் பாரமான கட்டடங்களை அமைத்தல் போன்றவைகளால் சில இடங்களில் சுண்ணப்பாறை[illegible]ளின் பாரந்தாங்கும் தன்மை குன்றிவிட்ட[illegible]

இக்கட்டுரையாளரால் "குடாநாட்டு வரட்சி ஏற்படுவதற்கு சுண்ணப்பாறைகள் அகற்றப்படுவதும் பிரதான காரணங்களி[illegible]

**எந்திரி க.யோகராசா**

(18ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

1975ஆம் ஆண்டு, கணக்காளர், அரசாங்க உத்தியோகம், விசாகம் 2, இடபராசியில் 7ஆம் இடத்தில் செவ்வாய் நட்பு, கிரகபாவம் 26 ½ கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. உத்தியோகம் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது. உள்நாட்டு, வெளிநாட்டுக் குறிப்புகள் உண்டு.

தொடர்பு: "மாங்கல்யா திருமண சேவை"
கு.திருவிளங்கம்
90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்.
T.P. 021 222 6043, M/No. 077 138 6846


## தரம் 5இல் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களும், 100 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றவர்களும் பாடசாலை சமூகத்தினரால் கடந்த வியாழக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (203-207)


வசீகர தோற்றத்திற்கு
## சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, கரும்புள்ளி, படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சரும வரட்சியை தவிர்க்கும். சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சரும கருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் எரிவை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கவர்ச்சி தோற்றத்தைத் தரும்.




'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(வி/555203)



## புதிய வருடத்திற்கான அனுமதிகள்

6th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
### பாலர் பாடசாலை

Play Group - 2-3 years | Montessori - 3-4 years
Pre-School - 4-5 years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா
ஒளி விழா, பட்டமளிப்பு விழா
மாணவர் சித்திரம்/ கைவேலை கண்காட்சி, Sports Meet

Contact: 0773627055

## அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்

பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமையவும், சர்வதேச தரத்திற்கும் ஏற்ப,
சிறார்களுக்கு...

PRE FOUNDATION — படிப்படியாக ஆங்கில அறிவை
FOUNDATION — விருத்தி செய்யும்
LEVEL 1,2,3,4 — 6 மாத கால பாடநெறிகள்

G.C.E. (O/L), G.C.E. (A/L)
கற்றோருக்கு ....

IELTS — வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
DIPLOMA IN ENGLISH — வெளிநாடு / உள்நாடு தொழில் வாய்ப்புகளுக்கு
CERTIFICATE IN ENGLISH — சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு

## BRITISH BUSINESS SCHOOL

நல்லூர் (1) : No: 140, Temple Road, Nallur, Jaffna. Tel: 021 222 5796
நல்லூர் (2) : No: 34, Saddanathar Road, Nallur, Jaffna. Tel: 021 222 4060
சுன்னாகம் : Lakshmi Cottage (Near the New Court), K.K.S Road, Mallakam.
மானிப்பாய் : 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay.
புலோலி : Sri Pathmanathanillam, Manthikai.


## ஓராண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 16 * 07 * 1948 |  | 09 * 01 * 2008 |

### அமரர் நாகமுத்து வேலாயுதம்
[பிரபல மெக்கானிக்கர்] - கூழாவடி

என்றும் அணையாத தீபச்சுடரே!
எம்மைவிட்டு அணைந்தது ஏனோ
அணையாத எங்கள் குலவிளக்கே!
எம்மைவிட்டு குலைந்தது ஏனோ
பூத்திருந்த உயிரோவியம் மண்மனையில் வாடி
வீழ்ந்ததேனோ
அன்புக்கு ஓர் அப்பாவாய்
அறத்துக்கோர் ஆசானாக
இல்லத்துக்கு ஓர் முதல்வனாய்
மனை சிறக்க வாழ்ந்த தெய்வமே!
ஓர் ஆண்டு அல்ல எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் சிரித்த
முகமும் பூரித்த உம் சேவையும்
எங்கள் மனதைவிட்டு நீங்காது ஆறாது.

நவாலி வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.

(80970)





"மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், ஒரு வர்த்தகவியல் பட்டதாரி. செலிங்கோ லை.்பில் சேர்ந்துகொண்ட பின்பே துரிதமாக வாழ்க்கையில் முன்னேறினேன். 2002ஆம் ஆண்டில் விற்பனை ஆலேசகராக இணைந்த நான், குறுகிய காலத்திற்குள் முன்னேறி இப்பொழுது மட்டக்களப்புக் கிளையில் பதில் உதவி விற்பனை முகாமையாளர் பதவியை வகிக்கின்றேன். என்னைப் போல வாழ்க்கையில் முன்னேற உங்களுக்கும் விருப்பமா?"

ரி.எம்.எஸ். சுசிலன்
பதில் உதவி விற்பனை முகாமையாளர் மட்டக்களப்பு கிளை

## வாழ்வில் வெற்றியீட்ட எங்களுடன் இணையுங்கள்

"நான் 19 வருடங்களுக்கு முன் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் விற்பனை ஆலோசகராகவே இணைந்தேன். இதிலிருந்து படிப்படியாக முன்னேறி, இன்று வியாபார அபிவிருத்தி முகாமையாளராக உயர்ந்துள்ளேன். வாழ்க்கையில் முன்னேற விரும்புவோருக்கு செலிங்கோ காப்புறுதி நிறுவனம் ஒரு சிறந்த களமாகும். நீங்களும் இதில் இணைந்து முன்னேறுங்கள்."

T. விஜயநாத்
வியாபார அபிவிருத்தி முகாமையாளர்



### விற்பனை மேற்பார்வையாளர்கள் / விற்பனை ஆலோசகர்கள்

விற்பனை பணிகளில் அனுபவம் வாய்ந்த, உற்சாகமான விற்பனை மேற்பார்வையாளர்களும் விற்பனை ஆலோசகர்களும் எமக்குத் தேவைப்படுகின்றனர். நீங்கள் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் சிறந்த தலைமைத்துவ ஆற்றல், தொடர்பாடல் திறமை, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டவராகவும் இருந்தால், எம்முடன் இணைந்து வாழ்க்கையில் வெற்றியீட்டுங்கள். உங்கள் திறமைக்கேற்ப விசேட பயிற்சி, தலைமைத்துவ ஊக்குவிப்பு மற்றும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் அதிகூடிய மாதாந்த வருமானத்தைச் சம்பாதிப்பதோடு வேறு பல அனுகூலங்களையும் பெறுவீர்கள்.

உங்கள் விண்ணப்பப் படிவத்தை இன்றே செலிங்கோ லை.்ப் கிளையொன்றில் பெறுங்கள்.

விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்பும்போது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை அணி" என்று குறிப்பிடவும். ஈ-மெயில் மூலம் அனுப்புவதாயின், Subjectஇல் Sales Force என்று குறிப்பிடவும்.

## செலிங்கோ லை.்ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி


134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் ... ஈ-மெயில்: jobs@ceylife.lk இணையத்தளம்: www.ceylincolife.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்!



கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பின்னர் மக்களின் அனைத்து சுதந்திரங்களும் பறிக்கப்பட்டுள்ளன. அச்சம் நிறைந்த சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்றனர்.

கிழக்கில் கைது, ஆள்கடத்தல், கொலை என சம்பவங்கள் தினமும் இடம் பெறுகின்றன. வாய்திறந்து சொல்ல முடியாதளவுக்கு இன்று கிழக்கில் நிலைமை மாறியுள்ளது. இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்தும் கிழக்கில் இன்னும் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை.

அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாது மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இன்னும் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட சேனையூர் கட்டை பறிச்சான் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அம்மக்கள் தெரிவிக்கும்போது.... ''உடைந்த - இடிந்த எமது வீடுகளில் நிறுவனங்கள் தந்த படங்குகளை போட்டு அதற்குள் வாழ்கின்றோம். மழையில் நனைகின்றோம். வெயிலில் காய்கின்றோம். அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகளைத் திருத்தி தருவதாகக் கூறுகின்றன. ஆனால், உடைந்த இடங்களுக்கு சிமெந்து பூசி அரைகுறையாகவே வீடுகள் திருத்தப் படுகின்றன. இதனால், சிலர் இப்படியான திருத்த வேலைகள் வேண்டாம் எனக் கூறிவிட்டனர். இந்த நிலையில் சில அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் எமக்கு உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகின்றன. ஆனால், விநியோகநேரம் உரியவர்கள் இல்லாத இடத்து நிவாரணப் பொருள்களை அவர்களின், உறவினர்களிடம் கூட வழங்க மறுக் கின்றனர். வேலை விடயமாகவும், வேறு விடயங்களாகவும் ஊரைவிட்டு, வேறு ஊர்களுக்கு அம்மக்கள் சென்று வர வேண்டிய நிலைமை இருப்பதால் நிவாரணம் வழங்கும்போது பலர் அங்கு இருப்பதில்லை. சில நிறுவன உத்தியோகத்தர்கள் நிவாரணங்களை வழங்கும்போது மக்களுடன் பண்பாக நடந்து கொள்வதில்லை.'' என்று அவர்கள் கூறினர்.

இதேவேளை கிழக்கில் சம்பூர் உட்பட இன்னும் பல பிரதேச மக்கள் மீள் குடியமர்த்தப்படாமல் கிழக்கில் உள்ள நலன்புரிநிலையங்களில் கண்ணீருடன் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் கிழக்கில் மக்கள் ஜனநாயகத்துடன் வாழ்கின்றார்கள் என அடிக்கடி உள்நாட்டில் மாத்திரமல்ல வெளிநாடு களிலும் அரசாங்கம் பரப்புரைகளை மேற்கொண்டு வரும் வேளையில் கிழக்கில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. கிழக்கில் முழத்துக்கொரு இராணுவ காவலரண் அமைக்கப்பட்டு பிரதான வீதிகளில் பயணிப்பவர்கள் மீது சோதனைக் கெடுபிடிகள் இடம் பெறுகின்றன. ஆனால், இராணுவத் தினால் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ அல்லது அவர்களை கைது செய்யவோ முடியவில்லை. ஆனால், புலிகளின் உறவினர்கள் மற்றும் முன்னாள் போராளிகளைக் கடத்துவதற்கு என நீண்ட பெயர்பட்டியலுடன் இரவு நேரங்களில் தேடுதல் நடக்கிறது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மற்றொரு பாஸ்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிப்பதாக இருந்தால் வாழைச்சேனையிலிருந்து செல்பவர்கள் கும்புறுமூலை இராணுவ முகாம், மையிலம்பாவெளி இராணுவ முகாம் ஆகியவற்றில் தம்மை அடையாளப் படுத்துவதுடன் அவர்கள் வழங்கும் பாஸைத்தான் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு தெற்குப் பகுதிக்கு வரும் மக்கள் அனைவரும் மன்னம்பிட்டியில் வைத்து தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கடுமையான யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட இவ்வாறான இராணுவ கெடுபிடிகள் இடம்பெறவில்லை. குறித்த இராணுவ சோதனைச் சாவடியில் தமிழர்கள் மாத்திரம் இவ்வாறான கெடுபிடிகளுக்கு உள்ளாகின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. முஸ்லிம்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப் படுவதாக தெரிவிக்கப்பட்டாலும் அவர்கள் கெடுபிடிகளுக்கு உள்ளாவதில்லை.

கிழக்கில் மாகாண சபை செயற்படத் தொடங்கி ஏழு மாதங்கள் முடிவடைத் துள்ளன. ஆளும் தரப்பிலுள்ளவர்கள் தமிழ்மக்கள் விரும்பும் சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்களா? அல்லது வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்களா?

**கிழக்கவதானி**

எதுவுமில்லை. மாறாக தமிழ் மக்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்கள். சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இதுதான் உண்மை. ✱

---

# சட்டத்தின் பிடியில் ருவாண்டாவின் இனப்படுகொலை சூத்திரதாரி



1994 இல்ருவாண்டாவில் டுட்ஸி இனத்தவர்கள் கொலைசெய்யப்பட்டதை மனித குலத்துக்கு எதிரான பாரிய குற்ற மாக கருதுபவர்களுக்கு இது நிம்மதியளிக்கும் கிறிஸ்மஸ் என்கின்றது அந்த நாட்டின் ஊடகமொன்று.

டுட்ஸி இனத்தவர்கள் கொலை செய்யப்பட்டதற்கான முக்கிய சூத்திரதாரியான பகொசொராவுக்கு ஐக்கிய நாடுகளின் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளமை குறித்தே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இனப்படுகொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் இவர்மீது சுமத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஹூட்டு பெரும்பான்மை இனத்தவர் களால் டுட்ஸி சிறுபான்மை இனத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இவர் இருந்தார் என்பது வெளிப்படை.

எனினும், பின்னர் இவர்மீது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைக் கொலைசெய்த குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. இனக் கொலைகள் நடைபெற்ற காலப்பகுதியில் ருவாண்டாவின் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சரவை இயக்குநராகப் பதவி வகித்தவர் பகொசொரா.

ருவாண்டாவின் ஜனாதிபதியாக 1973 முதல் 1994 வரை பதவி வகித்த யுவெனல் கப்யரிமானாவின் சொந்த பிராந்தியத்தில் பிறந்தவர் பகொசொரா. ஜனாதிபதியின் மனைவியுடன் தொடர்புபட்ட அகாசு இயக்கத்துடன் இவர் நெருங்கிய தொடர்பு வைத்து இருந்தவர்.

ஜனாதிபதியின் மனைவியான அகத்தே, ஹூட்டு (HUTU) இனத் தீவிரவாதி என்பது முக்கியமானது.

இனக்கொலைகள் இடம்பெறுவதற்கு ஒருவருடத்துக்கு முன்னர் நடைபெற்ற அருஷா ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் பகொசொரா கலந்துகொண்டாலும் அவர் அதனை ஆதரிக்கவில்லை.

'பேச்சுவார்த்தைகளில் எதனையும் சாதிக்கமுடியாது. டுட்சி இனத்தவர்களை அழிப்பதே பிரச்சினைக்கான ஒரே தீர்வு' என இவர் தெரிவித்து வந்ததை ஏனைய இரா ணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

நாட்டின் சகல பகுதிகளிலும் செயற்படக் கூடிய வகையில் இன்டரஹம்வே என்ற ஆயுதக் குழுவை உருவாக்கியவரும் இவரே. இக்குழுவினர் இராணுவம், பொலிஸ் ஆகிய வற்றுடன் இணைந்து செயற்பட்டனர். ருவாண்டா முழுவதும் இந்த ஆயுதக்குழு வுக்கு கத்திகள் விநியோகிக்கப்பட்டன.

ஜனவரி 1993 முதல் 1994 வரை ருவாண்டா 500,000 கத்திகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது. முன்னைய வருடங்களை விட இது பன்மடங்காகக் காணப்பட்டது.

மேலும் எதிரிகள் என இனம் காணப் பட்டவர்களின் பெயர்ப்பட்டியலும் தயாரிக் கப்பட்டு, இனக்கொலைகளுக் கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

1994 ஏப்ரல் 6 ஆம் திகதி ஜனாதிபதி கப்யரிமா கூட்டமொன்றில் கலந்து கொண்டு தலை நகர் கிஹாலிக்கு திரும்பிக் கொண் டிருந்தார்.

அவ்வேளை அவரது விமானத்தை நோக்கி இரு ஏவுகணைத் தாக்குதல்கள் இடம் பெற்றன. விமானம் வீழ்ந்து நொருங்க ஜனாதிபதி உட்பட அனைவரும் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதியின் மரணத்தை வானொலி அறிவித்த அந்தத் தருணத்தில் இருந்தே இனக் கொலைகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதியின் விமானம் மீதான தாக்குதலுக்கு யார் காரணம் என்பது இன்றுவரை உறுதி செய்யப்படவில்லை.

எனினும், பகொசொராவே இதற்கு காரணம் என்ற சந்தேகம் ருவாண்டாவில் காணப்படுகின்றது.

இதன்பின்னர் பிரதம மந்திரி அகத்தே கொல்லப்பட்டதற்கும் பகொசொராவே காரணம் என ஐக்கிய நாடுகளின் சர்வதேச நீதிமன்றம் குற்றம்சாட்டியுள்ளது.

ஜனாதிபதியின் படுகொலைக்கு பின்னர் ஏனைய அதிகாரிகளுடன் இணைந்து அவசர கூட்டமொன்றை நடத்திய பகொசொரா ஐக்கிய நாடுகளின் இராணுவத் தளபதியிடம் ருவாண்டாவின் அதிகாரத்தை இராணுவம் பொறுப்பேற்க வேண்டுமென வாதாடினார்.

எனினும், ஐக்கிய நாடுகளின் இராணுவ அதிகாரி இதனை மறுத்ததுடன் பிரதமர் அகத்தேயே ஆட்சிப்பொறுப்பை ஏற்க வேண்டுமென வற்புறுத்தினார்.

பிரதமருக்கு இதற்கான திறமையில்லை என பகொசொரா கடுமையாக எதிர்த்துள்ளார்.

இதற்கு சிலமணிநேரத்தின் பின்னரே பிரதமர் அகத்தே படுகொலை செய்யப்பட்டார்.

பிரதமர் அகத்தேயின் இறுதி நிமிடங்கள் மிகவும் துல்லியமாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அகத்தே ஆபத்தை எதிர்கொண்டுள்ளதை உணர்ந்த ஐக்கிய நாடுகளின் இராணுவ அதிகாரி ரோமியேலைரே பெல்ஜியம் மற்றும் கானா படைகளை அனுப்பினார். எனினும் பிரதமரை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

பகொசொராவினால் அனுப்பப்பட்ட படையினரிடமிருந்து தப்புவதற்கு முயன்ற பிரதமரை கொடூரமாக கொலைசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து ருவாண்டா படையினர் பெல்ஜியத்தைச் சேர்ந்த 10 இராணுவ வீரர்களை சித்திரவதை செய்து கொல்ல பெல்ஜியம் தனது படையினரை அவசரமாக விலக்கிக்கொள்ள டுட்ஸி இனத்தவர்கள் மீதான வேட்டை ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து ருவாண்டா முழு வதும் இனப்படுகொலைகள் ஆரம்பமாகின.

மிகமுக்கிய டுட்ஸி இனத்தவர்களும் ஹூட்டு இனத்தைச் சேர்ந்த

**ரஜீவன்**

மிதவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இவர்கள்கொல்லப்படவேண்டுமென முன்னரே பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.

ருவாண்டாவின் ஹூட்டு இன சார்பு வானொலியான மில்லே கொலினெஸ் வானொலி டுட்ஸி இனத்தவர்களை கொலைசெய்யுமாறு தூண்டிக்கொண்டிருந்தது.

அடுத்த 100 நாள்களில் பாரிய இனஅழிப்பொன்று இடம்பெற்றது. 800,000 முதல் 10,000, 000 வரையான சிறுபான்மை டுட்ஸி இனமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன்பின்னர் பகொசொரா அயல்நாடான ஸயருக்கு தப்பியோடினார். அங்குள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்த டுட்ஸி இனத்தவர்களை முற்றாக அழிப்பதற்கான திட்டங்களை தீட்டினார் என்கிறது சர்வதேச நீதிமன்றம்.

ஸயரிலிருந்து கமருனுக்கு ஏனைய ஹூட்டு இனத் தலைவர்களுடன் தப்பிச்சென்ற வேளையே பகொசொரா 1997 இல் கைதுசெய்யப்பட்டார்.

முதன்முதல்தான் சானியாவின் அருஷாவில் அமைக்கப்பட்டிருந்த ருவாண்டாவுக்கான சர்வதேச நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை 11 சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாக இவர்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

எனினும், இக்கொலைகள் திட்டமிட்டவை என்பதற்கான ஆதாரமில்லை. ஆகவே, இவற்றை இனக்கொலை என கூறமுடியாதென நீதி மன்றத்தில் பகொசொரா வாதாடினார்.

'நான் எவரையும் கொல்லவில்லை, உத்தரவிடவில்லை' என்றார்.

ஆனால், ஐக்கியநாடுகளின் முக்கிய இராணுவ அதிகாரியோ, இவர்தான் முக்கிய சூத்திரதாரி என்கிறார். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த நான்கு தசாப்தங்களாக சிறுகதைகளை எழுதிவரும் புலோலியூர் க.தம்பையாவின் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் ஈழத்தில் வெளியான, வெளியாகும் அநேக பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளன. அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பல போட்டிகளில் இவரது சிறுகதைகள் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்கப் பதக்கங்களையும் தட்டிக் கொண்டன. இவர் 2008 ஆம் ஆண்டுக்கான (இலக்கியத்துக்குரிய) கலாபூஷணம் விருதையும் பெற்றுள்ளார்.

இவரது தரமான 14 சிறுகதைகள் அடங்கிய 'அழியும் கோலங் கள்' சிறுகதைத் தொகுதி 1999 ஆம் ஆண்டில் வெளியாகியது.

நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர்.

'ஊரோடு மாற்றம்', 'ஓர் ஆசிரியை அநாதையாகிறார்', 'பணக்கார அனாதைகள்' என்பவை இவரது தரமான சிறுகதைகளில் சிலவாகக் கணிக்கப்பெற்றன.

இவரது 'அழியும் கோலங்கள்' சிறுகதைத்தொகுதி அண்மையில் பருத்தித்துறை பிரதேசசபையால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு, எழுத்தாளரும் கௌரவிக்கப்பட்டார்.



# சிநேகிதி

சிறுகதை

இது ஒரு கிராமமுமல்ல, நகரமுமல்ல. இடைப்பட்ட ஊர். இந்த ஊரில் நான்கு மாப்பிள்ளைகள் தான் இருக்கிறார்கள். அதாவது பெண்களைப் பெற்ற தகப்பன்மார்கள் கண்களுக்கு: காரணம், இந்த நான்கு பேர்களும்தான் இந்த ஊரில் காற்சட்டை போட்ட உத்தியோகத்தர்கள். இவர்களை விட வாலிபர்கள் ஊரில் உள்ள குமர்ப்பெண்களின் எண்ணிக்கையை மிஞ்சி இருந்தபோதும், அவர்கள் கமம் செய்வதாலும், கடைகள் வைத்திருப்பதாலும் பெண்களைப் பெற்ற பெற்றோர்களுக்கு இந்த வாலிபர்கள் மாப்பிள்ளைகளாகத் தெரியவில்லை. அவர்கள் கண்களில் அந்த நான்கு பேர்களும்தான் மாப்பிள்ளைகளாக வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த நான்கு மாப்பிள்ளைகளைக் காத்து நாற்பதுக்கு மேற்பட்ட குமர்ப்பெண்கள் இந்த ஊரில் இருக்கிறார்கள். எல்லோர் கண்களும் இந்த நான்கு மாப்பிள்ளைகள் மீதும் தான்! சொந்தத்தில் மாப்பிள்ளை இருந்தும் அவன் கமம் செய்கிறான், கடை வைத்திருக்கிறான் என்பதற்காக அவனுக்கும் பெருமாள் கோயில் மாடு மாதிரித் தலையை ஆட்டிவிட்டு இந்த நான்கு மாப்பிள்ளைகளுக்குமாகத்தான் காத்துக் கிடக்கிறார்கள் இந்த நாற்பது குமர்ப் பெண்களும்.

இந்த நான்கு உத்தியோகத்தர்களும் கொழும்பிலேதான் வேலை. இவர்கள் விடுமுறைகளுக்கு ஊருக்கு வரும்போதெல்லாம் இவர்களுக்கு இராஜோபசாரந்தான் நடக்கிறது. கொழும்பிலே மினுக்கிய சேர்ட், வேட்டி தரித்து, இவர்கள் வீதியில் உலா வருவதே தனிக்காட்சி: இவர்கள் இந்த நாற்பதுக்கு மேற்பட்ட பெண்களின் வீட்டுப்படலையருகால் போக நேரும் போதெல்லாம், பத்தடி உயரத்துக்கு வீட்டைச் சுற்றிக் காவலாக அடைக்கப்பட்டிருக்கும் கிடுகுச் செத்தைகளெல்லாம் சரசரக்கும்.

உத்தியோக மாப்பிள்ளையை நினைத்துப் பார்க்கக்கூடாத பெண்கள்கூட இந்த நான்கு மாப்பிள்ளைகளையும் நம்பித்தான் இருக்கிறார்கள். பொதுவாக இந்த நான்கு மாப்பிள்ளைகளும் கரை சேர்ந்த பின்தான் தாங்கள் கரைசேர்வது என்ற வைராக்கியமோ என்னமோ வரும் மாப்பிள்ளைகளையும் தட்டிக்கழித்துக் கொண்டே வருகிறார்கள்.

பணக்காரப் பெண்கள் தங்கள் மினுக்காலும், பணத்தாலும் இந்த நான்கு ஆசாமிகளையும் மடக்கிவிடலாம் என்று இறுமாந்துமிருக்கின்றனர். ஆனால் இந்த நான்கு மீன்களும் எந்தத் தூண்டில்களுக்கும் அகப்படாமல் துள்ளித்திரிந்து கொண்டிருக்கின்றன. இந்த நான்கு பேர்களில் திருவாளர் தியாகராசனும் ஒருவன். கொழும்பிலே நானூறு ரூபாவில் ஏதோ ஒரு உத்தியோகம்.

இப்போது தியாகராசன் விடுமுறைபெற்று ஊருக்கு வந்திருக்கிறான். தான் கண்ணை மூடமுன் தன் மகனுக்குக் கல்யாணத்தை முடித்துக் கண்குளிரப் பார்க்க ஆசைகொண்ட தந்தை சபாரத்தினம் தந்தியடித்துக் கூப்பிட்டிருக் கிறார் தியாகராசனை. இந்தப் பயணத் திலேயே தியாகராசனின் கல்யாணம் ஒழுங்காகிவிடும் என்பதில் சந்தேகமில்லை - காரணம் தந்தை கொண்டுவரும் எந்தப் பெண்ணுக்கும் தாலியைக்கட்டச் சித்தமாயிருக்கும் புத்திரன் தியாகராசன். ஆகவே இம்முறை தியாகராசன் கொழும்பிற்குத் திரும்பிப் போகும்போது புது நினைவுகளோடுதான் திரும்பிப் போவான் என்பதும் திண்ணம். நாற்பது பெண்களில் ஒருத்திக்கு அவன் மாலை போட்டாக வேண்டும். யாருக்கு அந்த மாலை?. இதுதான் தியாகராசனின் இப்போதைய பிரச்சினை.

தெருவால் போகும்போதெல்லாம் எல்லோர் கண்களும் தியாகராசனையே நோக்குகின்றன. வழிதெருவில் காணநேரும் பெண்களைப்பெற்ற அப்பாமார்களெல்லோரும் அவனைக் கண்டு ''தம்பி எப்ப வந்தது? எப்பபோற நோக்கம்? கொழும்பில் மழை தண்ணி எப்படி?'' என்ற சம்பிரதாயக் கேள்விகளை அன்புக்கணை தொடுத்துக் கேட்டுக் குசலம் விசாரிப்பதும், பெண்களைப் பெற்றுவிட்ட அவர்கள் வடக்கிலிருந்து தெற்குவரை தங்கள் தலையை ஆட்டி தியாகராசனுக்கு மரியாதை செய்யும் காட்சிகளும் இப்பொழுது தியாகராசனுக்குப் பழக்கமாகிவிட்டன.

'இந்த நடப்பெல்லாம் ஒரு கல்யாணத்தோடு ஒழிந்து விடும்' என்பதை நன்கறிவான் தியாகராசன். உத்தியோகத்துக்கு அடிமையாகிவிட்ட இந்த மனிதர்களையும், பெண்களையும் நினைத்து மனம் வருந்தினான் தியாகராசன்.

''தியாகு உனக்கு இங்கை கேட்டிருக்கினம், அங்கை காசாய் முப்பதினாயிரம், நாற்பது பெறுமானமான புதுவீடு, அது இது'' இப்படிப் பல பெரிய இடங்கள் தியாகராசனுக்குப் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால் அவன் கையில் இருப்பதுவோ ஒரே ஒரு தாலி. இதை யாருக்குக் கட்டுவது - இதுதான் தியாகராசனின் இன்றைய பிரச்சினை.

'இப்போது நான் ஏலப்பொருள். ஏலச் சந்தை இன்று கூடியிருக்கிறது. ஏலம் கூறுபவர் என் தந்தை. இந்த ஏலத்தில் என்னை எந்தத் தந்தை கூடவிலை கேட்கிறாரோ அவருக்கு மருமகனாகப் போக வேண்டியவன் நான். மனிதனின் மதிப்பு இப்படியா முடிவு பெற வேண்டும்?' என்று நினைத்த போது தமிழர்களின் கல்யாண முறையை வெறுத்தான் தியார்கராசன்.

தியாகராசனிடம் நேரடியாகவே தந்தை விடயத்தை ஆரம்பித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சொற்களில் இருக்கும் இனிமை நம்பிக்கையை உருவாக்கும்; சிந்தனையில் உள்ள கனிவு ஆழ்ந்த அறிவைத் தரும்

சீனத்தத்துவஞானி கன்ஃபூஸியஸ் என்பவரிடம் அவருடைய சீடர் ஒருவர் ''தங்களிடம் தேச நிர்வாகத்தை ஒப்படைத்தால் தாங்கள் செய்யும் முதல் வேலை என்ன? என்று கேட்டார்.

''நிச்சயம் மொழியைச் சீர்செய்வது தான்'' என்றார் அவர்.

அங்கு குழுமியிருந்தவர்கள் மிக்க ஆச்சரியம் அடைந்து ''மொழிக்கும் நிர்வாகத்துக்கும் சம்பந்தம் என்னவோ?'' என்றார்கள்.

''மொழி செம்மை பெறாவிடில் எதைச் சொல்ல விரும்புகின்றார்களோ, அதைக் கேட்கிறவர் கள் தெளிவுற, ஐயம் திரிபற அறிந்து கொள்ளும் முறையில் அறிந்துகொள்ள முடியாது. நினைக்கப்பட்டது சொல்லப் படவில்லையானால் எது செய்யப்படவேண்டுமோ அது நிறை வேறாது. நிறைவேற வேண்டியது நிறைவேறாமல் போகும். ஒழுக்கமும் பண்பும் குறையும்; மயக்கமும் குழப்பமும் உண்டாகும். எனவே சொல்லப்படுவதில் ஐயம் ஏதுவும் இல்லாமல் தெளிவாக இருக்க வேண்டும். ஆகவே, மொழி செம்மையுற வேண்டியது எல்லாச் செயல்களுக்கும் முன் நிற்கிறது'' என்றார் கன்ஃபூஸியஸ்.

''நாம் பிறருடன் பேசும்போதும் பழகும் போதும் ஓர் உறவு நிச்சயிக்கப்படுகிறது. நமது முகபாவத்தின் மூலமும் சொல்லின் மென்மையிலும் கனிவிலும் அந்த உறவு பின்னப்படுகிறது. அந்த உறவின் நுனியிலிருந்துதான் மேலே பல புதிய உறவுக் கொடிகள் படருகின்றன. பசுமையையும், குளுமையையும் மணத்தையும் அந்த உறவுகள் பரப்புகின்றன''.

டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தியின் ''பேச்சு'' பற்றிய கருத்துக்கள் இவை.

''சொற்களில் இருக்கும் கனிவு நம்பிக்கையை உருவாக்குகிறது; சிந்தனையில் இருக்கும் கனிவு ஆழ்ந்த அறிவை உருவாக்கு கிறது'' என்றார் 'லாகூ' என்ற அறிஞர்.

''ஓர் அன்பான வார்த்தை வசந்தகாலத்துப் பசும்புல் போல் இன்பம் அளிக்கும்'' என்கிறது ஒரு ரஷ்யப் பழமொழி.

''சொல் நயத்தினை
நாடி, நாடி
தோழியருடன்
கூடிக் கூடி
நன்னகர்த் திரிகூடம்
பாடி
தகிர்தத் தகிர்தத் தகிர்தத்
தொம்மெனப்
பந்து அடித்தனளே
வசந்த சுந்தரி
விந்தை ஆகவே''

குற்றாலக் குறவஞ்சியில் வரும் இப் பாடல் வரிகள் சொல்நயத்தினை நாடிச் செல்கின்றன, நாடச் சொல்கின்றன.

சொல்நயம் உடையவர்கள், சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய மனத்தொண்டர்கள்.

''சொல்லும் பொருளுமாய் நிறைந்த சுகமே'' என்கிறார் - இராமலிங்க சுவாமிகள்,

''பாலிலும் சொல் இனியாய்.......'' என்பது - அபிராமிப்பட்டர் வாக்கு.

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்'' என்கிறார் குமரகுருபரர்.

''வாக்கினிலே இனிமை வேண்டும்'' என்பது பாரதியாரின் விருப்பம்.

## வார்த்தைகள் பூக்கள் போன்றவை முறையாகத் தொடுத்தால் அது அழகுமிளிரும்

''கல்லைக் கனித்திடும்
நெஞ்சக்கனலொடு
சொல்லில் வரவேண்டும் அந்தக்
காவியச் சொல்லிலே
காளை மிடுக்கொடு
புல்லில் எழவேண்டும்!
ஊற்றை இறைப்பது
போலே மனத்தை
இறைத்து வரவேண்டும்-அங்கே
ஊறும் புதுமையை
ஓங்கிய சொற்களில்
ஊற்றித்தரவேண்டும்!''



சாலை இளந்திரையன் தமது கவிதை யில் சொல்லின் சுவை பற்றி இவ்விதம் சொல் கிறார்.

(அறம் இதென்றும் மறம் இதென்றும் அறிவிலாதபோது தமிழ் இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக்காட்ட மாட்டாயா? கண்ணே, இயம்பிக் காட்ட மாட்டாயா?'' என்று கனிவுடன் கேட்டார் பாரதி தாசன்.

''நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை என்ப வாய்மைக்குடிக்கு''

என்ற வள்ளுவர்

''விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

''இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன் சொலாற்
தான் கண்டனைத்திவ்வுலகு''

என இன்சொலின் சிறப்பை தெளிவுபடுத்தினார்.

''மென் மதுரவாக்கால்
விரும்பும் சகம்;
கடின வன்மொழியினால்
இகழும் மண்ணுலகம்''

என்கிறது நீதிவெண்பா.

''நாநலம் என்னும் நலனுடைமை'' என்றும், ''பேச்சு சிறந்த அணிகலன்'' என்றும் ''நயன் ஈன்று நன்மை பயக்கும்''- இன்பம் தரும் என்றும் எடுத்துக் கூறும் வள்ளுவர்,

பேச்சை எப்படி நிகழ்த்தலாம் என்பது பற்றிய ஆலோசனையில்-

அவை அறிந்து ஆராய்ந்து கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து- தன்கடமை அறிந்து காலத்தை எதிர்நோக்கி தக்க இடத்தையும் அறிந்து, வகை அறிந்து- அவைக்களத்தின் வகையினை அறிந்து,-திறன் அறிந்து- சொல்லின் திறத்தை அறிந்து, கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் சொல்லும்போது கேட்டவரைத் தன்வசப்படுத்தும் பண்புடன், வேட்பத்தாம் சொல்லி-பிறர் விரும்பும் படியாக குறிப்பறிந்து, காலம் கருதி, வேட்பச்சொல்லி-குறிப்பை அறிந்து தக்க காலத்தை எதிர்நோக்கி விரும்புமாறு சொல்லி, எண்பொருளவாகச் செலச்சொல்லி- எளிய பொருளுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தூவாத நீக்கி நசச்சொல்லி- பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும் அவற்றுள் பயனற்றவைகளை நீக்கியும், மகிழுமாறு சொல்லியும் என்பவர், அன்பறவு ஆராய்ந்த சொல்வன்மை இன்றியமையாத மூன்று என்று குறிப்பிட்டு, சொற்களில் பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும் என ஆலோசனையை இதயத்துக்கு இதமாக கூறுகிறார்.

இசைப்பாடல்களில் கூட பேச்சின் சுவை பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

''தேன்சுவைத்தமிழ் பேசி
தெம்மாங்கு இசை பாடி,
கன்னல் மொழி பேசி
காலமெல்லாம் உறவாடி.....
இன்பமெல்லாம் கண்டிடலாம்....''

''தமிழ் மொழிபோல
சுவையூறும் செந்தேனே...''

''சிந்தும் செந்தேனும்
சொல்லில் ஊறுதே.....''

''கனியே கன்னல் தமிழே மொழியே
பனிதூங்கும் மலரே இதழே....''

''அன்பு மொழி பேசிவிட்டால்
துன்ப நிலை மாறிவிடும்......''

''உன்னிடம் சொல்வதற்கு இங்கு
ஒன்றல்ல நூறிருக்கு....''

''வந்தால் பேச நிறையச்சேதி
நெஞ்சில் இருக்குது.....''

போன்ற கவிதைவரிகள் இனிய இசை கலந்து வரும்போது கேட்பதற்கு இதயத் துக்கு இதமாக இருப்பதோடு, பேச்சின் சுவை பற்றியும் மேலும் அறிய முடிகிறது.

குரல் என்பது மிகச்சிறந்த தகவல் பரிமாற்ற முறை. வெறும் எண்ண[illegible] வெளிப் பாடு அல்ல குரல். உணர்வுக[illegible] வெளிப் பாடு தான் குரல். ஒருவருக[illegible] தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு பேச்சு, குரல் என்பன மிக முக்கியம் என்ற ஆலோசனையையும் பேச்சின்போது கருத்தில் கொள்வது பயனுள்ளதாகவே இருக்கும் எனக் கருதலாம்.

''ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஒரு காலத்தில் மகிழ்ச்சியுடன் பயன்பட்டதே ஆகும்'' என்றார் எமர்சன்.

''வார்த்தைகள் பூக்களைப் போன்றவை. அவை ஒவ்வொன்றையும் தொடுக்கப்பட வேண்டிய விதத்தில் தொடுத்தால் மட்டுமே அதன் மதிப்பைப் பெறமுடியும்'' என்கிறார் வேறொரு அறிஞர்.

''ஓர் அறிவுள்ள மனிதனுடன் நடத்தும் ஓர் உரையாடல் பத்து வருட புத்தகப் படிப்பைவிட மேலானது'' என்பது லோங் (f)பெலோ என்பவரது கருத்து.

''துள்ளு நடைபோட்டுவரும்
செ[illegible] காண்போம்,
சொக்கி நிற்போம்.''

க.கணேசலிங்கம்

# நிஷா! உனக்கு யார் தந்தது விசா?

நிச்சயமாய் நீ வருவது
எனக்குத் தெரியாது;
உன் வருகையை நான்
எதிர்பார்த்தும் இருக்கவில்லை

நீ வருமுன் மின்னல் தீபங்கள்
ஏற்றவில்லை- முழக்க
மேளங்கள் ஒலிக்கவில்லை
மழைத்துளிகள் மட்டுமே இங்கு
பன்னீரைச் சொரிந்து கொண்டனவாதலால்
எவ்வாறு உன்னை நான்
எதிர்பார்க்க முடியும்?

தென்றலாய் வீசும் தேவதை நீ
புயலாய் மாறி, இராட்சசி
ஆவதை எவ்வாறு ஏற்கமுடியும்? இப்படி நீ
நள்ளிரவில் வந்து நாசம் செய்வாயென
யார்தான் எதிர்பார்த்தார்?

உன் தீராத கோபத்துக்குக்
காரணம் தானென்ன?
எந்தப் பாண்டியன் உன்
கணவனைக் கொன்றதாய்க் கருதினாய்?

இரத்தம் ஓடும் தீவில் ஏன்
உன் கண்ணீர்த் தண்ணீரை கலக்க
விட்டாய்?
''மனிதப் பேய்''களின் அநியாயம்
போதாதென்றா நீ பேயாட்டம் போட்டாய்?
சுந்தர பூமியில் எதற்காக இந்தச்
சிலம்பாட்டம்?

உன்னால் இலைகளைக்
களைந்த கிளைகள் எத்தனை?
வேர்களை இழந்த
மரங்கள் எத்தனை?
முடிகள் முறிந்த
குடில்கள்..... படிகள் உடைந்த
பந்தல்கள்..... எத்தனை? எத்தனை?

குடியிருந்த கூட்டிலிருந்தே
அடியோடு கலைக்கப்பட்ட
உயிர்கள்.....அவை
பசியோடு இருந்த நாள்கள்
எத்தனை?

போதும் உன் சதிராட்டம்
''நிஷா''; மங்கையவள்
பெயர் கொண்ட உன் செயலில்
ஏன் இந்தப் பேயாட்சி?

இனியும் வேறு பெயர் எடுத்தெம்மை,
வேரோடு நீயழித்து
விடாதே.......!

கீ.பி.நிதுன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருண்டு திரண்டு பெருக்கும் மரங்கள் வட்டிக்கு மேல் வட்டிதரும் வங்கிகளே!

மரவளத்துக்கு ஏற்படும், ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் குறித்து இப் பகுதியில் ஆராய்வது பொருத்தமானதொன்றாய் அமையும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள அநேகமான மாமரங்களில் குருவிச்சை ஒட்டுண்ணியாகி வளர்ந்து மாமரமே குருவிச்சை மயமாகியிருக்கும் தன்மையை அவதானிக்கலாம். குருவிச்சை பாரதூரமான ஒரு ஒட்டுண்ணித் தாவரமாகும். இது இலகுவாக மாமரத்திலே ஒட்டி முழுவதுமாகவே வளர்ந்து மாமரத்தையே ஏப்பமிடக்கூடிய சக்தி வாய்ந்தது.

பல்கலைக்கழகத்தில் சரிந்து விழுந்த தல விருட்சத்தை, அதில் வளர்ந்த குருவிச்சை மலினப்படுத்தியிருக்கிறது. மரம் தன்னிலை குலைவதற்கு குருவிச்சையும் ஒரு முக்கியமான காரணம். இவ்வாறான குருவிச்சை வளர்ந்துள்ள மரங்களைத் தேவையேற்படுமிடத்தில் கத்தரித்து ஒட்டுண்ணித் தாவரத்தை மழை காலமான இப்போது வெட்டி அகற்றுவது மிகவும் நல்லது. இங்கே மரத்திலேறி இவற்றை வெட்டி விடுவதற்கு ஆள்தேடுவது பிரச்சினையாக இருக்கிறது. குருவிச்சையை வெட்ட வருபவரும் நம்பிக்கையான ஆளாக இருக்க வேண்டும்.

**கடந்த மாத இறுதியில் சற்றும் எதிர்பார்த்திராத வேளையில் யாழ்.குடாநாட்டை ஒரு கலக்குக் கலக்கி ஓய்ந்துள்ளன மழையும் 'நிஷா' சூறாவளியும்.**

**அவற்றின் நேரடியான - உடனடியான பாதிப்புக்களைவிட, வெளிப்படையாகப் புலப்படாத பல்வேறு பாதிப்புக்களின் தாக்கத்துக்கு இன்று குடாநாட்டு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.**

**இந்த நிலையில், இனத்துக்கேயான நற்பண்பையும், மனிதத்தையும் கைவிட்டு, இயற்கையின் அழிவைச் சீர்செய்யப்போய் அழிந்தவைபோக, -குடாநாட்டின் எஞ்சிய மரவளத்தையும் கட்டுப்பாடின்றி சேதப்படுத்திவரும் சாத்தியங்கள் தெரிகின்றன. இவற்றைச் சுட்டிக்காட்டுவதுடன் 'நிஷா'வின் தாக்கத்தால் எமக்கேற்பட்ட இழப்பினை மீண்டும் நேர்சீர் செய்ய மேற்கொள்ள வேண்டிய அவசிய-துரித செயற்பாடுகள் குறித்தும் விளக்கும் கட்டுரைத் தொடரின் இறுதிப் பகுதி இது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு மாதத்திற்கு முன்பு இப்படியும் நடந்தது! மாமரத்தை கத்தரிப்பதற்கெனவும், தென்னையில் சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஒரு சிறு குழு விவசாய பீடத்தினாலும், விவசாய விரிவாக்கத் துறையினாலும் கொடுக்கப்பட்ட கையேட்டின் போட்டோப் பிரதியைக் காட்டி கணிசமான அளவு பணத்தைக் கறந்து சென்றதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தோம்.

**உழைப்பவர்களுக்கு மத்தியில் இப்படி ஓர் ஏமாற்றுப் பிழைப்பு**

மரம் நட்டு, நாற்றுப் போட்டு உழைக்கும் மனிதர்களிடையே மரம் வெட்டி குறுக்குவழி தேடிப் பிழைக்கும் புல்லுருவிகளையும் எம்மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். இதிலே விவசாய சம்மேளனங்கள் திட்டமிட்டுச் செயலாற்ற வாய்ப்பு இருக்கின்றது. ஊருக்காக உழைப்பவர்களை ஒன்று திரட்டி ஒரு விழிப்புக்குழு அமைத்து அவ்வூரிலே நடப்பவைகளையும் கண்காணித்தல் வேண்டும். தன் கையே தனக்குதவி என்பது இதுதானே!

**வேளாண் காடுகளுக்கான வாய்ப்பு**

உலகம் முழுவதும் நடைபெறும் நகரமயமாக்கலிலே போர்மேகம் சூழ்ந்திருக்கும் எமது இந்தப் பிரதேசமும் விதிவிலக்கல்ல. சிமெந்து இல்லை, கம்பிகள் இல்லை என ஒருபக்க புலம்பல்களுக்கு நடுவே, வளமான மண்ணில் கட்டடங்கள் எழும்புகின்றன. வெளிநாட்டுப் பணத்தினால் வந்த வினைகளில் இதுவுமொன்று. நிலத்தை வாங்கிவிட்டால் பரவாயில்லை. நின்ற மரமனைத்தையும் வெட்டி அதிலே பணத்தை இறைத்தொரு ஆடம்பரவீடு. வெளிநாட்டிலிருப்பவருக்கு இங்குள்ள மரங்களின், மண்ணின் அருமை எங்கே தெரியப்போகின்றது. மண்வாசனை பற்றி அதிகம் அலட்டிக் கொள்பவர்களுக்கு இம் மண்ணின் மகத்துவம் புரியாமலிருப்பது விந்தையிலும் விந்தை. இருப்பினும் புலம்பெயர்ந்த எம்இனிய உறவுகளுக்கொரு கொட்டிலென்றாலும் ஒரு வீடு அல்லது குடிசை சொந்தமாக தமது இறுதிகாலத்தில் வேண்டும் என்ற நியாயம் சரியானதே! ஆனால் சூழல் கெடாதவாறு செய்தல் நன்று.

வேளாண் காடுகளென்பவை விளை நிலத்திலுள்ள தரிசு நிலங்கள், வேலிகள், பயன்படாத இடங்களில் பலபயன் தரக்கூடிய மரங்களை நடவு செய்தலாகும்.




கால்நடைத் தீவனமாக, மரமாக, விறகாக, நிழலாக, பயன்தரு பொருளாக மரங்கள் தும் தேவைகருதி காசாகும். வருவாய் தரும் மரங்களில் தேக்கு முதன்மைப்படுத்த வேண்டிய ஒன்றாகும். இலையினை உணவு பரிமாறி உண்ணவும், உதிர்ந்த இலை சேதனப்பொருளாகி மண்புழு வளர்ப்பதற்கு சிறந்ததொரு உணவாகவும் பயன்படுத்தலாம். செல்ல மகளுக்கு என்ன மரம் நடலாம் என யோசிக்கும் அருமைத் தந்தைக்கு தேக்கு உகந்ததென சொல்லிவையுங்கள்! வன இலாகாவில்

செய்தால் பின்னர் அதிகமாக நீர் ஊற்றத் தேவையில்லை. இவ்வாறான இடங்களில் நடப்படும் மரங்கள் உணவுக்காக, மரத்திற்காக விறகுக்காக இருக்கலாம்.

பழமரங்களான் மா, பலா, விளாத்தி மற்றும் வேம்பு, தேக்கு, வாகை, புளி எனப்பயன்தருவனவற்றை நடலாம். சவுக்கு நட்டு விறகாக்கலாம்.

2. வயற்பரப்புக்களின் விடுபட்ட இடங் களில், விளைநிலத்திற்கும் பயிர்ச் செய்கைக்கு குந்தகமில்லாமலும் நடலாம்.

பனை மரங்களை இம்மாதிரியான இடங்களில் நடுவது நல்லது.

**உயிர்வேலிகளாக நடலாம்.**

3.இம்முறை வெள்ளத்தின் அளவு சடுதியாக ஏறி, பலரது வீடுகளைத் தட்டிப் பார்த்ததற்கு மதில்கள்தான் காரணமெனப் பலர் கூறினார்கள். உயிர் வேலிகள் இருந்திருந்தால் விழுந்த நீர் வழி கண்டு ஓடிச் சேர்ந்திருக்கும். ஆனால் சுற்றிவர மதில் கட்டியதால் உள்புகுந்த நீர் ஓடிப்போக வழியில்லாமல் தேடி வந்து கதவைத்தட்டியிருக்கின்றது.

கிளிறிசிடியா, கிளுவை, பூவரசு போன்றவற்றை இங்கே நடலாம்.

**பொது இடங்களில் நடுதல்**

4.விழுந்த மரங்களுக்கீடாக திட்டமிட்டு இம் மரங்களை நடலாம். நிழலுக்காக நடப்படும் மரங்கள் எவருக்கும் தடையாக இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். பொது இடங்களில் நடுவதற்குப் பொதுமக்கள், மாணவர்கள், உத்தியோகத்தர் என அனைவரையும் ஒன்றிணைத்து ஈடுபடலாம்.

## தம்மை முழுமையாய் மனிதனுக்குத் தாரை வார்ப்பதால் மரங்கள் கற்பக தருக்களாய் மதிப்புப் பெற்றன

இருப்பதை உறுதிசெய்தல் நல்லது. மரங்களை வளர்த்து அவற்றைச் சிறந்த முறையில் கத்தரிப்பதன் மூலம் அவற்றிலிருந்து உச்சப்பயன்பாட்டைப் பெறலாம். வேளாண் காடுகளின் மகிமையை உலகம் உணரவைத்தல் வேண்டும். இவை சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டால் ''இயற்கையுடன்'' இணைந்த விவசாயம் மேலும் புதிய உத்வேகத் துடன் சஞ்சாரம் செய்யப் புறப்பட்டு விடும். இப்பூமியில் பிறந்ததை விட இம்மண்ணில் தவழ்ந்ததை என்றுமே நினைவூட்டும்.

**சீதனமாகும் மரங்கள்!**

தமிழ்நாட்டில் வித்தியாசமானதும் விபரீதமானதுமான கலாசாரங்களில் இதுவுமொன்று! திருமணமென்றால் சொத்துக்கள் அனைத்தும் ஆண் வாரிசுகளுக்குத்தான். பெண் வாரிசுக்களை திருமணம் முடித்து கணவனுடன் அவருடைய வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். அதுதான் அவளுக்குப் புகுந்தமனை. அதனாலேயே மனைவி-மாமியார் சண்டையெல்லாம் சர்வ சாதாரணமாகிவிடும் விபரீத கலாசாரமென்றேன். புகுந்த வீட்டில் அனைவரும் புதியவர்கள் அவளுக்கு. அதனால்தானே இவ்வளவு பிரச்சினைகளும். எங்களூர் பெண்கள் கொடுத்துவைத்தவர்கள். இங்கே பெண்வாரிசுவுக்குத்தானே மனையும், புலமும் அதனோடிணைந்த அனைத்தும் சீதனம். தமிழ் நாட்டில் சீதனமாக நிலத்தைக் கொடுக்கும்போது தேக்கு மரக்கன்றுகளை வரிசையாக நிலம் முழுவதும் நாட்டிவிட்டுக் கொடுப்பார்கள். குறிப்பிட்ட ஆண்டுகளில் தேக்கு வளர்ந்து ''மரமாகி'' பயன்படுத்தும் தேவைகருதி காசாகும். இம் மரக்கன்றுகள் விற் பனையாகின்றன.

**வேதனமாகும் மரங்கள்**

இன்று நட்ட மரம், பல ஆண்டு கள் கழித்து ஓங்கி வளர்ந்திருக்கையில், அவசிய தேவைக்கு வேதனமாக மாறும் விந்தை இங்குதானே நடக்கின்றது. வெறுமனே கிடக்கின்ற தரிசுக்காணிகளில் எல்லாம் மழைகாலமதில் பயன்தரும் மரங்களை நடுகை செய்தால் விரும்பிய நேரத்தில் வெட்டி விறகாக்கலாம், மரமாக்கலாம், ஆடு மாட்டுக்கு குழையாக்கலாம், ஆரவாரஞ் செய்யும் கொடியுமாக்கலாம். ஜீவனோபாயத்தை அளந்து கொடுக்கும் அருமைப் பொக்கிஷமிது.

மரமொன்று நடுங்கள். காலஞ்செல்லச் செல்ல வட்டியின்மேல் வட்டிதரும் வங்கிகளின் மொத்த வடிவமும் மரம்தானே.

நட்ட விதை ஒன்றிலிருந்து எத்தனை விதை? அத்தனையும் விற்றுக் காசாக்கும் நிலைவரும்போது வேதனமாகும் விந்தை பாரீர். வளர்த்தவருக்கும் காசு, வெட்டியவருக்கும் காசு மேலும் அதனை விற்றவருக்கும் காசு. வேதனம் இங்கே இவ்வாறு வகைப்பட்டுக் கொள்கின்றது. மரத்துண்டில் செதுக்கியெடுக்கப்படும் வகை வகையான வடிவமைப்புக்களின் பெறுமதியைக் கூட்டுவதற்கும் முயற்சிக்கலாம். வாழ வழிசொல்லிக் கொடுக்கும் வாழ்வாதாரமாகும் மரங்களை வாழ வழிவிடுங்களேன். நன்மையெதுவும் செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிருக்கலாம் அல்லவா? வீம்புக்காக அல்லாது விஷயத்தான் கேட்கப்பட்ட கேள்வி இது!

**எங்கே மரத்தை நடுவது?**

1. தரிசுக் காணிகளில் தேடி நடலாம். மழைகாலத்தில் திட்டமிட்டபடி நடுகை

**வேளாண்காடுகளை ஊக்குவித்தல் நன்று**

மூலிகைக்காகப் பெறும் மரங்களை இதில் கவனஞ் செலுத்தலாம். சுதேச வைத்தியர்களின் தேவையை ஈடுசெய்யும் வகை யில் மருத்துவ குணமுடைய மரங்களை நடுதல் நன்று. எம்மூர் மருத்துவத்தை எல்லோரும் இணைந்து வளர்த்தெடுப்பதற்கான சிறந்த ஒரு வாய்ப்பாக இதனைக் கருதலாம்.

**வேம்பின் வீம்பு எங்கே?**

'நிஷா'வின் கோரத்தாண்டவத்தில் ஆல், அரசு போன்ற மரங்களுடன் வேம்பும் அதிகளவில் பாதிக் கப்பட்டிருக்கிறது. ஆழவேரோடும் இம்மரங்கள் இப்படித் திடீரெனச் சரிய நேர்ந்ததேன்?

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'', நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி தானே. பல்லுக்குறுதியாயிருந்த ஆலும் வேலும் உறுதியறுந்து சரிந்ததுதான் விந்தையிலும் விந்தை. ஆலமரத்தின் விழுதுகளைத் தனது தேவைக்காக நிலத்தில் விழ நாம் விடுவதில்லை. விழுதுகளெல்லாம் தொங்கிக் கொண்டிருக்கின்றனவே தவிர தாங்கும் விழுதுகளாக இல்லை. எமது சந்ததி வரலாறும் அதுதானே. விழுதுகள் வேலைதேடி ஓட வயதானவருக்கு முதியவர் இல்லம்தான் அடைக்கலம். நடந்து திரிந்தாலும் அவர்கள் மனதால் எப்போதோ விழுந்துவிட்டார்கள்.

அரசமரத்தில் விழுதுகள் இல்லையென்றாலும் அது வலிமையான மரம். ஆனால் வேம்பும் அப்படித்தானே. வேல் சரிந்தது விறகுகாலைகளுக்கு இலாபம். விழுந்த வேம்புகளெல்லாம் இதமாக பதமாக அரியப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திடீரென வந்த வேலைவாய்ப்பு இது. வேம்பின் வேர்களுக்கு என்ன நடந்தது. ஆழமான வேர்கொண்டிருந்தும் அல்லாடிவிட்ட காரணத்தைக் கண்டறிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

விழுந்தவை அடுத்த ஒருவருட விறகுத்தேவைக்குப் போதும் என்றாலும் அந்த இடங்களில் மீள்நடுகை செய்யத் திட்டமிடல் அவசியம். அனைவரும் இதுவிடயத்தில் ஒன்றிணைவது நல்ல பலனைத் தரும்.

**''மரமொன்று நட்டு மனிதம் வளர்ப்போம்''**

**மனிதனாக இல்லாவிட்டாலும்**
**மரமாகவாவது வாழ்வோம்- ஏனெனில்**
**மரம் இருந்தாலும் சரிந்தாலும் -தங்கமே.**
**மனிதன் இருந்தாலும் சரிந்தாலும்**
**பயனேதுமில்லை என்னும்போது** *****



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## காசு தரும் தேக்கமரக் கன்று நிலம் தமிழகத்தில் பெண்களுக்குச் சீதனம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகிதி.......

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாப்பிள்ளை கேட்டுப் படலையைத் திறந்தவர்களின் பட்டியலைச் சொல்லி விட்டு கடைசியாக அப்புக்காத்து அம்பலவாணரின் பெண் ரஞ்சினியைப் பற்றி ஊன்றிக் கூறியபோது, தியாகராசனுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. தந்தையின் வோட்டு அந்த அப்புக்காத்தரின் மகளுக்கே தான் என்பது புரிந்தது. காரில் சென்று கொன்வென்டில் படித்துக்கொண்டிருக்கும் ரஞ்சினி அழகி மட்டுமல்ல, பணக்காரியும் கூட.

தியாகராசனுக்கும் வாயெல்லாம் பல்லாக இருந்தது. தானும் ரஞ்சினியும் கொழும்பு கால்பேசு திடலில் கைகோர்த்துப் பவனி வரும் கற்பனையில் மிதக்கத் தொடங்கினான் தியாகராசன்! அவனின் நண்பர்களெல்லாம் ''மிஸ்டர் தியாகு, யூ ஆர் ஏ லக்கி பெலோ'' என்று புகழும்படி 'பிரசென்ரபிள் கேள்' தனக்குக் கிடைக்க இருப்பதை எண்ணி மகிழத் தொடங்கினான் தியாகராசன்.

''சரியப்பா நான் ரஞ்சினியையே முடிக்கிறேன்'' எனச் சொல்ல வாயெடுத்த தியாகராசன் ''எடுத்த எடுப்பிலேயே வாயைப் பிளந்து 'ஆமாம்' சொல்வது காளையர் உலகத்துக்கே இழுக்கு'' என்று நினைத்தானோ என்னவோ, ''யோசித்துச் சொல்லுகிறேனப்பா'' எனச் சொல்லிவிட்டு ரவுணுக்குப் போகப்புறப்பட்டான்.

தனக்கு வரப்போகும் ரஞ்சினியின் நினைவில் மிதந்துகொண்டு புதுச்சினிமாப் பாட்டொன்றை சீட்டியடித்துக்கொண்டு தியாகராசன் வீட்டைவிட்டுப் புறப்படும் போது காலை ஏழு மணியிருக்கும்,

வீட்டிலிருந்து நூறுயார் போனானோ இல்லையோ அவன் கால்கள் குத்திட்டு நின்றன. பிரமித்து நின்றான் தியாகராசன். பக்கத்து வீட்டு ஏரம்பு வாத்தியாரின் மகள் கமலாவை பதின்மூன்று வருட இடைவெளிக்குப் பின் கண்டபோது அவன் ஸ்தம்பித்து நின்றான். காணவேண்டிய கோலத்திலா அவள் நின்றாள்? பட்டும் பாவாடையுமாகச் செல்லமாக வளர்ந்த கமலாவை இப்போது கிழிந்த ஆடை, கிழிந்த இரக்கையோடு பிச்சைக்காரக் கோலத்தில் காண நேர்ந்தபோது அவனுக்கு என்னவோ போலிருந்தது. என்னவாய் இருந்தவள் என்னவாய்ப் போய் விட்டாள்?

இப்போது தியாகராசனின் சீட்டி ஒரேடியாக நின்றுவிட்டிருந்தது. வீட்டுக் குப்பையைக் கொட்ட வெளியில் வந்த கமலா எதிர்பாராத விதமாக தன் சின்ன வயதுத் தோழனை எதிரில் கண்டபோது அவள் உடல் சிலிர்த்தது. நாணத்தால் அவள் முகம் சிவந்தது. தியாகராசன் அவளைப் பதின்மூன்று ஆண்டுகளாகக் காணவில்லை! ஆனால் அவளோ அவன் ஊருக்கு வந்திருக்கும் காலங்களில் எத்தனை தடவை அவனைப் பார்க்க முடியுமோ அத்தனை தடவை அவனைப் பார்த்திருக்கிறாள்.

ஆனால் இன்றுதான் அவளின் கண்கள் தியாகராசனின் கண்களைப் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின் சந்திக்கின்றன. அவனின் அந்தப் பார்வையிலே எத்தனையோ அர்த்தங்கள் புதைந்து கிடந் தன. பதின்மூன்று யுகங்களையும் சேர்த்தே அவன் பார்த்தான்.

''கமலா, கமலா'' என நேரம் போவதே தெரியாமல் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த ஆறு வயதுச் சிறுவன் தியாகராசனும், மூன்று வயதுச் சிறுமி கமலாவும் இப்போது தியாகராசனின் கண்களிலே வந்து நிற்கிறார்கள்.

தன் தங்கைமார் மூவரையும் கரை சேர்த்துவிட்டு கல்யாணம் செய்து கொண்ட போது ஏரம்பு வாத்தியாருக்கு முப்பத்தைந்து வயது. ஆரம்பப் பாடசாலை ஒன்றிலே வாத்தியார் வேலையாய் இருந்த ஏரம்பு வாத்தியாருக்குக் கல்யாணமாகி நான்கு ஆண்டுகளாகியும் பிள்ளைகளேயில்லை. வகுப்பில் அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்த்துத் தன்னையே மறந்திருப்பார் வாத்தியார். பள்ளிக்குக் கள்ளம்போடும் பிள்ளைகளுக்கெல்லாம் தன் செலவில் மிட்டாய்கள் வாங்கித்தருவார் வாத்தியார். ஆனால் இவரின் இந்த இனிப்புப் பண்டங்களால் கூட பக்கத்து அரிசனப் பிள்ளைகளை ஈர்க்க முடியவில்லை. ஆனால் ஏரம்பு வாத்தியார் அதிகாலையிலேயே அந்த அரிசனப் பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களை அழைத்து வந்த பின்தான் தன் வகுப்பை நடத்துவார். அவரின் வகுப்பு எப்போதும் நிறைவாகவே இருக்கும். எந்தப் பிள்ளையையும் பிரம்புகொண்டு அடிக்கவே மாட்டார். யாராவது விசமம் செய்தால் பக்கத்துத் தூண்கள்தான் வாத்தியாரின் பிரம்புக்கு இலக்காகும். அதைப்பார்த்து பிள்ளைகள் அடங்கி விடுவார்கள்.

பக்கத்து வீட்டிலிருக்கும் தன் நண்பர் சபாரத்தினத்துக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தபோது ஏரம்பு வாத்தியாரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தன்னோடு நாளும் பொழுதும் விளையாட ஒரு குழந்தை பிறந்து விட்டானே என்ற மகிழ்ச்சி வாத்தியாருக்கு. குழந்தை தியாகராசன் வாத்தியாரின் கைகளிலேயே தவழ்ந்தான். பாடசாலை தவிர்ந்த மற்ற இடங்களிலெல்லாம் குழந்தை வாத்தியாரின் கைகளிலேயே கிடந்தான். சகல வசதியோடு இருந்த வாத்தியாரின் குடும்பம் குழந்தை தியாகராசனுக்கு பட்டாடை போர்த்தினர். தங்கச்சங்கிலி போட்டனர்.

தியாகராசன் பிறந்த மூன்றாண்டுகள் கழித்து வாத்தியாருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தபோது வாத்தியாரின் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. மூன்று வயதுப் பையனை வைத்து ஆறுமாதக் குழந்தை கமலாவுக்கு அவர் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருப்பதே வேடிக்கையாகவிருக்கும். தானும் ஒரு சிறிய குழந்தையாகி விடுவார் வாத்தியார். நாளாக ஆக அக்குழந்தை கமலாவுக்கு தியாகராசன் விளையாட்டுக் காட்ட ஆரம்பித்தான். ஐந்து வயதாகியதும் வாத்தியார் தன் பள்ளியிலேயே தியாகராசனைச் சேர்த்தார். அவன் படிப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார் வாத்தியார். கமலாவும் பள்ளி செல்லத் தொடங்கியதும் தியாகராசனே அவளை அழைத்துக்கொண்டு போவான். குழந்தைகள் இருவரும் கள்ளங்கபடமற்ற அன்பிலே மிதந்தார்கள். தியாகராசன் பக்கத்தில் இல்லாமல் கமலா சாப்பிடவே மாட்டாள். கமலா மீது உயிரையே வைத்திருந்தான் தியாகராசன்.

வருடங்கள் சில நகர்ந்தன. மேலும் இரு பெண் குழந்தைகளுக்குத் தாயாகி காச நோய்க்கு ஆளானார் ஏரம்பு வாத்தியாரின் மனைவி பார்வதி. வாத்தியார் தன் நில புலன்களை எல்லாம் விற்றும்கூட பார்வதியை மீட்க முடியவில்லை. வறுமையின் பிடியிலே வாத்தியாரின் குடும்பம் சிக்கத் தொடங்கியிருந்தது. வருடங்கள் சில கழிந்தன.

'ஐந்தாம் வகுப்பில் 'ஸ்கொலசிப்' கிடைத்து பட்டணத்துப் பள்ளிக் கூடத்துக்குப் போனபோது தியாகராசனுக்கு வயது பத்து. விடுதியிலே அவன் வாழ்க்கை கழிய ஆரம்பித்தது. விடுமுறைகளுக்கு வீட்டுக்கு வரும் போதெல்லாம் எழுவயதுச் சிறுமி கமலாவைப் பார்க்காமல் இருக்க மாட்டான் தியாகராசன். ஆனால் நாளாவட்டத்தில் அவன் போக்கிலே சில மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. நாளாவட்டத்தில் கமலா வீட்டுக்குப் போவதை அடியோடு நிறுத்தி விட்டிருந்தான் தியாகராசன். இப்போதெல்லாம் கமலாவின் ஞாபகமே அவனுக்கு அற்றிருந்தது.

இருபத்திரண்டாவது வயதிலே தியாகராசனுக்கு கொழும்பில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. இப்போது அவனுக்கு வயது இருபத்தியாறு.

பதின்மூன்று வருட இடைவேளைக்குப் பின் முதன் முதலாக இப்போதுதான் கமலாவைக் காண்கிறான் தியாகராசன். சிறுவயது நினைவுகளையெல்லாம் அவன் மனத்திலே இரைமீட்டான். ''ராசா ராசா'' என அவன் கையையே பிடித்துக் கொண்டு கமலா பாடசாலைக்குப் போன அந்த நாள்கள் நினைவுக்கு வருகின் றன. அந்த அன்பு வாழ்க்கை தியாகராச னின் பத்தாவது வயதோடு போய்விட் டது. என்றபோதும், இன்றும் அவை பசுமரத்தாணி போலல்லவா இருக்கின்றன. அந்தப் பிஞ்சு வயதிலே அவர்களுக்குள்ளே இருந்த அன்பு..... அவனுக்கு அவளிடமிருந்த வாஞ்சை பெரியவனாகியதும், அதுவும் உத்தியோகத்தனாகி விட்டதும் போன இடம் தெரியவில்லையா? அல்லது அந்த அன்பு, இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் ஒழிந்து கொண்டிருக்கிறதா?

'எனக்குப் பட்டாடை போர்த்தவரின் மகள் இன்று கிழிந்த ஆடையோடு நிற்கிறாள்: ஆனால் நானோ கொழும்பிலே மினுக்கிய புதுச்சட்டை போட்டு கம்பீரமாகப் பவனி வந்து அவள் குடும்பத்தை நையாண்டி செய்கிறேனா? என் சின்ன வயதுத் தோழி வறுமையின் பிடியில் கிடந்து தவிக்கும் போது நான் மட்டும்...... கல்யாண மார்க்கட்டிலே மதிப்புடன் பவனி வருகிறேன்.

'நாங்கள் சின்னவர்களாக இருந்திருந்தால், இப்போது அவள் துன்பத்தில் பங்கு கொண்டிருக்க மாட்டேனா? பெரியவர்களாவதே சாபக்கேடா?'

'அவர்கள் செல்வத்திலே வாழ்ந்தபோது அவர்களைச் சுரண்டி நான் வாழ்ந்தேன். ஆனால் அவர்கள் வறுமையை எட்டியபோது நான் தூரத்தே எட்டிவிட்டேனே?'

அவன் கால்கள் வந்த வழியே திரும்புகின்றன. விடுமுறை முடிந்து கொழும்புக்குப் போகப் புறப்படவிருந்த தியாகராசனை 'ஒரு முடிவு' சொல்லிவிட்டுப்போகும்படி தந்தை சபாரத்தினம் வற்புறுத்தினார்.

தியாகராசன் நிதானமாகவே பதில் சொன்னான்.


''நான் ஏரம்பு வாத்தியாரின் மகள் கமலாவையே கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன்.'' அவன் பேச்சிலே உறுதி தொனித்தது.

''ஆனால் தம்பி அவர்கள் வந்து உன்னை மாப்பிள்ளை கேட்கவில்லையே?'' ''அவர்கள் கேட்காவிட்டாலென்ன? நான் அவர்களைப் பெண் கேட்கப்போகிறேன்...'' தியாகராசனின் குரலிலே இருந்த உறுதியைக் கண்டு சபாரத்தினத்தார் மௌனியானார்.

நன்றி: சுதந்திரன் சிறுகதைகள்

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 41



அனுப்புபவர் பெயர்:.....................

விலாசம்:.....................

.....................

கையொப்பம்:.....................

### மேலிருந்து கீழ்

1. விநாச காலத்தில் வருவது.
2. தற்போதைய யுகம்.
3. இதைத் தலையில் வைத்து ஆடுவர்; அந்த ஆட்டத்தின் பெயரும் இதுவே.
4. ரகம்.
5. நவமணிகளுள் ஒன்று.
6. தலை தாழ்த்து.
9. கெட்டுப்போதல்.
11. தாண்டு
12. குழு/கன்னை.
13. மகன்மார்.
15. சம்மதச் சொல்.
17. மண்ணுக்கு முன்னையது.
18. விலக.
20. முனிவர்.
21. இஸ்லாமியர்களின் வழி காட்டி

### இடமிருந்து வலம்

1. பகிடிப்பாடல்; அதைப் பாடுபவரையும் குறிக்கும்.
5. பிரி.
7. உயிர்க் காணிக்கை.
8. தேர் உலா.
9. துக்கம்
10. உலோகத் தகடு.
12. வாளி.
14. தங்கத்தைச் சோதித்துப் பார்க்கும் முறைமை.
15. இரும்பில் ஆனது:பலகையைப் பொருத்த உதவும்.
16. இன்பம் துய்த்தல்.
18. பெரும்/பெரிய என்பதைக் குறிக்கும்.
19. கெட்டுப்போதல்/அலைதல்.
21. அசைய.
22. சத்தமிடும் வண்டுக்கு இந்தப்பெயர்.
23. தமிழ்ப்புலவர்; அறிஞர்; திருவள்ளுவருக்குச் சகோதரர் என்றும் கூறுவர்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 41,
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (07.01.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 41 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 11.01.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 39 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) அமராவதி (5) ஆவி (7) தர (8) சினத்தல்(9)ரம்மியம்(11)வலை(12) கம் (13) என் (14) பூவை (15)கரி (17)கனு (18) எரு (19) மறு (20) முதலை (22) விவாகம் (24) குல்லாய் (25)தும்பு

மேலிருந்து கீழ்

(1) அதரம் (2) மரம் (3) வசியம் (4) தினம் (5)ஆதவன் (6)வில்லை (10) மிதவை (13) எரி (14) பூணுதல் (15) கருவி (16) எறும்பு (17)கழுகு (19) மகம் (21) லைலா (23) வாது

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 39 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு

சு.மதுராகரன்,
உசன்,
மிருசுவில்.

2 ஆம் பரிசு

சு.பஞ்சாட்சர ஐயர்,
இல:20/1, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு

அ.மாணிக்கவாசகர்,
இல:36/24,பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதிசிவம்,
இல:18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(2) கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

(3) சாம்பவி துரைராஜசிங்கம்,
[illegible]
[illegible]

(4) த. பிரதாப்,
ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(5) இ.பத்மலிங்கம்,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசனும் அமைச்சனும்

ஓர் ஊரில் மன்னன் நீதியாக ஆட்சி புரிந்து வந்தான். அவனுடைய நல்ல அமைச்சர் அவையைச் சிறப்பித்து வந்தார். மன்னனுக்கு ஜெயவர்மன் என்று ஒரு மகன் இருந்தான். அவன் பொறுப்பற்றவனாக வளர்ந்து வந்தான். மன்னர் திடீரென



நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். ஜெயவர்மன் ஆட்சிக்கு வந்தான். அவன் அமைச்சரின் புத்தி மதியைக் கேட்பதில்லை. அமைச்சரையும் துன்பப்படுத்தினான். அமைச்சரை அவையை விட்டு நீக்கிவிட்டான். அவர் காட்டில் அலைந்து திரிந்தார். அங்கே ஒரு குகையில் ஒரு சிங்கம் வாழ்ந்து வந்தது. அதற்கு முட்கள் குத்தி இரத்தம் வழிந்து வேதனைப்படுவதைக் கண்ட அமைச்சர் அதற்குப் பச்சிலைகள் அரைத்து வைத்தியம் செய்தார். இவற்றைக் கண்டவர்கள் அரசனுக்குத் தெரியப்படுத்தினர். அரசன் அமைச்சரை அழைத்துவரக் காவலாளர்களிடம் கட்டளை இட்டான். அந்தச் சிங்கத்தையும் அழைத்து கூட்டில் அடைத்து வைத்தான்.

அமைச்சரை நிறுத்தி அந்தச் சிங்கத்தை அவர் மீது ஏவி விட்டான். அப்போது அந்தச் சிங்கத்திற்கு மிகுந்த பசியாய் இருந்தது. ஆனாலும் சிங்கம் அமைச்சரை எதுவுமே செய்யவில்லை. முன்பு தனக்கு சிகிச்சை அளித்ததை நினைத்து நன்றியுணர்வுடன் அமைச்சர்முன் நின்றது. ஐந்தறிவு கொண்ட இந்தச் சிங்கமே அமைச்சரை மதிக்கும்போது, தான் அவரை அவமதித்ததை எண்ணி ஜெயவர்மன் வருந்தினான். தான் செய்த தவறிற்காக அமைச்சரிடம் மன்னிப்புக் கேட்டான். அன்றிலிருந்து அரசன் மனம் திருந்தி அமைச்சரின் சொல்கேட்டு நாட்டை நல்லாட்சி புரிந்து வந்தான். நாட்டு மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.***

**வா.சங்கீதா,**
தரம்-6,A யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.




குருநாதரின் உருவம் மறைந்ததும் இளைஞர்கள் இருவரும் தம்மிடமிருந்த மாயக்கண்ணாடியை முன்னர் இருந்த இடத்திலேயே வைத்தனர். பின்னர் இருவரும் அடுத்து என்ன செய்வது என்று கலந்தாலோசிக்கத் தொடங்கினர். "முதலில் இந்தக் குகையை விட்டு வெளியேற வேண்டும். அப்போதுதான் மந்திரக்கிழவி பற்றிய மர்மங்களை அறிந்து கொள்ள முடியும்" என்றான் சந்திரவர்மன். "ஆனால் நாம் இங்கிருந்து வெளியேறுவதைத் தன்னுடைய மாயக்கண்ணாடி மூலம் கிழவி கண்டுபிடித்து விடுவாளே?" என்றான் இந்திரவர்மன்.

"இந்திரா! நமது குருநாதர் சொன்னதை நீ அவதானிக்கவில்லையா? இந்தக் குகையில் நாம் குருநாதருடன் உரையாடியதை மந்திரக் கிழவியால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படியானால் மந்திரக்கிழவியின் மாயத்துக்குக் கட்டுப்படாத ஒருபொருள் இருக்க வேண்டும். முதலில் அதைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்றான் சந்திரவர்மன்.



அவன் சொன்னதைக் கேட்டதும் இந்திரவர்மனின் முகம் மலர்ந்தது. சந்திரவர்மனுக்குத் தன்னைப் பின் தொடரும்படி சைகை காட்டிவிட்டு, இதுவரையும் குகையில் ஒளிவீசிக் கொண்டிருந்த இரத்தினக்கல்லைக் கையில் எடுத்து நான்கு முறை அமுக்கினான். அடுத்தகணம் இரத்தினக் கல்லில் இருந்து வெவ்வேறு வர்ணங்களில் பலவித ஒளிக்கீற்றுகள் புறப்பட்டன.

(தொடரும்)

## பந்து அடிப்போம்



மாமி கொண்டு வந்தா
மஞ்சள் நிறப்பந்து
நிசா, யது, டில்லி
பந்தடிக்க வருவார்

ஓங்கி ஓங்கி அடித்தால்
உயர்ந்து மேலே எழும்பும்
ஏந்தி ஏந்தி அடிப்போம்
எழும்பும் பந்தைப் பிடிப்போம்



உருட்டிப் பந்தை உதைப்போம்
ஓடி ஓடி எடுப்போம்
எடுத்து மேலே எறிவோம்
ஏந்தி ஏந்திப் பிடிப்போம்

இ.ஜநுஷா,
தரம் - 6C, உடையார்லேன், கொக்குவில்.

## அம்மா உன்னை வணங்க வேண்டும்



அன்னை என்னைச்
சுமந்தாய்!
என்னைப் பெற்றபோது
நீயும் மலர்ந்தாய்!

தொட்டில் கொடியில் முடிந்து
தாலி போட்டுப் படுத்தாய்
தொப்பிள் கொடியில் மலர்ந்த
பூவாய் என்னை வளர்த்தாய்

வெள்ளை உள்ளம் உருகி
பாலாய் பருகக் கொடுத்தாய்
தியாகம் என்னும் தீயில்
தினமும் என்னை எரித்தாய்

உந்தன் மடியில் எனக்கு
துன்பம் என்றும் இல்லை
உன்னை மறந்து போனால்
இன்பம் எதிலும் இல்லை.

கல்லை வணங்கும் கைகள் - உன்
காலை வணங்க வேண்டும்
கடவுள் போன்ற உனக்கு
கோவில் கட்ட வேண்டும்

அன்னை ஓர் ஆலயம்
என நான் உன்னைத்
தினமும் துதிக்க வேண்டும்.

தனுசிகா தர்மராஜா, தரம் - 8B
கருணாலயம் சிறுவர் இல்லம்.

# எஸ்கிமோவர்

வட அமெரிக்கக் கண்டத்தின் வடபகுதியில் வாழும் எஸ்கிமோவர் எனப்படுகின்ற ஆதிக்குடிகள் பற்றிய சில தகவல்கள். இவர்கள் மீன் பிடித்தும் சீல், வால்ரஸ், திமிங்கிலம், பனிமான் முதலிய பிராணிகளை வேட்டையாடியும் வாழ்கின்றனர்.

இவர்களின் வீடு வினோதமானது. வெண்பனிக் கட்டிகளைச் சதுரம், சதுரமாக உடைத்து வீடு கட்டிக் கொள்கின்றார்கள். இவர்கள் நாய்களை வளர்த்து "ஸ்லெட்ஜ்" என்னும் பனிச்சறுக்கு வண்டிகளை இழுக்கப் பயன்படுத்துகின்றனர். இவர்களது வாழ்க்கைமுறை தற்போது மாறிவருகின்றது. வட அமெரிக்காவிலுள்ள அலஸ்காவிலும் கிறீன்லாந்து தீவிலும் வாழ்வோர் நிலையான வீடுகள் அமைத்து வாழ்கின்றனர். இவர்களின் குழந்தைகள் பாடசாலை சென்று கல்வி கற்கின்றனர்.

**அபிராமி நற்குணம்,**
தரம்- 6 F,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# பொன்மொழிகள்

1. நம்பக் கூடாதது ⟶ வதந்தி
2. ஆபத்தை விளைவிப்பது ⟶ அதிகபேச்சு
3. செய்யக் கூடாதது ⟶ நம்பிக்கைத் துரோகம்
4. செய்யக் கூடியது ⟶ உதவி
5. விலக்க வேண்டியது ⟶ சோம்பேறித்தனம்
6. உயர்வுக்கு வழி ⟶ உழைப்பு
7. நழுவவிடக் கூடாதது ⟶ வாய்ப்பு
8. பிரியக் கூடாதது ⟶ நட்பு

போ.ஜங்கரன்,
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை.




# இலங்கை அமைச்சர்கள்

| | |
|---|---|
| நீதி அமைச்சர் | - டிலான் பெரேரா |
| சர்வதேச வர்த்தகம் | - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் |
| மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் | - றிஷாத் பதியுதீன் |
| நீர்ப்பாசனம் | - ஜயதிஸ்ஸ ரணவீர |
| மாகாணசபைகள் உள்ளூராட்சி | - ஜனக பண்டார தென்னக்கோன் |
| பெற்றோலிய வளத்துறையும் புகையிரதப் போக்குவரத்தும் | - ஏ.எச்.எம். பௌஸி |
| விவசாயம் | - ஹேமகுமார நாணயக்கார |
| உயர்கல்வி | - பேராசிரியர் விஸ்வவர்ணபால |
| கல்வி | - சுசில் பிரேம ஜயந்த |
| விளையாட்டு | - காமினி லொக்குகே |
| உள்நாட்டு வர்த்தகமும் நுகர்வோர் விவகாரமும் | - பந்துல குணவர்த்தன |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | - தி.மு.ஜயரத்ன |
| வெளி விவகாரம் | - ரோஹித போகல்லாகம |
| மனித உரிமைகள் | - மஹிந்த சமரசிங்க |
| அனர்த்த நிவாரண சேவைகள் | - எம்.எஸ்.எஸ்.அமீர் அலி |
| ஊடகத்துறை | - அனுர பிரியதர்ஷன யாப்பா |
| போக்குவரத்து | - டலஸ் அழகப்பெரும |
| விஞ்ஞான, தொழில்நுட்பம் | - பேராசிரியர் திஸ்ஸ விதாரண. |

நா.டர்ஷனா, தரம்- 9B
யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)
மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-.................................
தரம் :-.................................
பாடசாலை :-.................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

# மாணவர் தூரிகை

கூ.நிரோசன்
தரம் -8 A,
யா/கைதடி மு.வ.மி.



த.கர்சன்
தரம் -8 D,
யா/மத்திய கல்லூரி.




ம.மயூரி
தரம் -5,
யா/நயினாதீவு கணேசா வித்தி.



சி.டிலெஸ்சனா
தரம் -7,
யா/வயாவிளான் ம.ம.வித்தி.



தி.மதுஷிகா
தரம் -2 E,
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.28

சாவகச்சேரிப் பிரதேச சபையின் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகளை நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி பொதுநூலக மண்டபத்தில் நடத்தவுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி உப பணிமனைப் பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சாயி கல்வி நிலைய இயக்குநர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கமும் கலந்துகொள்வர். (203)

## ஸ்ரீமத் பாகவதம் வாசிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் ஸ்ரீமத் பாகவதம் வாசிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் இரண்டாம் திகதி முதல் தினசரி காலை 8.30 தொடக்கம் நண்பகல்வரை நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 4.30 மணிக்குப் புதுவருட விஷேச பஜனையும் இடம்பெறும். (204)


### ஆயுட்கால அங்கத்தவர்
### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆயுட்கால அங்கத்தவர்கள் தங்களின் விவரங்களைக் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

1. ஆயுட்கால அங்கத்தவர் பெயர் :
   நிரந்தர விலாசம் :
   தற்காலி விலாசம் :
   ஆயுள் அங்கத்தவர் இலக்கம் :
   அலகு :
   பிரிவு :

தாங்கள் தற்போது வசிக்கும் பிரிவிலா அல்லது ஏற்கனவே தங்களின் அங்கத்துவம் பெற்ற பிரிவிலா தொடர்ந்து அங்கத்துவம் பெற விரும்புகின்றீர்கள்.

தற்போது வசிக்கும் பிரிவு :
ஏற்கனவே உள்ள பிரிவு :

31.12.2008க்கு முன்பு அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள். தங்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கும், தங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குமான ஒரு நடவடிக்கையாகும். இதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்

மேலதிக விவரங்களுக்கு:
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் 24மணிநேர இரவு பகல் அம்புலன்ஸ் சேவை தொடர்பு:
021 222 2561, 0602215555, 0773979390

(ஓ/555221)



# UNIVERSITY OF CAMBRIDGE
# ENGLISH COURSES

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சர்ன்றிதழ் பரீட்சைகள்

- உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற.
- திடீரென வெளிநாடு ஒன்றிற்குச் செல்ல, மொழித்தடையை நீக்க
- பூரணமான ஆங்கில அறிவைப்பெற UNIVERSITY OF CAMBRIDGE இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள்.

### UNIVERSITY OF CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)

- The Cambridge Preliminary English Test (PET) is the second level of the Cambridge exams in English.
- PET is taken by more than 80,000 people each year in more than 80 countries, and is a valuable qualification for anyone who wants to work or study abroad or to develop a career in international business
- வருடம் தோறும் 8000 மாணவர்கள் உலகில் 90 நாடுகளில் இந்தப் பரீட்சையை எடுக்கின்றனர். ஆங்கிலம் பேசும் நாடு ஒன்றில் வேலை வாய்ப்பினைப் பெறவோ அல்லது மேற்படிப்பை மேற்கொள்ள தேவையான தகைமையை இடப்பரீட்சை மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

### UNIVERSITY OF CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH

- The Cambridge First Certificate in English (FCE) is the third level of the Cambridge exams in English for Speakers of other Language (ESOL) Successful candidates receive a certificate awarded by University of Cambridge Esol Examinations, and Recognized by Universities and employers in many countries.
- FCE பரீட்சையை வருடம்தோறும் 2,70 000 மாணவர்கள் 100 நாடுகளில் எடுக்கின்றனர். இது ஓர் அதியுயர் தரம் வாய்ந்த English Test பெரும்பாலான ஆங்கிலம் பேசும் நாடுகளில் பல்கலைக்கழக அனுமதிக்கும் வேலைவாய்ப்புக்கும் IELTS பரீட்சைக்குப் பதிலாக FCE ஐ அங்கீகரிக்கின்றனர். Each Examination covers the four main language skills: Speaking, Reading and Writing, Listening.

**புதிய வகுப்புக்கள் 05.01.2009 இல் ஆரம்பமாகின்றன.**

BRITISH COLLEGE OF ENGLISH
143,Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0602216027



### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (81185)



### காணி விற்பனைக்கு

உசன், விடத்தற்பளை வீதியில் புதுக்குளத்து அம்மன் கோயிலுக்கு அருகில் 15 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 44/8, மணல்தரை லேன்,
கந்தர்மடம்.
T.P.No.: 077 9232569 (81196)



### ஒத்துமாறல்

திருகோணமலை விவசாய அமைச்சில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகப் பணிபுரிபவர் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களத்தில் பணிபுரியும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் அல்லது முகாமைத்துவ உதவியாளர் உடன் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 060 226 8228, 077 4064035



### மணமகன் தேவை

யாழ்.இந்து, கௌரவ குடும்பம், 1979இல் பிறந்த, 2இல் செவ்வாய், 37 கிரகபாவமுள்ள CAT, AAT, IAB (LONDON), CIMA படித்த அழகிய மணமகளுக்கு, கொழும்பில்/வெளிநாட்டில் பணிபுரியும் எஞ்சினியர்/எக்கௌண்டன் மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். (முகவரி, தொலைபேசி இலக்கம், குடும்ப விவரம், தகைமை ஆகியவற்றைக் குறிப்பிடவும்).

தொடர்பு: N.K.NATHAN
இல.125, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077 1387596 (81178)


### மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், வருமான வரித் திணைக்களம்)



தோற்றம் 02-05-1943
மறைவு 01-01-2006

திதி: பூர்வபக்க பிரதமை
(28.12.2008)

ஆண்டுகள் மூன்று கடந்துவிட்டாலும்
ஆறவில்லை அப்பா எம் துயரம்
தீராத வேதனையால் தினமும் துடிக்கின்றேன்
மாறாத துன்பம் மனதை வாட்டுகின்றதே
எந்நாளும் உன்னை நினைந்தே
உங்கள் அறிவுரைகள் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றதே.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி இ.திலகேஸ்வரி,
குடும்பத்தினர்.
தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (81097)


# வெளிநாடுகளில் உயர்கல்வி

ரஷ்யா (Russia), பெலாரூஸ் (Belarus), போலந்து (Poland), உக்ரைன் (Ukraine), மலேசியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore)

### ★ MBBS/MD ஆங்கில மொழி மூலம் (6 வருடங்கள்)

- உலகத்தரம் வாய்ந்த பிரபல பல்கலைக்கழகங்களில் (Russia, Belarus) படித்து டாக்டராகுங்கள்.
- இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC), WHO, Educational Commission for foreign Medical Graduates (ECFMC-USA) போன்ற உலக மருத்துவ நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள்.

### ★ சகல துறைக் கற்கை நெறிகள்

- கலை, வர்த்தகம், சட்டம், முகாமைத்துவம், உளவியல், மனித உரிமைகள், உயிரியல், உடற்கூற்றியல் இன்னும் பல கற்கை நெறிகள்.
- Full time - 5 Years
  Post Graduate Studies - 3 Years
  Master Programme - 1 Year

### ★ DIPLOMA கற்கைநெறிகள் (3 வருடங்கள்- Malaysia)

- Diploma in Nursing
  Diploma in Medical Laboratory Technology
  Diploma in Pharmacy
  Diploma in Physiotheraphy
  Diploma in Medical Imaging
  Diploma in Dental Surgery assistant
- கற்கைநெறி பூர்த்தியானவுடன் மலேசியாவில் தொடர்ந்து வேலைசெய்யவும், ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்படிப்புகளுக்குச் செல்லவும் மேலதிக ஒழுங்குகள்.

* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்
* 14-21 நாள்களுக்குள் விசா - 100% உத்தரவாதம்
* வங்கி நிலுவை, ஸ்பொன்சர் தேவையில்லை
* விடுமுறைகளுக்கு Germany, Poland சென்றுவர விசேட ஒழுங்குகள்
* பெண்களுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள்
* யாழ். மாணவர்கள் குழுவாகப் பயணம் செய்ய ஏற்பாடுகள்
* பாஸ்போட் விரைவில் பெறுவதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள்
* கொழும்பு சென்று அடுத்த நாளே பயணம் செய்வதற்கான ஒழுங்குகள்

(81183)

**விசேட சலுகை**
ஜனவரி 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிப்பவர்களுக்கு 50% அனுமதிக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

OVERSEAS STUDENT PROGRAMME
இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 250555, 021 222 9042, 0115669571


ஈழத்தின் மூத்த தமிழ் எழுத்தாளர்
"சாகித்திய ரத்தினம்"
# தி.ச.வரதராசன்
"வரதர்"
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.07.1924

மறைவு
21.12.2006

திதி: 28.12.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்
வழிகாட்டியாய் விளங்கியவர்
தமிழின் சுவை அறிந்தவர்
சுவைக்கும் தமிழ் தந்தவர்
எங்கள் குலவிளக்கு.
என்றும் மறவா நினைவுகளோடு நினைவில் நிற்பவர்.

84/3, மானிப்பாய் சாலை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



**குமாரசாமி ரகுநாதன்**

(இலங்கை ஆசிரியர் சேவை தரம்-1, யா/இணுவில் மத்திய கல்லூரி)

எமது கல்லூரியில் பதினெட்டு வருடங்களாக ஆசிரியராகக் சேவையாற்றிய **குமாரசாமி ரகுநாதன்** ஆசிரியர் அவர்கள் 28.12.2008இல் சேவையில் இருந்து இளைப்பாறுகின்றார்.

இவரது சேவையைப் பாராட்டுவதுடன், ஓய்வு காலத்தில் குடும்ப சகிதம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/இணுவில் மத்திய கல்லூரி. (81197)

## ELITE வெளியீடு (வவுனியா)

தரம் 5 மாணவர்களுக்காக வவுனியாவின் முன்னணி ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டு நாடுபூராகவும், ஆயிரக்கணக்கான மாணவர்களின் உயர்பெறுபேறுகளுக்கு வழி காட்டிய Elite பரீட்சை வினாத்தாள்கள் 2009 ஜனவரிமுதல் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கும் தனது சேவையை விஸ்தரிக்கின்றது.

- மாதாந்தம் இருபரீட்சை வினாத் தாள்கள் (விடைகளுடன்)
- விளக்கவுரை அடங்கிய இறுவெட்டுக்கள் (CD)
- அத்துடன் வவுனியாதெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட ''அறிவுக்களஞ்சியம்'' DVD ஆகியவற்றையும் புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

* பாடசாலைகள்,கல்விநிலையங்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு: 0244920729 077 4118950, 077 4452429

## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 2008ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பாராட்டு வாழ்த்தும்



கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த **அம்பிகராசா-லலிதா** தம்பதியரின் செல்வப் புதல்வன் **அ.லதுசன்** 2008 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தி பெற அனைத்து வழிகளிலும் ஊக்கமளித்த யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கைதடி, மின்னொளி கல்விக் கழக ஆசிரியர் ப.விஜயகுமாரன் மாமா அவர்களையும் மற்றும் அனைத்து ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துவதுடன், இன்று [28.12.2008] தனது 10ஆவது பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவர் கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இவரை வாழ்த்துவோர்: அன்புள்ள அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, உற்றார், உறவினர், நண்பர்கள்.
கைதடி தெற்கு, கைதடி. (81180)

# அனைத்து இல்லங்களுக்கும் IDD!

வைப்புக்கள் இல்லை
பதிவுக் கட்டணம் இல்லை
மாதாந்தக் கட்டணம் இல்லை
நிபந்தனைகள் இல்லை

ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

தற்போது உங்கள் வீட்டு SLT தொலைபேசியில் இருந்து உலகம் முழுவதற்கும் பேசலாம்

உலகம் பூராவும் மலிவாகப் பேசுங்கள்



SLT Citylink CDMA மற்றும் வியாபார வாடிக்கையாளர்கள் IDD வசதியைப் பெறுவதற்காக எமது ரெலிஷொப்களில் அல்லது பிராந்திய அலுவலகங்களில் ஒன்றிற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு (011) 2 555 555

Sri Lanka Telecom

SLT IDD www.slt.lk


## கலைவிழா

கோப்பாய், டிசெ.28

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வருடாந்தக் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் தலைவர் ச.க.முருகையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் இ.யோகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-72)

## கட்டாக்காலி கால் நடைகள் தொல்லை

கோப்பாய், டிசெ.28

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகப் பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது நாய்களை அழிப்பதற்குச் சட்டத்தில் இடமின்மையால் பெண் நாய்களுக்கு கருத்தடைச் கிசிச்சை முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

எனவே பெண் நாய் வளர்ப்பாளர்கள் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்திற்குச் சென்று கருத்தடை சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம் நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி இந்தக் கட்டாக்காலி கால் நடைகளைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-72)

## நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ.28

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் க.தர்மராஜா ஹற்றன் ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கல்லூரி தமிழ்ப்பாட விரிவுரையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

அண்மையில் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட கல்வியாளர் தேர்வின் மூலம் இவர் தெரிவு செய்யப் பட்டுள்ளார். (202-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# இந்தியக் கடவுச்சீட்டு உள்ளவர்களே சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க முடியும்

இந்தியக் கடவுச் சீட்டு உள்ளவர்கள் மட்டுமே இந்தியாவுக்காக சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க முடியும் என்ற புதிய கொள்கையை இந்திய மத்திய அரசு வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

சர்வதேச போட்டிகளில் இந்தியாவில் வசிப்பவர்கள் மட்டுமல்லாது, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களும் இந்தியாவுக்காக விளையாடி வந்தனர். அவர்களுக்கும் இந்திய மத்திய அரசு இந்தியக் கடவுச் சீட்டு உள்ள நிதியுதவி அளித்து வந்தது. இந்நிலையில் திடீரென இந்தியப் பிரஜைகள் மட்டுமே இந்தியாவுக்காக சர்வதேச போட்டிகளில் விளையாட முடியும் என மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதனால் இந்தியாவுக்காக விளையாடிவரும் அமெரிக்கா வாழ் ரெனிஸ் வீரர் பிரகாஷ் அமிர்தராஜ், வீராங்கனைகள் சுனிதா ராவ், ஷிகா, நேஹா உபராய் உள்ளிட்டோரின் பங்கேற்பு கேள்விக்குறியாகியுள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவுக்கு இந்திய ஒலிம்பிக் சங்கமும், ரெனிஸ் வீரர்களும், சில சம்மேளனங்களும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

அரசின் புதிய முடிவு தவறானது, தேவையில்லாதது என இந்திய ஒலிம்பிக் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது. அத்துடன் முடிவை மறுபரிசீலனை செய்யவும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியாவில் உள்ள முன்னாள் ரெனிஸ் வீரர்களும், சில சம்மேளனங்களும் அரசின் இந்த சர்ச்சைக்குரிய முடிவுக்கு அதிருப்தி தெரிவித்து, மறுபரிசீலனை செய்யக்கோரியுள்ளன.

# ஜொலிக்கும் கௌதம் கம்பீர்!



ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக ஆடிவந்த இந்தியக் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரர்
கௌதம் கம்பீர், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களையடுத்து
டெஸ்ட் போட்டிகளிலும் ஜொலிக்கத் தொடங்கியுள்ளார்.
டில்லியைச் சேர்ந்த இந்த இடதுகை வீரர், 2003இல் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில்
அறிமுகமாகி, திறமையால் இப்பிரிவு போட்டியில் தனது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார்.
இதுவரை 64 ஒருதின போட்டிகளில் 2162 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஓட்ட சராசரி 37.27.
2007- 08இல் அவுஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரில் 2 சதம் உட்பட 440 ஓட்டங்கள்
குவித்து முத்திரை பதித்தார். முதல்முறையாக இந்தியா கிண்ணத்தை வெல்லவும் முக்கிய பங்கு வகித்தார்.
'ருவென்ரி - 20' உலகக்கிண்ணப் போட்டியில் மூத்த வீரர்களான சச்சின், ராவிட், கங்குலி ஆகியோர்
பங்கேற்காததால் தொடக்க வீரராகக் களமிறங்கினார் காம்பீர். இது அவரது திறமையை வெளிப்படுத்த
நல்ல வாய்ப்பாக அமைந்தது.
அத்தொடரில் ஆடிய 7 ஆட்டங்களில் 6 இன்னிங்ஸில் 227 ஓட்டங்கள் குவித்ததன் மூலம், அதிக
ஓட்டங்கள் குவித்த 2-ஆவது வீரர் என்கிற பெருமை பெற்றார். பாகிஸ்தானுடனான இறுதிப் போட்டியில்
அதிகபட்சமாக 75 ஓட்டங்கள் குவித்து, ஆட்ட நாயகனாகவும் தேர்வு பெற்றார்.
இந்தியாவில் நடந்த ஐபிஎல் 'ருவென்ரி-20' போட்டிகளில் டெல்லி 'டேர்டெவில்ஸ்' அணிக்காக அதிக
ஓட்டங்கள் குவித்த முதல் 3 பேரில் ஒருவராகச் சிறப்பு பெற்றார் காம்பீர்.
ஒருநாள் போட்டி, 'ருவென்ரி-20' போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக ஆடி வந்த கம்பீருக்கு, டெஸ்ட்
அணியிலும் நிரந்தர இடம்பிடிக்க அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் உதவியாக அமைந்தது.
4 போட்டிகள் கொண்ட அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில்,3 போட்டிகளில் விளையாடி ஒரு
சதம், இரட்டைச் சதம் உள்பட 439 ஓட்டங்கள் குவித்ததோடு, ஒட்டுமொத்த ரன்குவிப்பிலும் முதலிடம்
பிடித்தார்.
கடைசியாக முடிந்த இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் 2 போட்டிகளில் ஒருசதம் உட்பட 361
ஓட்டங்கள் குவித்து முதலிடம் பிடித்தார். இத்தொடரில் 300 ஓட்டங்களுக்குமேல் குவித்தவர் இவர்
ஒருவர் மட்டுமே. இந்தச் சிறப்புகளால் ஐ.சி.சி தரவரிசையிலும் (10-வது இடம்) முன்னேறியுள்ளார் கம்பீர்.

# ஐ.சி.சி.தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி இரண்டாம் இடம்



இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியதன் மூலம் இந்திய அணி சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் தரவரிசையில் மீண்டும் இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டது.

ஐ.சி.சிதரவரிசையில் 116 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருந்த இந்திய அணி தற்போது 2 புள்ளிகள் மேலதிகமாகப் பெற்று இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. இதன்படி இரண்டாவது இடத்தில் இருந்த தென்னாபிரிக்க அணி 117 புள்ளிகளோடு மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

எனினும் தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றாலோ அல்லது தொடரை சமநிலையில் முடித்துக்கொண்டாலோ அது மீண்டும் இரண்டாவது இடத்துக்கு முன்னேறிவிடும். ஏற்கனவே இந்த டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

அதேபோன்று தென்னாபிரிக்க அணிக்கு அவுஸ்திரேலியாவைப் பின்தள்ளி முதல் இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது அவுஸ்திரேலிய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 3-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றிவிட்டால் அது முதலிடத்துக்கு முன்னேறிவிடும். ஒருவேளை இந்த டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா தோல்வியை சந்தித்தால் அது தொடர்ந்து மூன்றாவது இடத்தில் நீடிக்கும்.

இதுதவிர, நியூஸிலாந்து - மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிந்ததை அடுத்து நியூஸிலாந்து அணிக்கு தரவரிசையில் ஆவது இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு பறிபோனது. தொடர்ந்து நியூஸிலாந்து அணி 8ஆவது இடத்திலேயே காணப்படுகிறது. மேற்கிந்திய அணி தரவரிசையில் 7ஆவது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது. அடுத்து மேற்கிந்திய அணி வரும் பெப்ரவரியில் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளதோடு, நியூஸிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளது.

# இப்போது ஓய்வு இல்லை - ஹைடன்



டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற இருப்பதாக வெளியான செய்தியை அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடன் மறுத்துள்ளார். மத்தியூ ஹைடன் சமீபகாலமாக சிறப்பாக ஆடமுடியாமல் தடுமாறி வருகிறார். இதனையடுத்து அவர் ஓய்வு பெறுவது பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவுக்கு எதிரான தொடரில் தடுமாறிய அவர், தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் சிறப்பாக ஆடவில்லை. இதனையடுத்து ஹைடன் ஓய்வுபெற முடிவு செய்திருப்பதாகவும், தென்னாபிரிக்கத் தொடருக்கு பின்னர் அவர் ஓய்வு பெறுவார் என்றும் கூறப்பட்டது. ஆனால் ஹைடன் இதனை மறுத்துள்ளார். தான் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேன் என்று அவர் கூறினார்.

அவுஸ்திரேலிய தேர்வுக்குழுவினரும் ஹைடன் அணியில் இடம் பெறுவதை ஆதரிக்கின்றனர். அடுத்த ஆண்டு ஆஷஸ் தொடர் வரை ஹைடன் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

37 வயதாகும் ஹைடன் 101 டெஸ்ட் போட்டிகளில் 8524 ஓட்டங்களையும், 161 ஒருநாள் போட்டிகளில் 6133 ஓட்டங்களையும் இதுவரை பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடன் போருக்கு தயாராகும் இந்தியா!

மும்பை தீவிரவாத தாக்குதலை அடுத்து பாகிஸ்தான் மீது வெளிப்படையாக யுத்தம் நடத்துவதற்கு வசதியான காய்நகர்த்தல்களை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே, காஷ்மீரில் அநாவசியமாக தீவிரவாதத்தை தூண்டிவிடுவதான குற்றச்சாட்டுகளை பாகிஸ்தான் மீது இந்தியா



சுமத்திவந்தது. இப்போது இந்த பாகிஸ்தானிய தலையீட்டின் மற்றொரு பரிமாணமாக மும்பைத் தாக்குதல் அரங்கேறி உள்ளது. எனவே, இனியும் பொறுப்பதில் பலனில்லை என இந்தியத் தரப்பினர் கூறுகின்றனர்.

மேலும் ஆப்கானில் தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பதாக, அமெரிக்காவும் பாகிஸ்தானை கண்டித்து வரும் சமீபகால நிகழ்வுப் பின்னணியில் இந்தியா, தான் பாதிக்கப்பட்ட காரணத்தை முன்வைத்து தாக்குதல் நடத்தினால் உலகத்தில் பாகிஸ்தானுக்காக குரல்கொடுக்க எவருமே வரமாட்டார்கள்.

எனினும், இந்திய - பாகிஸ்தான் போர் மூளுவதை தடுக்க அமெரிக்கா முயன்று வருகிறது. மும்பைத் தாக்குதலை அடுத்துவந்த நாள்களில் அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொண்டலீசா ரைஸ் டில்லிக்கும் இஸ்லாமாபாத்துக்கும் பறந்துசென்றார். இந்தியாவுக்கு உலகளாவிய ஆதரவு இருப்பதை சுட்டிக்காட்டி பாகிஸ்தான் அரசு அந்த நாட்டில் உள்ள ஆப்கான் மற்றும் இந்திய எதிர்ப்புத் தீவிரவாதிகள் மீது களையெடுப்பு நடத்தவேண்டிய அவசியத்தை ரைஸ் பாகிஸ்தானுக்கு உணர்த்தியதாகத் தெரிகிறது. அவ்வாறின்றேல் பாகிஸ்தான் மீது இந்தியா தொடுக்கும் போருக்கு வெளிப்படையான ஆதரவு உதவியும் வழங்கும் நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்படுமென எச்சரித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

எனினும், மும்பையைத் தாக்கியவர்கள் பாகிஸ்தானியர்களே என்ற இந்திய குற்றச்சாட்டை பாகிஸ்தான் மூர்க்கமாக மறுத்து வருகிறது. இந்தத் தீவிரவாதிகளின் தாக்குதலை நெறிப்படுத்த பாகிஸ்தானிலிருந்து தொலைபேசி அழைப்புகள் வந்ததையும் இந்தியா சுட்டிக்காட்டியிருந்தது. இருப்பினும், பாகிஸ்தான் தொடர்ந்து மறுப்பை வெளியிட்டு வருகிறது.

எனவே, பாகிஸ்தானை அகப்படுத்தும் முகமாக இந்தியா அடுத்த அஸ்திரத்தை எடுத்துவிட்டுள்ளது. அதுதான் மும்பை தாக்குதல்தாரிகளில் உயிருடன் பிடிபட்ட மொஹமட் அஜ்மல் ஆவார். இவர் பாகிஸ்தானில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பது உள்ளிட்ட விவரங்களை இந்தியத் தரப்பு வெளியிட்டுள்ளது. முதலில் இதனை பாகிஸ்தான் அரசு மறுத்தாலும் உண்மையை நெடுநாள் மறைக்கமுடியாது போயிற்று. செய்தியாளர்கள் எப்படியோ முகர்ந்து பிடித்து அஜ்மலின் பெற்றோரை கண்டுபிடித்துவிட்டனர்.

அஜ்மலின் தந்தை இவர் தனது மகன்தான் என ஒப்புக்கொண்டதை பல சர்வதேச தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. திடுக்கிட்டு விழித்துக்கொண்ட பாகிஸ்தான் அரசு அஜ்மலின் கிராமத்துக்குள் வெளியார் அதுவும் செய்தியாளர்கள் செல்வதைத் தடைசெய்தது. இதிலிருந்தே முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சி இது என்பது முழு உலகுக்கும் வெட்டவெளிச்சமானது. இது இந்திய ராஜதந்திரத்துக்கு கிடைத்த முதல்வெற்றி. அடுத்தகட்டமாக பிடிபட்ட அஜ்மலின் கடிதம் ஒன்றை இந்திய அரசு டில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்திடம் சமர்ப்பித்துள்ளது. அக்கடிதத்தில் இந்திய வழக்கறிஞர்கள் எவரும் தனக்காக வாதிட முன்வராததால் தனக்குச் சட்ட உதவி வழங்குமாறு அஜ்மல் பாகிஸ்தான் அரசிடம் கோரியுள்ளார்.


மும்பை தாக்குதலில் ஈடுபட்டோர் பாகிஸ்தானியர்தான் என்பதற்கு ஆதாரமில்லை என ஆரம்பமுதலே சாதித்து வந்த பாகிஸ்தான் அரசுக்கு இந்த அஜ்மல் விவகாரம் பெரும் தலைவலியாக மாறி உள்ளது. தாக்குதல் எதையும் நடத்தமுன் பாகிஸ்தான் கூறியபடி ஆதாரபூர்வமாக நிரூபிக்க இந்தியத் தரப்பு தயாராகி வருவதையே அதன் நடவடிக்கைகள் காட்டுகின்றன. புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவருடன் சந்திப்பொன்றையும் அஜ்மல்



காஷ்மீர் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியத் துருப்புக்களுடன் தளபதிகள்

அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

இவை எல்லாம் நிச்சயமாக பாகிஸ்தான் அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் விடயங்கள் ஆகும். அடுத்து வரும் வாரங்களில் இந்தியாவின் போக்கை உலகம் உன்னிப்பாக அவதானிக்க உள்ளது. காரணம் அது போர் நடவடிக்கைகளாகக் கூட இருக்கலாம் என்பதே. ஏற்கனவே, இந்திய விமானங்கள் பாகிஸ்தானின் வான் பரப்பு எல்லையை மீறி பறந்ததாக அண்மையில் பாகிஸ்தான் குற்றம்சாட்டியிருந்தது. இந்தியா இதை மறுத்தபோதும் இந்தியாவைக் கண்டிக்க உலகநாடுகள் எதுவுமே முன்வரவில்லை. உலகநாடுகளின் அபிப்பிராயத்தை நாடிபிடித்து பார்க்கும் ஒரு நடவடிக்கையாகவும் இந்தியா இதனை மேற்கொண்டிருக்கலாமெனக் கூறப்படுகிறது. எனினும், பாகிஸ்தான் மீது



போர் தொடுத்தால் பாகிஸ்தான் அணு ஆயுதப் பிரயோகம் செய்தால் என்னநிலை என்பது குறித்து ஆராயவேண்டியுள்ளது. எனவே, புதுடில்லி இதுபற்றி ஆழமாக சிந்தித்து வருவதாகத் தெரிகிறது.

இந்திய தரப்பும் அமெரிக்காவும் அடுத்தடுத்து பல மட்டங்களில் கலந்தாலோசனைகளை சமீபநாட்களில் நடத்திவருகின்றன. பாகிஸ்தான் மீதான போருக்கு முன் அமெரிக்காவினதும் ஐ.நா.வினதும் முற்றுமுழுதான ராஜதந்திர ஆதரவை புதுடில்லி திரட்டி வருவதாகவும் சொல்லப்படுகிறது. எனவே, இப்போதைக்கு போர்மூளாவிட்டாலும் அது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் முதலிடத்தில் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை ஆகும்.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் லோக்சபா தேர்தல் நடக்கவுள்ளதால் ஜனவரியில் ஒரு யுத்தத்தை தொடங்குவது அரசியல் லாபங்களை தரும் என காங்கிரஸ் கட்சியில் ஒரு தரப்பினர் கருதுகின்றனர். யுத்தத்தில் பாகிஸ்தானை ஒடுக்கினால் இந்தியாவுக்குள் பெரும் ஆதரவு அலையை காங்கிரஸ் கட்சியால் தூண்டிவிடமுடியும். லோக்சபா தேர்தலில் எங்கே தோற்றுவிடுவோமோ என நடுங்கிக்கொண்டிருந்த காங்கிரஸுக்கு


**எஸ்.சுரேந்திரஜித்**

மும்பை தாக்குதல் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

என்னதான் காங்கிரஸ் அரசு மீது மக்கள் கோபத்தில் இருந்தாலும் பாகிஸ்தானுடனான யுத்தத்தில் வெல்லமுடிந்தால் அக்கட்சிக்கு தேர்தல் வெற்றி உறுதியாகிவிடும். இதேபோன்றுதான் தோற்கவிருந்த வாஜ்பாய் கார்க்கில் யுத்தத்தில் வென்றது மூலம் 1999 தேர்தலில் அமோக வெற்றி கண்டார். எனினும், யுத்தத்தில் வெல்ல பல தயாரிப்புகளை இந்தியா மேற்கொண்டாக வேண்டியுள்ளது. பாகிஸ்தானும் தனது படைகளை உஷார் நிலையில் வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியா மீது தாக்குதல் தொடுக்க இந்தியாவையே சேர்ந்த ஒரு காஷ்மீர் தீவிரவாதியை பாகிஸ்தானால் தெரிந்தெடுக்கமுடியாது போனமை குறித்து பலமட்டங்களிலும் ஆச்சரியம் நிலவுகிறது. அவ்வாறு நடந்திருந்தால் காஷ்மீரில் இந்திய முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு பதிலடி என பாகிஸ்தான் வியாக்கியானம் கொடுத்திருக்கமுடியும். ஆனால், பாகிஸ்தானையே சேர்ந்த ஒருவர் எதற்காக இந்தியாவினுள் வந்து தாக்கவேண்டும் என்ற கேள்விக்கு பாகிஸ்தானிடம் பதிலில்லை.

மேலும் காஷ்மீரில் கூட இந்திய தேசத்தை எதிர்க்க எந்த முகாந்திரமும் இல்லை. உதாரணமாக காஷ்மீர் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்பதால் இந்திய அரசியல் சட்டத்தில் காஷ்மீருக்கு விசேட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஏனைய இந்திய மாநிலங்களுக்கு இராத விசேட



அதிகாரங்கள் இந்திய அரசமைப்பின் 370 ஆவது ஷரத்து மூலம் காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ளன.

யதார்த்தமாக நோக்கினால் காஷ்மீரில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்க பாகிஸ்தானுக்கு எந்தக் காரணமுமில்லை. இந்திய முஸ்லிம்கள் தொகைவாரியாக அகதிகளாக பாகிஸ்தானுக்கு செல்வதில்லை. இலங்கை அகதிகள் இலட்சக்கணக்கில் இந்தியா வந்து சேர்வதால் இந்தியாவுக்கு இலங்கைத் தமிழர் குறித்து இலங்கை அரசிடம் பேச அதன்மூலம் ஒரு தார்மீக உரிமையாவது கிடைக்கிறது. ஆகவே, இந்தியாவில் பாகிஸ்தான் கட்டவிழ்த்துவிடும் தீவிரவாதம் முகாந்திரமற்ற வெறும் பொறாமையின் பாற்பட்டது என்பது தெளிவாகும். இந்தியாவின் பொருளாதார சுபீட்சம், சர்வதேச ஆதரவு என்பன குறித்த பாகிஸ்தானின் பொறாமையே இதற்கு மூலகாரணம். ஆனாலும், அகில உலகும் இந்தியாவின் பின்னால் அணிதிரளும் நிலைக்கு இன்று பாகிஸ்தான் இட்டுச்சென்றுள்ளது.

மும்பைத் தாக்குதலை அடுத்து பயணத்தை ரத்துச்செய்து நாடு திரும்பிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி 2 வாரங்களில் இந்தியா திரும்பிவந்து போட்டிகளில் பங்குபற்றுகிறது. ஆனால், ஜனவரியில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யவிருந்த இந்திய கிரிக்கெட் அணியின் பயணம் மும்பை தாக்குதலால் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. இந்தியாவுடன் ஒரு கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நடந்தால் அதை இந்தியாவுடனான யுத்தமாகவே கருதி பாகிஸ்தானியர் அதற்கு படையெடுப்பர். அத்தகைய வருமானத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இழக்கவும் இதனால் நேரிட்டுள்ளது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

**124, இராசாவின்தோட்டம்,**
**யாழ்ப்பாணத்தில்**
சகல வசதியுடன் கூடிய வீடும்
அத்துடன் காணியும்
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு தொலைபேசி இல.
021 4590853, 021 4591449,
077 3564 662
(81177)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் துரைரட்ணம்

**(சண்டிலிப்பாய் - தலையாழி)**

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான வைத்திலிங்கம் துரைரட்ணம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - புகையிரதத் திணைக்களம்) 26.12.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் வைத்திலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மினி (அவுஸ்திரேலியா), குமுதினி (கனடா), விக்னேஸ்வரன் (கனடா), Dr.செந்தூரன் (விரி வுரையாளர் - மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற Dr. மகேஸ்வரன், சிவகுமரன் (கனடா), துஷியந்தி (கனடா), Dr. அபிராமி (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் அபர்ணா, நிருபன், கணேசனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தைஇந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

60, ரட்ணகர பிளேஸ், தெகிவளை.
T.P.2724759
(81255)

தகவல்:
Dr.T.செந்தூரன்


வடமராட்சியில்....

## மகளிர் பயிற்சி நெறிகள்



உடையமைத்தல் (தையல்),
சாறி, சல்வார் வெட்டுதலும் தையலும் (தனி அலகு)
தலையலங்காரம் (Hair style),
மணப்பெண் அலங்கரிப்பு (Make - up)
கேக் ஐசிங், Fabric painting, சாறி, சல்வார் அலங்கரித்தல் வேலைகள்
முத்து வேலைகள், பூவேலை, கம்பளி உடை பின்னுதல்

மற்றும் இருபாலாருக்குமான
**ஓகன் இசைப்பயிற்சி, சித்திரக்கலை**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 02.01.2009**
**வெள்ளி மு.ப. 10 மணி முதல்**

- சனி, ஞாயிறு வகுப்புக்களும் உண்டு.
- பயிற்சி முடிவில் தகைமைச் சான்றிதழ்.
- O/L மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- முன் அனுமதிகளை எமது அலுவலகத்தில் (காலை 9 மணி முதல் மாலை 4 வரை) பெற்றுக்கொள்ளலாம்.

**தூரிகை நுண்கலை வளாகம்**
ம.ம.வித்தியாலய வீதி, நெல்லியடி.
(81252)



## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் UK citizen 32 வயது, 34 வயது, 38 வயது U.S.A. citizen 32 வயது, பிரான்ஸ் citizen 27 வயது, 39 வயது, ஜேர்மன் citizen 26 வயது, 35 வயது, Canada citizen 39 வயது மணமகன்மார் உள்ளனர்.
லண்டன் தொடர்பு:
T.P.0044750 2340714, 0044 7535384166
Fax No. 0044 2086810707


## குடாநாட்டில் நிலஅதிர்வு....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று...." என்ற தலைப்பில் எழுதப் பட்டு 'உதயன்' பத்திரிகையில் 17 ஆம் பக்கத்தில் 23.11.2008இல் வெளியிடப்பட்ட தின்படி 422, 970 கியூப் சுண்ணக்கற்கள் கடந்த 5 ஆண்டுகளில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதனால் இடத்துக்கிடம் பாரம் தாங்குந் தன்மை மாறுபட்டுள்ளது.

**நீர் நிலைகளில் வெள்ள உயரம் முதன்முதல் அதிகரித்தால் நில அதிர்வு ஏற்படும்**

யாழ்.பல்கலைக்கழகத்தில் 1993 ஆம் ஆண்டு பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மாநாட்டின் முதல் நாள் பிற்பகல் நிகழ்ச்சியில் "யாழ். குடாநாட்டின் கடலில் பெற்றோலியம் உண்டு" என்பது இக்கட்டுரையாளரால் நிரூபிக்கப்பட்டது. இச்செய்தி 02.04.1993ஆம் நாள் 'உதயன்' பத்திரிகையில் மூன்றாம் பக்கத்தில் வெளியிடப்பட்டது.

கட்டுரையாளர் தன் ஆராய்ச்சியில் தென்னிந்தியாவிலுள்ள காவேரிக்கும் யாழ்.குடாவுக்கும் ஏற்பட்டிருந்த நிலத்தொடர்பு பற்றியும், காவேரியைப்பற்றியும், தொண்டைமானாறு கடலேரியைப் பற்றியும், சுண்ணப்பாறைகளின் மேல் நீரின் உயரம் அதிகரித்தால் நில அதிர்ச்சி ஏற்படும் என்பதையும் விஞ்ஞான முறைப்படி நிரூபித்தார்.

அறிஞர்கள் சூழ்ந்த அக்கருத்தரங்கில் பேராசிரியர் ஆர். குமாரவடிவேல், பேராசிரியர் வீ.நவரத்தினராசா, கலாநிதி கே.சித்திர வடிவேலு ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். ஒரு பேராசிரியரின் வினாவுக்குப் பதிலளிக்கையில், "சுண்ணப் பாறைகளின் மேல் நீரின் உயரம் உயர்ந்தால் நில அதிர்வு ஏற்படும்" என்பதை பேராசிரியர் வீ.நவரத்தினராசா ஏற்றுக் கொண்டார்.

**நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் நில அதிர்வு ஏற்பட்டது**

நிஷா புயலுடன் கூடிய அதிக மழையினால் ஏற்பட்ட வெள்ள உயர்வினால் யாழ்ப்பாணத்தில் நிச்சயமாக நில அதிர்வு ஏற்பட்டது. ★

## நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு | 11ஆம் ஆண்டு





அமரர் லயன்
**இராஜரட்ணம் நடராஜா**
(இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

திருமதி ஜெகதீஸ்வரி
**நடராஜா (B.Sc.)**
(ஓய்வுபெற்ற ஆசிரியை - வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 25.03.1940 | 21.12.2006 | 22.01.1939 | 10.10.1997 |


திதி: பிரதமை (28.12.2008)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

தேவாலய வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
அன்னப்பிள்ளை.
(81124)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 28 ★ 07 ★ 1939



மறைவு: 29 ★ 11 ★ 2008

### அமரர் மயில்வாகனம் தர்மராசா

கடந்த அன்று 29.11.2008 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் கூறியும், உதவிகள் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் (28.12.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஸ்தோத்திர ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி வீதி,
2ஆம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
குடும்பத்தினர்.
(81174)


## நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

அதிரடி விலைக்கழிவுகளுடன்
உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

5% தொடக்ம் 20% வரையான விசேட கழிவு

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆக் சிறோஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் மங்களேஸ்வரன்

வட்டுக்கோட்டை மேற்கு - சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மங்களேஸ்வரன் (பிரபல ஆசிரியர், கலைவாணி கல்வி நிலையம்) அவர்கள் 26.12.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை வல்லிபுரம் - வல்லிபுரம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இலங்கராஜசிங்கம், நேசம்மா கைலாச பிள்ளை இராசகிளி, அரியபுத்திரன், பரமேஸ்வரம்பிள்ளை (அதிபர், யா/தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
வ.பரமேஸ்வரம்பிள்ளை
(அதிபர், யா/தொல்புரம் அ.மி.த.க.பாடசாலை).
(81252)


## மலரும் புத்தாண்டில் கல்வியைத் தொடர இருக்கும் மாணவ மாணவிகளை மனமார வாழ்த்தி அன்புடன் அழைக்கிறது

- அதிக தரம்
- நியாயமான விலை
- கண்கவர் நிறங்களில் அழகிய அட்டைப் படங்களுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அன்பளிப்புப்பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள்
- இன்னும் பல ....


ரிச்சார்ட் பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனை நிலையம்

யாழ்.ஏக விநியோகஸ்தர்:

**KAJAN ENTERPRISE**
RAMALINGAM ROAD, MUDAMAVADY,
THIRUNALVELY.

பொருள்களை வாங்கி மாதாந்த சீட்டிழுப்பில் இணைந்து பரிசில்களை வெல்லுங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களை நலிவு படுத்திய பின்னர் 'பிச்சை'த் தீர்வைப் போடும் திட்டம்

'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்'-என்ற மாதிரி இருக்கின்றது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பேச்சு.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டம் பெரும்பாலும் பூர்த்தியடைந்து விட்டது என்ற மாதிரியும் மிக விரைவில் இறுதித் திட்ட வடிவை வெளியிடக் கூடியதாக இருக்கும் என்ற தோறணையிலும் அண்மைக் காலம் வரை அடிக்கடி கூறி வந்தவர் - கூறிவருபவர்-அவர்.

இறுதி வடிவம் தயார். அதை ஐ.தே.கட்சியிப் பிரதிநிதியான சட்டத்தரணி கே.என்.சொக்ஸி எம்.பியிடம் கையளித்து ஐ.தே.கட்சியின் கருத்து நிலைப்பாட்டை உள்வாங்குவது மட்டும்தான் இன்னும் எஞ்சியுள்ளது என்பது வரை அவரே கூறியுள்ளார். ஆனால் இதோ வருகின்றது இதோ வருகின்றது என்ற இறுதிக் திட்டம் மட்டும் இன்னும் வெளிவருவதாக இல்லை.

இதற்கிடையில், அனைத்துக் கட்சிக் குழுவின் பூர்த்தியடையும் இந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையைக் கூட வெளியிட முடியாத நிலையில் அந்தக் கூட்டமைப்பு இருப்பதை ஒப்புக் கொள்ளும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கின்றார். அண்மைக்காலமாக ஏற்பட்ட அரசியல் பிணக்குகளால் பிரதான கட்சிகள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கட்டமைப்பின் கூட்டங்களைப் பகிஷ்கரித்தமை, அக் கட்டமைப்பின் நடவடிக்கைகளை ஸ்தம்பிதம் அடையச் செய்து விட்டது என்பதை அவர் ஒப்புக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளார்.

ஒன்றிணைந்து ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்கே வக்கற்ற இந்தப் பிரதிநிதிகள் அமைப்பு, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு யோசனைத்திட்டம் ஒன்றை இணைத்து வெளியிடப் போகிறது என்று கூறுவது நாம் முன்னர் குறிப்பிட்டமை போல கூரை ஏற முடியாதவன் வானம் ஏறுவேன் எனக் கதை அளந்தமைக்கு ஒப்பானது தானே?

திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சிக்குழு தொடர்பாக சர்வதேச ரீதியில் கொழும்பு அரசு ஏற்படுத்திவரும் மாயத் தோற்றம் தொடர்பாக மூன்று விடயங்களைத் திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டி வருகின்றோம்.

* இனப்பிரச்சினையின் பிரதான தரப்பான தமிழர்களின் பிரதிநிதித்துவம் இந்தக் கட்டமைப்பில் இல்லை. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளில் 95 வீதத்தைக் கொண்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு இந்தக் கட்டமைப்புக்கு அழைக்கப்படவே இல்லை.

* இனப் பிரச்சினையையொட்டி தென்னிலங்கையின் தீர்வு யோசனைத் திட்டத்தை - கருத்து நிலைப்பாட்டை-கண்டறியவே இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது உருவாக்கப்பட்ட நிலையில் பல தடவைகள் கூறி வந்துள்ளார். அதனால்தான் இக் கட்டமைப்பில் இடம்பெற தமிழ்க் கூட்டமைப்புக்குத் தாம் அழைப்பு அனுப்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். எனவே, இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒரு யோசனைத் திட்டத்தைத் தந்தாலும் அது தீர்வுக்கான தெற்கின் யோசனைத் திட்டம் என்று மட்டுமே அர்த்தப்படுத்தப்படலாம்.

* அப்படி தெற்கின் தீர்வு யோசனையாக அர்த்தப் படுத்தப்படுவதற்கான தகுதியைக் கூட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் உத்தேச திட்டம் பெறத் தவறிவிட்டது என்பதுதான் யதார்த்தம். பிரதான எதிர்க் கட்சிகளான ஐ.தே.கட்சி, ஜே.வி.பி.போன்றன அக் கூட்டமைப்பின் அமர்வுகளில் பங்குபற்றாமல் எப்போதோ வெளியேறிவிட்டன. அரசுத் தரப்பில் இருக்கும் பல்வேறு கட்சிகளுடனும் ஆக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஜனநாயக மக்கள் முன்னணியும் மட்டுமே அதில் இப்போது உள்ளன.

ஆகவே எதிர்காலத்தில்-தப்பித்தவறி-இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு தீர்வுக்கான ஒரு யோசனைத் திட்டத்தை முன்வைத்தாலும் கூட அதை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் திட்டமாகக் கருதலாமே தவிர, தெற்கின் ஏகோபித்த திட்டமாக அர்த்தப்படுத்தவோ ஏற்கவோ கூட முடியாது என்பது தெளிவு.

அப்படி வரக்கூடிய - உருப்படியற்ற - அரைகுறையான - திட்டம் ஒன்றை இலங்கைத் தீவின் சகல தரப்புகளினதும் ஏகோபித்த திட்டமாக வெளிப்படுத்த எத்தனங்கள் மேற்கொள்ளப்படும்.

அது குறித்து சர்வதேச சமூகம் நேரத்துடன் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

தமிழரின் பேரம் பேசும் வலுவான ஆயுத பலத்தை போர் மூலம் அழித்துத் தகர்த்துவிட்டு, பலவீனமாக இருக்கும் தமிழ்த் தரப்பிடம் இத்தகைய அரைகுறைத் திட்டத்தை 'பிச்சை' ஆக வீசியெறிந்து விடயத்தை முடிக்க பௌத்த - சிங்கள பேரினவாதப் போக்குடைய கொழும்பு திட்டமிடுகிறது.

இது விடயத்தில் சர்வதேசம் உஷாராக இருந்தால் மட்டுமே நலிவுற்ற தமிழர்களை திரும்பவும் ஏமாற்றி, தொடர்ந்து அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு கொழும்பு மேற்கொள்ளும் நயவஞ்சகத் திட்டத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

## ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைகள் கிடைக்க சர்வதேச சமூகம் விரைந்து ஆவன செய்ய வேண்டும்

### வன்னித் தமிழர் பேரவை வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.28

''வன்னி மக்கள் துயர் துடைப்பதற்கும், நியாயமான உரிமைகள் கிடைப்பதற்கும் சர்வதேச சமூகம் ஆவன செய்யவேண்டும்'' என்று வன்னித் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. சர்வதேச சமூகத்திற்கான வேண்டுகை என்ற தலைப்பில் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

2008.12.15 அன்று அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் கொழும்புத் தூதரகங்களைச் சேர்ந்தவர்கள், இராணுவ அதிகாரிகள் வன்னியின் பாண்டியன்குளத்திற்கு ஒன்றாக வந்துள்ளனர் என்பதை நாம் கவலையுடன் நோக்குகிறோம். வன்னியில் மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாகவும் அதன் அங்கமான இடப்பெயர்வு காரணமாகவும் பெரும் அவலப்படுகின்றார்கள். தொடர்ச்சியாக மழை கொட்டுவதால் மக்களின் துன்பம் பன்மடங்காகியுள்ளது.

இதற்கு மேலாக சிறிலங்காப் படையினர் மக்கள்குடியிருப்புக்களை இலக்குவைத்து ஆட்லறி எறிகணைகளை ஏவுகின்றனர். இதனால் சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்படப் பொதுமக்கள் உயிரிழப்புக்களையும் உடல் உறுப்புக்கள் இழப்புக்களையும் சொத்தழிவுகளையும் நாளாந்தம் சந்திக்கின்றார்கள்.

சிறிலங்கா விமானப்படை இடம்பெயர்ந்தோர் குடியிருப்புக்கள் மீது குண்டுவீச்சுக்களை அதிகாலையிலும் நள்ளிரவிலும் நடத்தி வருகின்றது. இதனால் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்வு படுமோசமாகியுள்ளது. அத்தோடு தடைசெய்யப்பட்ட ரஷ்ய தயாரிப்பு கொத்துக்குண்டுகளையும் பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது போடுகின்றனர். 2008. 11.29 அன்று தருமபுரம், கல்லாறு இடம்பெயர்ந்தோர் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் வீசிய கொத்துக் குண்டுகளினால் இரு பொதுமக்கள் உயிரிழந்துள்ளார்கள். இருபது பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட நாடுகளின் இராணுவ அதிகாரிகள் பாண்டியன் குளத்தில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துள்ளார்கள். இவர்களுடைய வன்னிக்கான வருகையின் நோக்கம் சிறிலங்க இராணுவ அதிகாரிகளைச் சந்திப்பதற்கு என நாங்கள் கருதுகின்றோம். அப்படியாயின் இவர்கள் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை தீவிரப் படுத்தும்படி கூறியிருக்க வேண்டும். ஏனென்றால் இவர்கள் வந்துசென்ற பின்பு போர் தீவிரமடைந்துள்ளது. பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் கூடியுள்ளன.

சர்வதேச சமூகத்திற்கு நாம் விடுக்கும் கோரிக்கைகள் பின்வருமாறு:

வன்னிவருகையின் நோக்கம் மனித நேயமற்றது. இவர்கள் அமைதியாகவும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும் உதவுவதைத் தவிர்த்துப் போரை ஊக்குவிக்கின்றார்கள் என்று நாம் அச்சமடைந்துள்ளோம். அல்லற்படும் வன்னி மக்களின் துயர்துடைப்பதற்கும் அவர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைப்பதற்கும் சர்வதேச சமூகம் ஆவனசெய்யுமாறு நாம் வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

## விடுதலைப்புலி ஆதரவாளர்களைக் கைது செய்வதானால் முதலில் கருணாநிதியின் மகள் கனிமொழியையே கைதுசெய்ய வேண்டும்

### சொல்கிறார் சுப்பிரமணிய சுவாமி

சென்னை, டிசெ.28

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களைக் கைது செய்வது என முதலமைச்சர் முடிவெடுத்தால் முதலில் அவரது மகள் கனிமொழியைத்தான் கைதுசெய்ய வேண்டும் - என்று ஜனதாக் கட்சித் தலைவர்சுப்பிரமணியசாமிகூறியுள்ளார்.

சென்னையில் வெள்ளிக்கிழமை விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் நடைபெற்ற தமிழீழ அங்கீகார மாநாடு சட்ட விரோதமானது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவற்றைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட வேண்டும். அவர்கள் நாட்டையே சீரழித்துவிட்டனர். இமாலய ஊழல் செய்துள்ளனர். பயங்கரவாதிகளுக்கு உரிய பதிலடி கொடுக்க முடியவில்லை.

மும்பைத் தீவிரவாதிகள் தாக்குதல் தொடர்பாக உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டும்.

சென்னையில் நடைபெற்ற தமிழீழ அங்கீகார மாநாடு சட்ட விரோதமானது. விடுதலைப்புலிகளை ஆதரிப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமென்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். அப்படியென்றால் அவர் முதலில் கைது செய்ய வேண்டியது அவரது மகள் கனிமொழியைத் தான். அவருடைய சென்னைச் சங்கமம் நிகழ்ச்சியே புலிகளின் ஆதரவாளர்கள் அடங்கியதுதான்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இந்திய அரசு தாக்குதல் நடத்தி அழிக்க வேண்டும். அதற்கு அவர்கள் எதிர் தாக்குதல் நடத்தினால் அந்த நாட்டின் மீது போர் தொடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

திருமங்கலம் சட்டமன்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஜனதாக் கட்சி ஆதரவு அளிக்கும் - என்றார்.

## இலங்கை இனப் படுகொலையைக் கண்டித்து தமிழகம் பொன்னேரியில் முழுக் கடையடைப்பு

சென்னை, டிசெ.28

இலங்கை அரசின் இனப் படுகொலையைக் கண்டித்து தமிழ்நாட்டின் பொன்னேரிப் பகுதியில் முழுக் கடையடைப்புப் போராட்டம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் சென்னையை அடுத்துள்ள பொன்னேரிப் பகுதியில் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் இப்போராட்டத்துக்குஅழைப்பு விடுக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஒருநாள் நகர் முழுவதும் கடையடைப்பு செய்யவும், பொன்னேரி நகர அனைத்து ஓட்டோக்களும் வேலை நிறுத்தம் செய்யவும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்தஅழைப்பைஏற்றுபொன்னேரி நகரம் மற்றும் சின்னக்காவனம், பெரியக்காவனம், உப்பளம், பரிக்கப்பட்டு, பர்மா நகர், கிருஷ்ணாபுரம், துர்க்கா நகர், திருஆயர்பாடி, வேம்பாக்கம், மேட்டுக்காலனி, கொடுர் ஆகிய கிராமங்களிலும் கடையடைப்பு முழுமையாக நடைபெற்றது.

பலசரக்கு கடை, உணவகம், துணிக்கடை, தேநீர்க் கடை, காய்கறிக் கடை போன்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் முழுமையாக அடைக்கப்பட்டன. அதே போல் பொன்னேரி பிரதேசம் முழுவதிலும் உள்ள 150க்கும் அதிகமான ஓட்டோச் சாரதிகள் கலந்து கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் பொன்னேரிப் பிரதேசம் முழுவதும்வெறிச்சோடிக்காணப்பட்டது.

புரட்சிகர இளைஞர் முன்னணி, புரட்சிகர தொழிலாளர் முன்னணி, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி, அனைத்து வணிகர்கள் நலச் சங்கம், விடுதலைச் சிறுத்தைகள், தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., பெரியார் தி.க, தே.மு.தி.க., புரட்சி பாரதம், பி.எஸ்.பி., பொன்னேரி அனைத்து ஓட்டோச் சாரதிகள் நலச் சங்கம், இந்திய குடியரசுக் கட்சி., த.மு.மு.க. மற்றும், சிறுகடை வியாபாரிகள் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவளித்தனர்.

(அ)

### நாளை

| | |
|---|---|
| மார்கழி 14 | 29.12.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ. 10.20வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | பி.இ. 01.48வரை |
| சுபநேரம்: | 12.29 - 01.59 |
| ராகுகாலம்: | 07.59 - 09.29 |

## நாவலர் தமது கன்னிப் பிரசங்கத்தை 1847 ஆம் ஆண்டு வண்ணார் பண்ணை சிவன் கோயிலில் ஆரம்பித்தார்

**1847 டிசெம்பர் 31**

**1847 ஆம் ஆண்டு** டிசெம்பர் 31 ஆம் திகதி ஆறுமுகநாவலர் வண்ணார்பண்ணை சிவன்கோயிலில் தனது கன்னிப் பிரசங்கத்தை (தொடர் சொற்பொழிவு) ஆரம்பித்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நாவலரின் பிரசங்கம் நடைபெற்றது. கார்த்திகேச ஐயரும் நாவலருடன் இணைந்து பிரசங்கத்தில் ஈடுபட்டார். சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில், மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் என்பவற்றிலும் பிரசங்கங்கள் நடைபெற்றன.

### பல கோயில்களில் பிரசங்கம் தொடர்ந்தது

சிவ வழிபாடுகள், உருத்திராக்கம், சைவத்தின் மேன்மை, நேர்மை, கல்வி, கொல்லாமை, கோமாதா மகத்துவம், பெண்களின் கடமைகள், மதுஅருந்தாமை, விழாக்கள், தொண்டு, புனித நூல்கள், கொடை போன்ற இன்னும் பல தலைப்புகளில் பிரசங்கங்கள் நடைபெற்றன.

ஆறுமுக நாவலரும் கார்த்திகேசஐயரும் பேர்சிவல் பாதிரியார் பைபிளை மொழி பெயர்த்தபோது கூட இருந்து மொழிபெயர்ப்புக்கு உதவினர். அத்துடன் 'நாளாந்தம் ஜெபப் புத்தகம்' என்ற நூலை பேர்சிவல் வெளியிட்ட போதும் இருவரும் கூட இருந்து ஒத்தாசை புரிந்தனர். பைபிளை மொழிபெயர்ப்பதற்கு பேர்சிவல் பாதிரியாருக்கு உதவி செய்த காலத்திலேயே தான், தமது சமயத்திற்கு ஒன்றும் செய்யவில்லையே என்ற ஞானோதயம் நாவலரிடத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!

(நன்றி: Hindu Pastons Rev. J.E.Robinson)

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்…
மாநகர சபை, யாழ்ப்பாண…

# வவுனியாவில் பாடசாலை அதிபர் ஒருவர் சுடப்பட்டுக் காயம்

வவுனியா, கணேசபுரத்திலுள்ள தமிழ் பாடசாலை ஒன்றின் அதிபர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படுகாயமடைந்த பாடசாலை அதிபர் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# இலங்கைத் தமிழரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலே பரிதாபமாக பச்சைக் குழந்தைகளோடு நடுத்தெருவில் நிற்கிறார்களே! அந்த இலங்கைத் தமிழர்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற பிரச்சினை.

ஒவ்வொரு கணமும் தமிழனின் பிணம் இலங்கையில் விழுந்துகொண்டிருக்கிறது

ஆனால், மத்திய அரசு நாம் விரும்புகின்ற அவசரத்துக்கு, நாம் படுகின்ற வேதனையைத் துடைக்கின்ற அளவுக்கு வேகமான முடிவு எடுக்காமல் இன்னும்... இன்னும்.... தாமதிக்கின்ற காரணத்தால் தாமதிக்கின்ற ஒவ்வொரு வினாடியும் ஒரு தமிழனுடைய பிணம் இலங்கை வீதியிலே விழுந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது என்பதை மாத்திரம் நான் இந்த பொதுக்குழுவிலே கண்கலங்க வேண்டுகோளாக டில்லிக்கு விடுக்க விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர் நலனுக்காக உயிரைத் துறக்கவும் நான் தயார்.

அதற்காக வன்முறை வழியில், பலாத்கார வழியில், நாட்டுக்கு விரோதமான வழியில், தேசத்துக்கு பகையான வழியில் செல்ல நாம் விரும்பவில்லை.

இது விடயமாக பிரதமர் மன்மோகன்சிங்கிடம் முறையிட்ட போது அவர் எங்களுக்கு தந்த வாக்குறுதி பிரணாப் முகர்ஜியை விரைவில் இலங்கைக்கு அனுப்பி போர் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.

அந்த வாக்குறுதியை பிரதமர் நிறை வேற்றுவார் என்று நாம் நம்புகின்றோம்; இன்னமும் காத்திருக்கின்றோம்; செய்வார் என்று கருதியிருக்கின்றோம். அந்த வாக்குறுதியை வலியுறுத்தியே இந்த தீர்மானம் போடப்பட்டுள்ளது. எனவே, இந்த பொதுக் குழு தீர்மானத்துக்கு மதிப்பளித்து மத்திய அரசு அதனைநிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு சாதனைகளை செய்திருக்கின்றது. அந்த வரிசையில் இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களையும் சாதனையையும் செய்து முடிக்க வேண்டும்.

இன்று இலங்கையில் தமிழர்கள் போர் காரணமாக இன்னமும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இதனால் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் வாழும் கோடிக் கணக்கான தமிழர்கள் மனதில் ரணம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் ரணத்தை ஆற்ற வேண்டிய பொறுப்பு, அவர்களின் புண்ணுக்கு மருந்து போட வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உண்டு என்று நான் உருக்கமான வேண்கோளை விடுக்கின்றேன்.

இந்தக் கோரிக்கையை ஏற்று இலங் கைத் தமிழர்களை மத்திய அரசு காப்பாற்ற வேண் டும். இதற்காக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் என்று மத்திய அரசை மிகமிக பணிவாகவும் மிகமிக உரிமை யோடும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதன் பிறகாவது மத்திய அரசு மனம் இறங்கி இலங்கையில்போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நிறை வேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களில் இதனையே முக்கிய தீர்மான மாகச கருதி மத்திய அரசு தக்க நவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் கருணாநிதி. (அ-2)

# விருதலைப்புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகலில் நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதலின் போது படகுகளை நவீனப்படுத்தும் தளம் ஒன்றும் இலக்கு வைக்கப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியை நோக்கி முன்னேறும் படையினருக்கு ஒத்துழைப்பாக நேற்றுக்காலை 9.30 மணிக்கு இரணைமடுவுக்கு மேற்கே புலிகளின் உறுப் பினர்கள் ஒன்று கூடும் தளம் ஒன்றை இலக்கு வைத்து விமானத் தாக்குதல் நடத் தப்பட்டதாகவும் அவர் கூறினார். (அ-ரி)

# புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் அளம்பிலைச் சேர்ந்த குமாரசிங்கம் மரியராணி (வயது-45) மற்றும் மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனி அப்பன் (வயது - 32) ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# இயக்கச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதுடன் மக்களின் வீடுகள் பல சேதமடைந்துள்ளன.சண்முகப்பிரியா (வயது46), விக்கினேஸ் வரன்(வயது32),சதீஸ்குமார் (வயது 23), துரைச்சாமி (வயது57), சத்தியபாமா (வயது32), தெய்வேந்திரன் (வயது 29), விக்கினபாலன் (வயது 32), தவராசா (வயது24) ஆகியோரே படுகாய மடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழீழ விருதலைப்புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1948 ஆம் ஆண்டு பிரித்தானியர்கள் தமிழீழத்தை விட்டு வெளியேறுகிற போது தமிழீழத்தின் இறையாண்மை தமிழீழ மக்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த இறையாண்மை இலங்கை தீவில் பெரும் பான்மையினராக இருந்த சிங்களவர் கையில் ஒப்படைக்கப்பட்டது.

தமிழீழத்தின் இறையாண்மை சிங்களவரிடம் இருந்து தமிழர் கையில் ஒப்படைக்கப்படவேண்டும். தமிழீழ தேசிய இனத்தின் இறையாண்மையை தமிழர் மீண்டும் பெற தமிழீழ மக்களுக்கு அதன் வழி நிலையான உறுதியான அமைதி வாழ்வு கிடைக்க, இந்திய அரசும் உலக நாடுகளின் அரசுகளும் தமிழீழ விடுதலைக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும்.

அமைந்தகரை புல்லா அவன்யுவில் நடைபெற்ற இம் மாநாட்டுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமைவகித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி, கவிஞர் காசி ஆனந்தன், திராவிட இயக்க தமிழக பேரவை பொதுச் செயலாளர் சு.ப.வீரபாண்டியன், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நடிகர் மன்சூர் அலிகான் உட்பட ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**இலங்கைக்கு தமிழர் ஒருவரை தூதுவராக நியமிக்க வேண்டும்**

இந் நிகழ்வில் கலந்து கொண்ட பா.ம.க. தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜி.கே. மணி தமது உரையில் தெரிவித்ததாவது:

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக இந்த இளைஞர் பாசறை செயற்பட வேண்டும். இலங்கையில் தமிழர்கள் படும் துயரத்தை உணர்ந்து கொண்டு சிறிலங்கா அரசுக்கு எடுத்துக் கூறும் வகையில் தமிழர் ஒருவரை இந்தியத் தூதுவராக அமர்த்த வேண்டும். தமிழீழத்தை அங்கீகரிக்க இந்திய அரசு முன்வரவேண்டும். கடந்த ஆண்டில் மட்டும் 700 முறை தமிழர்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் குண்டுகள் வீசியுள்ளது. ஒரு நாளைக்கு 1,000 தொன் குண்டுகள் வீசப்பட்டு அப்பாவித் தமிழர்கள் தவித்து வருகின்றனர் - என்றார்.

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பேசுகையில்-

இம் மாநாட்டை நடத்துவதற்காகக் காவல் துறை கெடுபிடி செய்தது. எங்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. என்னை கைது செய்ய வேண்டும் என்று கூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது. காங்கிரசுக்கும், தி.மு.க.வுக்கும் முரண்பாட்டை உருவாக்க விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை பகடைக் காயாகப் பயன்படுத்த முயல்கிறது - என்று கூறினார். (அ)

# கிளிநொச்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியை கைவிடுவதாக இல்லை. இப்போது கிளிநொச்சி நகரம் மீதும் மற் றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் மீதும் பெரும் எடுப்பிலான வான்தாக்கு தலை முடுக்கியுள்ளது. வானூர்திகளின் பேரிரைச்சலும் அவை போடும் குண்டுகளின் வெடிச் சத்தங்களும் காயமடையும் மக்களின் அவலக்குரலுமாக வன்னிப் பகுதி காட்சியளிக்கின்றது.

*கே:* பலத்த இழப்புக்களுக்கு மத்தியிலும் கிளிநொச்சி நோக்கி சிறிலங்கா இரா ணுவம் முன்னேறி வருவது இராணுவம் பலமடைந்து விட்டது என்பதைக் காட்டு கின்றதா?

*ப:* கணிசமான நிலங்களை சிங்களப் படைகள் ஆக்கிரமித்திருகின்றன என்பது எவ்வளவு உண்மையோ அந்தளவுக்கு அகலக்கால் வைத்து சிங்களப்படைகள் பலவீனம் அடைந்திருக்கின்றன என்பதும் உண்மையாகும். ஒரு விடுதலை இயக்கத்தின் பலம் என்பது அது வைத்திருக்கும் நிலப் பரப்பு என்பதை விட அதனிடம்இருக்கும் படைபலம் தான். எனவே தான் நெருக்கடிகள் ஏற்படும்பொழுது நிலத்தை விட்டுக் கொடுத்து படை பலத்தை தக்க வைத்துக் கொள்வதை ஒரு மரபாக விடுதலை இயக்கங்கள் கொண் டிருக்கிறன. 'ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரையும் வாடியிருக்குமாம் கொக்கு' என்பது போல ஒரு நாள் புலிகள் இயக்கம் தனது பாரிய தாக்குதலை தொடுக்கும் போது இழக்கப்பட்ட இந்த நிலங்கள் ஓரிரு நாள்களில் புலிகள் வசமாகும். இப்போது இங்கே நடக்கும் போர் மக்கள் போர் என்ற வடிவில் தான் நிகழ்ந்து வருகிறது. மக்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் போர்க் கடமைகளை இங்கு ஆற்றி வருகின்றனர்.

*கே:* தமிழக அரசியல் தலைவர்கள் இந்தியப்பிரதமரைச் சந்தித்த பிறகு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதாக முடிவானது. பிரணாப் முகர்ஜியின் வருகை ஏதாவது மாற்றத்தை உருவாக்குமா?

*ப:* இந்தியா ஒரு பலமான நாடு மட்டுமல்ல இந்தப் பிராந்தியத்தின் வல்ல ரசுமாகும். இந்திய மத்திய அரசு நினைத்தால் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பிரணாப் முகர்ஜி ஊடாக பயன்படுத்தி போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, அரசியல் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான புறச்சூழல் ஒன்றை உருவாக்க முடியும். இந்தப் பிராந்தியத்தின் பெரு அரசு என்ற வகையில் இதைச் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு என்பதும் எல்லோரது எதிர்பார்ப்பு ஆகும்.

*கே:* புலிகளின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு என்னவாக இருக்கும்?

நாம் உலகின் சகல நாடுகளிடமும் அரசியல் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த விரும்புகிறோம். குறிப்பாக இந்திய அரசுடனும் எமது நட்புறவைமீளக்கட்டியெழுப்ப விரும்புகின்றோம் - என்று அதில் தெரிவித்துள்ளார். (அ-02)

பாராட்டி வாழ்த்துகிறோம்
யா/மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக நியமனம் பெற்ற மட்டுவில் தெற்கு வளர்மதி கல்வி நிலைய இயக்குநர்
திருமிகு ச. கிருஷ்ணன்
அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
வாழ்த்துவோர்: வளர்மதி கல்வி நிலைய ஆசிரியர்கள்.

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
32 ஆவது வருட கல்விச் சேவையில் எமது தனித்துவமான ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவையில்
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L2011 ஆரம்பம் - ஜனவரி 3 8மணி

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!
* Beginners Diploma in Information Communication Technology (A/L GIT Syllabus, WITH PASCAL & INFORMATION SYSTEM)
* Diploma in computer Hardware servicing Technician (With Electronic)
* Diploma in Desktop Publishing
* Diploma in Mobile Phone Repairing
* Certificate in Internet & e mail
மிகக்குறைந்த பயிற்சிக் கட்டணம்
சர்வதேச தரம் வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
உங்கள் பதிவுகளை 30/12/2008 முன்னர் மேற்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்கு UNI TECHNOLOGY ICT Education Trainers Manipay. T.P.No:- 060 - 221 - 6433

SPOKEN ENGLISH & GRAMMAR
அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
O/L எடுத்த மாணவர்களுக்கான விசேட வகுப்பு
காலம்-2 மாதங்கள் (தினசரி 2 Hrs-Weekdays)
ஆரம்பம்- 29.12.2008 (பிரிவு -II 8 a.m.)
BY:Mr.B.Ruban(A/L English Tecaher&BBA)
நிரு ரியூசன்சென்ரர், கோண்டாவில்.

BIT/ DBF வகுப்புகள்
BIT-1ST SEMESTER - Sat., Sun. - 12 - 2 p.m.
BIT-3rd SEMESTER - Sat., Sun. - 09 - 11 a.m.
DBF -Sat., Sun.- 7-8 a.m.
BY: R.Kumaran B.Sc.
74,Sabapathy Lane, Jaffna
T.P.: 0602216083

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
REPEAT CLASSES
இரசாயனவியல் PHYSICAL
அலகு ரீதியான மீட்டல் -Mon., Tue., Thu. (2.30-4.00)
Sat. Sun. - 8.00 - 9.30
DIAS B.Sc.(Hons) Spl. in Chem.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
பௌதிகவியல் 2011 A/L
ஆரம்பம்-29.12.2008 (திங்கள்)
Mon., Fri.- (4.30-5.30)p.m.
வழமையான ஆசிரியர்

கணனிப் பயிற்சி TP:0779672038
Laptop மூலமாக அனைத்துக் கற்கைநெறிகளும் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பித்துக்கொடுக்கப்படும்.
*Diploma In Ms Office - 1 Month
*Diploma In DTP - 1 Month
Internet & E-mail - 1 Week
(Nallur, Jaffna.)
சிறுவர்கள்,மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோர் அனைவரும் பயன்பெறலாம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 01/04.01.2009
PJ-CORNER in BIIT
BRILLIANT INFORMATIVE OF INFORMATION TECHNOLOGY
கணினிக் கற்கைநெறிகள்.
Diploma in Computerizes Accounting (Tally-9, Patch Tree, Quick Book)
Diploma in Multi Media Tech (Vedio editing, Audio editing, Graphics designing)
Diploma in Vedio Editing (Pinnacle studio, Photoshop, BT,3D Album,Cool 3D,Premmier)
Diploma in Web Designing (HTML,CSS,Java script,PHP,Frontpage,Flash-8)
Diploma in Hardware (Fully Practical)
Diploma in Internet & Email
Diploma in MS-Office
Diploma in Graphics Designing (Fully Practical)
Programming (Java,VB 6, VB.NET 2003)
புதிய பிரிவுகள் ஆரம்பம் @01.01.2009 @04.01.2009
ஆவரங்கால் சந்தி , ஆவரங்கால் 0776172740
The Village Campus.

" உதயன் " மக்கள் மனம் நிறைந்தது. "DMI" மாணவர் மனம் நிறைந்தது."
DMI (கலை, வர்த்தகப் பிரிவுகள்) A/L 2011 ஜனவரி - 10 காலை 9.00 மணி
நாவலர் வீதி, யாழ்.
DMI ஸ்ரான்லி வீதி, யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.